# தமிழரசு





1-7-1981
50 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2012
துன்மதி ஆனி 17









# தமிழ் வளர்ச்
# விழா

கலைவாணர் அரங்கம்

சென்னை

6-6-1981








# ஒரே சிந்தனை

## மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர்.

சமீபத்தில் பிளஸ் 'டூ' பரீட்சை முடிவுகள் வந்தன. அதில் 60 சதவீதம் பெண்கள் தேறியிருக் கிறார்கள். பெண்களுக்குச் சம உரிமை வேண்டுமென்று கேட்டு ஆண்கள் போராடினோம். இன்று ஆண்களுக்குச் சம உரிமை கொடுக்க வேண்டும் என்பதற்காக பெண்கள் போராட் டம் நடத்தும் நிலை வந்துவிடும் போல இருக்கிறது.

அந்த அளவுக்கு பிளஸ் 'டூ' பரீட்சையில் பெண்கள் அதிக அளவில் தேர்வு பெற்றிருக் கிறார்கள். பெண்கள் படித்தே ஆகவேண்டும். ஆண்களும் படித் தாக வேண்டும். எதிர்காலம் இந்த இருதரப்பினர் கையிலும் உள்ளது.

பெண்களுக்குச் சமமாக ஆண் கள் இருக்க வேண்டும். பெண் களுக்கு எதை வேண்டுமா னாலும் விட்டுக் கொடுக்கலாம்! பணமா, பதவியா, எதையும் விட்டுக் கொடுக்கலாம்.

ஆனால் கல்வியில் போட்டி போட்டு ஆண்களும் அவர் களுக்குச் சமமாக வந்தாக வேண்டும். படிக்கின்றவர் களுக்கு அதே சிந்தனைதான் இருக்க வேண்டும்.

(சேலத்தில் ஆற்றிய உரையி லிருந்து-14-6-81)







தமிழரசு

மலர் 12 இதழ் 1

1.7.1981

திருவள்ளுவர் ஆண்டு 2012

துன்மதி ஆனி 17

# மாணவ மணிகள்

ஆண்மையில் வெளியிடப்பட்ட மேல் நிலைப்பள்ளித் தேர்வு முடிவுகள் 'ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பில்லை காண்' என்கிற பாட்டுப் புலவன் பாரதியின் சொல் அலங்காரத்தை மெய்ப்பிப்பதாக அமைந்திருந்தது. கல்வி சிறந்த தமிழ் நாட்டில், பிளஸ் 2 தேர்வில் 61 சதவிகிதம் பேர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

தேர்வு எழுதியோர் எண்ணிக்கை 1,45,974 ஆகும்.

வெற்றிப் பட்டியலைச் சிறிதே ஆழ்ந்து பார்ப்போமானால் ஆண்களைவிடப் பெண்களே-அதாவது மாணவர்களை விட மாணவியரே பெரிதும் வெற்றி கண்டிருக்கிறார்கள் என்பது புலனாகிறது.

மாணவியர், பொது மற்றும் தொழில் கல்வியில் (General and Vocational) 67 சதவிகிதம் பேர் வெற்றிவாகை சூடியுள்ளனர்.

மாணவர்களிலோ 59 சதவிகிதம் பேர் மட்டுமே வெற்றிகண்டிருக்கிறார்கள்.

இருசார்பிலும், மொத்தத்தில் 60 சதவிகிதத்திற்கும் மேல் மதிப்பெண்கள் பெற்றுள்ளோர் 39,091 பேர்களாவர்.



கே. நாராயணன்

அட்டை சொல்லும் செய்தி....

ஆனால் ஒரு வகையில் மாணவர்கள் பெரிதும் பெருமைப்பட்டுக்கொள்ளலாம்; அவ்வளவு மாணவ மாணவியரிலும், தமிழ்நாட்டிலேயே அதிக மதிப்பெண்கள் பெற்று முதலாவது நபராகத் தேர்ச்சி பெற்றவர்—சென்னை எழும்பூரில் உள்ள டான்பாஸ்கோ பள்ளி மாணவரான திரு. கே. நாராயணன்.

17 வயது மாணவரான இவர், மொத்த மதிப்பெண் 1200க்கு 1123 பெற்று பெரு வெற்றி கண்டிருக்கிறார்.

ஐதராபாத்தில் உள்ள 'ஸ்டேட் பேங்கில் தணிக்கையாளராக (ஆடிட்டர்) பணியாற்றும் திரு ஏ.என். கிருட்டிணமூர்த்தி-சாந்தா தம்பதியருக்குப் பிறந்த இவருடைய சகோதரி இந்திரா, அமெரிக்காவில் உள்ள யேல் பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர். அவர் கொடுத்த ஊக்கமும், தனக்குள்ள தெய்வபக்தியுமே தன்னுடைய இந்த முதன்மைக்குக் காரணம் என்கிறார் திரு, கே. நாராயணன்.

இவரது இன்னொரு சகோதரி பெயர் சந்திரிகா. இரண்டு சகோதரிகளுமே அமெரிக்காவில்தான் வசித்து வருகிறார்கள். தானும், யேல் பல்கலைக் கழகத்திற்கே படிக்கச்செல்ல இருப்பதாகப் பெருமிதத்தோடு சொல்லிக் கொள்ளும் திரு கே. நாராயணன் பெற்ற மதிப்பெண்கள் விவரம் வருமாறு:

ஆங்கிலம் 185, ஃபிரஞ்சு 172, கணிதம் 200, பௌதிகம் 196, இரசாயனம் 195, வணிகவியல் 175.

ஆக மொத்த மதிப்பெண்கள்: 1123



மீரா பாய்

+2 தேர்வில், திரு கே. நாராயணனுக்கு அடுத்தபடியாக இரண்டாவது அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள் செல்வி மீரா பாய், செல்வி ஜெயஸ்ரீ நாகராஜன் ஆகிய இரண்டு பேர்களாவர்.

இருவருமே, 1200 என்கிற மொத்த மதிப்பெண்ணில் ஒரே மாதிரியாக 1114மதிப்பெண்களைப் பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

17 வயது மாணவியான செல்வி மீரா பாய் சென்னையிலுள்ள ராஜா அண்ணாமலை புரம் செயின்ட் அந்தோனி பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் படித்தவராவார்.

கட்டடப் பொறியியல் வல்லுநரான திரு ராஜகோபால் ராவ்—அனுசூயா தம்பதியருக்குப் பிறந்தவரான செல்வி மீராபாயிக்கு லதா, புஷ்பா என்ற இரண்டு சகோதரிகளும், பாலகிருஷ்ணன் என்கிற ஒரு தம்பியும்உண்டு.

'M.B.A.' படிக்கப் பெரிதும் ஆர்வத்தோடிருப்பதாகத் தெரிவிக்கும் செல்வி மீராபாய் பெற்ற மதிப்பெண்களின் விவரம் வருமாறு;

கணிதம் 200, விஞ்ஞானம் 193, வணிகவியல் 196, கணக்கியல் 196, ஆங்கிலம் 176, தமிழ் 172.

மொத்த மதிப்பெண்கள்: 1114



ஜெயஸ்ரீ நாகராஜன்

+2 தேர்வில் இரண்டாவதாக அதிக மதிப்பெண்கள் பெற்ற இன்னொரு மாணவி செல்வி ஜெயஸ்ரீ நாகராஜன்.

'மவுண்ட் மேட்டூர் பார்மசூட்டிகல்ஸ்' என்ற நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக உள்ள திரு ஆர். நாகராஜன்-திருமதி வசந்தா தம்பதியருக்குப் பிறந்தவரான இவர் சாந்தோமில் உள்ள ரோசரி மெட்ரிகுலேஷன் மேல் நிலைப் பள்ளியின் மாணவியாவார்.

17 வயதுடைய இவர், எதிர்காலத்தில் மருத்துவத்துறையில் படித்துப் பார் புகழ விளங்கவேண்டுமென ஆசைப்படுகிறார். ராம் நாத் என்கிற இவரது ஒரே தம்பி இப்போது பத்தாம் வகுப்பு மாணவன்.,

முந்திய இருவரும் 'நாங்கள் இந்த வெற்றியை எதிர்பார்த்தோம்' என்று சொல்லிக் கொண்டாலும்—'இது எதிர்பாராதது' என்று இவர் மட்டுமே நம்மிடம் சொல்லிக் கொண்டார்.

செல்வி ஜெயஸ்ரீ நாகராஜன் பெற்ற மதிப்பெண்கள் பற்றிய விவரம் வருமாறு:

கணிதம் 198, பௌதிகம் 190, இரசாயனம் 194, உயிரியல் 187, ஆங்கிலம் 176, தமிழ் 169

இவர் பெற்ற மொத்த மதிப்பெண்கள் 1114.

— பி. எல். இராஜேந்திரன்

# பன்னிரண்டாவது ஆண்டில்....

தமிழ்நாடு அரசின் ஆக்கப்பணிகளைப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லி வரும் 'தமிழரசு' பதினொரு ஆண்டுகள் நிறைவு பெற்று, பன்னிரண்டாம் ஆண்டில் தனது பணியினைத் தொடருகிறது.

பல புதிய பகுதிகளுடன் புதுமைப் பொலிவுடன் எல்லாரும் போற்றும் வகையில் பணியாற்றும் 'தமிழரசு' தழைத்தோங்கி வளர உதவிடும் அனைவருக்கும் நன்றி!

வணக்கம்.

# தமிழ் வளர்ச்சி விழா

1973-1974ல் வெளியிடப்பட்ட நூல்களுள் சிறந்தவற்றைத் தமிழ் வளர்ச்சித் துறை தேர்ந்தெடுத்து, 6-6-81-ல் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற தமிழ்வளர்ச்சி விழாவில் பரிசளித்தது.

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமை ஏற்க, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் ஆகியோர் பரிசுகளை வழங்கினர். மொத்தம் 23 எழுத்தாளர்கள் இப்பரிசுகளைப் பெற்றனர். பரிசு பெற்றோர் விவரம் வருமாறு :

## முதற் பரிசு பெற்றோர் ரூ. 2,000.

| நூலின் பெயர் | நூலாசிரியர் |
|---|---|
| பனித் துளிகள் (கவிதை) | கவிஞர் முருகுசுந்தரம் |
| இன்று புதிதாய்ப் பிறந்தோம் (நாவல்) | வையவன் |
| சைனரின் தமிழ் இலக்கண நன்கொடை (மொழி, இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள்) | டாக்டர் கு.ப.அறவாணன் |
| Folklore of Tamil Nadu (தமிழ், தமிழ்ப் பண்பாடு பற்றிப் பிற மொழிகளில் வந்துள்ளவை) | எஸ். எம். எல். இலக்குமணன் |
| சரபேந்திர சித்த மருத்துவச் சுடர் (மருத்துவம், உடலியல் உணவியல், நல்வாழ்வு) | டாக்டர் மூ. சௌரிராசன் |
| ஒரு பாரத புத்திரன் (சிறுகதை) | ஜெகசிற்பியன் |
| எள்ளல் நாடகங்கள் (நாடகம்) | டாக்டர் ஆறு. அழகப்பன் |
| எனது போராட்டம் (கட்டுரை, வாழ்க்கை, வரலாறு, சுயசரிதை, பயண நூல்கள்) | சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் |
| தாவரவியல் வரலாறு (தாவரவியல் விலங்கியல், உயிரியல, புவியியல், காட்டியல்) | கே. ஆர். பாலச்சந்திரகணேசன் |
| கொங்குநாட்டு வரலாறு (வரலாறு, தொல் பொருளியியல்) | மயிலை சீனி. வேங்கடசாமி |
| பயிர் நோய்கள் (வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கால்நடை மருத்துவம்) | எஸ். பி. கோவிந்தசாமி; எம். என். அழகிய நாகலிங்கம். |
| கல்எண்ணெயின் கதை (குழந்தை இலக்கியம்) | என். கே. வேலன் |

## இரண்டாம் பரிசு பெற்றோர் ரூ. 1,000.

| நூலின் பெயர் | நூலாசிரியர் |
|---|---|
| ஐரோப்பா (கவிதை) | கவிஞர் அரு. சோமசுந்தரம் |
| மணக்கும் மணம் (நாவல்) | கே. செயலட்சுமி |
| சுதந்திர பூமி (நாவல்) | இந்திரா பார்த்தசாரதி |
| தேசியம் வளர்த்த தமிழ் (மொழி இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள்) | கா. திரவியம் |
| தேரையர் மகா கரிசல் (மருத்துவம், உடலியல், உணவியல் ,நல்வாழ்வு) | டாக்டர் ஆர். தியாகராசன் |
| கோவியின் கதைகள் (சிறுகதை) | டாக்டர் கோவி. மணிசேகரன் |
| அக்னி சாட்சியாக (நாடகம்) | காவிரி நாடன் |
| பேரறிஞர் அண்ணாவின் பெருவாழ்வு (கட்டுரை, வாழ்க்கை வரலாறு, சுயசரிதை, பயண நூல்) | மறைமலையான் |
| காட்டு வளம் (தாவரவியல், விலங்கியல், புவியியல், உயிரியல், காட்டியல்) | அஞ்சனம் அழகியனார் |
| யாவரும் கேளிர் (வரலாறு, தொல் பொருளியல்) | டாக்டர் இரா. நாகசாமி |
| மூவேந்தர் கதை (குழந்தை இலக்கியம்) | பூவண்ணன் |

# மூன்று சலுகைகள்

எந்தப் பளளியிலும் படிக்காமல், தனிப்பட்ட மாணவர்களாக, 14 வயது பூர்த்தி செய்திருப்பின், எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதலாம் என 1979-80-ஆம் ஆண்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

எட்டாம வகுப்பு தேறிய மாணவ, மாணவியர் 16 வயது நிரம்பி இருந்தால், தனிப்படிப்பாக பள்ளி இடைநிலைக் கல்வி எஸ்.எஸ்.எல்.சி., பொதுத் தேர்வு எழுதலாம் என ஆணை வழங்கப்பட்டது. இச்சலுகை, பிற மாநிலங்களில் படித்திருப்பினும், தமிழ்நாட்டில் தங்கி வசிப்பவர்கட்கும் பொருந்தும் என விரிவாக்கப்பட்டது.

18 வயது நிரம்பிய மாணவ, மாணவியர்கள் இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு (பத்தாம் வகுப்பு) பொதுத் தேர்வில் வெற்றி பெற்றிருப்பின், தனிப் படிப்பாக, மேல்நிலைப் பள்ளித் தேர்வு எழுத அனுமதித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

# மக்களை நேசித்த பெருமகன்...

மு. நமசிவாயம்



படிப்பு, படிப்பு. அனைவருக்கும படிப்பு-இலவசப் படிப்பு என்று எண்ணி, அதற்கேற்ற செயல் திட்டம் வகுத்தவர் பெருந்தலைவர் காமராஜ் என்பது நாடறிந்த செய்தியாகும்.

இலவசக் கல்வித் திட்டத்திற்கு வித்திட்டு, அதனை வளர்த்திட மதிய உணவுத் திட்டம் பள்ளிச் சீரமைப்பு முதலிய பாதுகாப்புகளையும் செய்திட்ட காமராஜ் செய்த தொண்டு மகத்தானது.

ஆண்டாண்டுக் காலமாகக் கல்வி அறவே தேவையில்லை எனத் தாமே படிப்பது பற்றிக் கவலைப்படாமல் வாழ்ந்து வந்த தமிழ்ச் சமுதாயத்தின் மிகப் பெரும் பகுதியினரைக் கல்வி கற்கும்படி தூண்டித் தூண்டிப் படிக்க வைத்தவர் காமராஜ்!

இன்று படித்தோர் தொகை பெருகிவிட்டது. மேலும் மேலும் படிப்போர் தொகை நாளும் நாளும் பெருகியபடியே உள்ளது. ''இட நெருக்கடி'' இல்லாப் பள்ளிகளே இல்லை எனும் அளவுக்குக் ''கல்வி நீரோடை'' நாடெல்லாம் பாய்ந்தோடிக் கொண்டிருக்கிறது.

பள்ளிகளைத் தேடி ஐந்து மைல் - பத்து மைல் என்று மாணவர்கள் சிரமப்பட்டுச் சென்ற அந்தக் காலம் மலையேறிவிட்டது. இன்று ''ஊர்தோறும் பள்ளி, நகரெங்கும் கல்லூரிகள்'' எனக் கல்விச் செல்வம் மாணவர்களைத் தேடிச் செல்லும் காலம் வந்துவிட்டது.

சாமானியர் - பெரும் படிப்புப் படியாதவர் எனக் கருதப்பட்ட காமராஜ் காலத்தில்தான் பள்ளிகள் நிரம்பத் திறக்கப்பட்டன. படித்திடும் ஆர்வம் செழித்துக் கொழித்தது. இன்றும் அமோகமாகத் தொடர்கின்றது.

''நமக்குப் படிப்பு வருமா? நமக்கேன் படிப்பு?'' என்று தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொண்டு வாழ்ந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பினார் காமராஜ்.

மனிதர்களுக்குள்ளே அதிலும் மாணவப் பருவத்தினராகிய குழந்தைகளுக்குள்ளே அறிவிலும் திறமையிலும் வித்தியாசம் கிடையாது. மனிதனது பிறப்பில் வேறுபாடு எப்படி இல்லையோ அப்படித்தான், அறிவும் ஆற்றலும் என்பதை அடிக்கடி வலியுறுத்திப் பேசிப் பரப்பினார். அதுமட்டுமல்ல—

''பிறந்த பிறகு மேல்சாதி, கீழ்ச்சாதி என்று யாரோ எப்படி எப்படியோ கற்பித்தாலும் மனிதப் பிறவிக்குள்ள மதிப்பைக் குறைக்கவோ மறைக்கவோ யாராலும் முடியாது. முடிவதும் இல்லை. காலம் மாறிவிட்டது. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சமவாய்ப்பும் கிடைத்தால் எந்த உயர்வும் தாழ்வும் யாருடைய முன்னேற்றத்தையும் தடைப்படுத்தவே முடியாது.''

என்பது காமராஜரின் திருவாசகங்களாகும். அளவுக்கு மீறி அனைவரும் படித்துவிடுவதால் ஏற்படும் சில பல எதிர்காலப் பிரச்சினைகளைப் பற்றியும் காமராஜர் அன்றே தீர்க்க தரிசனத்தோடு உணர்ந்தார்.

''இலவசக் கல்விப் பெருக்கினாலும், படிக்கும் ஆர்வச் செழிப்பினாலும் வருங்காலத்தில் பல படித்த இளைஞர்கள் வேலையில்லாமல் இருப்பார்கள். இது ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுக்கும். விவசாயம், மற்றும் பல்வகைத் தொழில்கள் ஆகியவற்றை ஊக்குவித்து நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டாலொழிய, நம்மால் இந்தப் பிரச்சினையை (படித்தோரின் வேலையில்லாத் திண்டாட்டம்) தீர்க்க முடியாது'' என்று காமராஜ் 1965-இல் எச்சரித்தார்.

படிப்பு, அதன் மூலம் எதிர்காலத்தில் படித்த-இளைஞர்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளைப் பற்றி எச்சரித்த காமராஜ் வேறு சில மனிதாபிமானத் திட்டங்களையும் நாட்டுக்கு அளித்துள்ளார்.

''வயோதிக காலத்திலோ வேலை செய்ய இயலாது போய்விடும் சமயத்திலோ, ''நம் கதி என்ன?'' என்ற பயம் மக்களுக்கு இருக்கிறது. இப்படிப்பட்ட பயத்தைப் போக்க முயற்சிக்க வேண்டும்'' என்று 1964 ஆம் ஆண்டிலேயே காமராஜ் தெளிவாக வலியுறுத்தினார்.

மேலே குறிப்பிட்ட, இயலாத நிலையில் உள்ள வயோதிக மக்களுக்காக, ''முதியோர் பென்ஷன்'', முறையை தமிழகத்தில் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதே ஆரம்பித்து வைத்திருந்தார். இதனை வேறு சில மாநிலங்களும் பின்பற்றத் தொடங்கின.



''முதியவர்களுக்குப் பென்ஷனாக மாதம் இருபது ரூபாய் அளிக்கப்பட்டு வருகிறது. இது ஆரம்பம்தான் இதனை மேலும் விரிவான முறையில் தாராளமான அடிப்படையில் விஸ்தரித்தாக வேண்டும். சொல்லப்போனால் - அதிக வயதாகி விட்டவர்களையும், வேலை செய்ய இயலாது போய்விட்டவர்களையும் அரசாங்கமே பராமரித்து வர வேண்டும்'' என்றும் கருத்துத் தெரிவித்தார்.

காமராஜின் அரிய கருத்துக்கு பெருந்தலைவர் காமராஜரது அடிச்சுவட்டில் ஆட்சி நடாத்தி வரும், இன்றைய தமிழக அரசு, செயல் வடிவம் கொடுத்து வருகிறது.

காமராஜரின் காலத்தில் 1962-ல் தொடங்கப்பட்ட முதியோர் பென்ஷன் தொகை 1979-ஆம் ஆண்டிலேயே மாதம் ரூபாய் இருபத்து ஐந்தாக உயர்த்தப்பட்டாகி விட்டது. அது மட்டுமல்ல, இயலாத முதியவர்களுக்கு ஆண்டுதோறும், வேட்டிகள் அல்லது புடவைகளையும் இலவசமாகத் தொடர்ந்து அரசு அளித்து வருகின்றது. இப்போது 1980ஆம் ஆண்டு முதல், இயலாத எளியவர் மற்றும் சில குறிப்பிட்டவர்களுக்கும், ''வாரந்தோறும் ஒரு கிலோ அரிசி'' வீதம் மாதா மாதம் நான்கு கிலோ அரிசி இலவசமாகத் தரப்பட்டு வருகின்றது.

காமராஜரின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடும் தமிழக அரசு அவரது எண்ணத்தையும் செயல்படுத்தும் செயலரசாக உள்ளது!

மக்களை நேசித்து, மக்கள் மனம் நிறைந்த பெருமகன் காமராஜ்!

---

## எழுத்தாளர்களும், நூல்களும்

எழுத்தாளர்களால் பெரிதும், பாராட்டப்பட்ட பாலகங்காதர திலகரின் ''கீதா ரகசியம்'' என்ற நூலை எழுதுவதற்குத் துணைபுரிந்த நூல்களின் எண்ணிக்கை 320.

பிஷப் பட்லர் 'அனலஜி' என்னும் நூலை எழுதி முடிப்பதற்கு இருபது ஆண்டுகள் தேவைப்பட்டன.

கோபர்னிகஸ் தம் ஆராய்ச்சி நூலை எழுதி முடிக்க எடுத்துக்கொண்ட காலம் முப்பது வருடம்.

ஆடம்ஸ்மித் தமது 'நாடுகளின் செல்வம்' என்னும் நூலைத் திட்டி முடிக்கப் பதினேழு ஆண்டுகள் ஆயின.

காரல் மார்க்ஸ் 'மூலதனம்' என்னும் ஒப்பற்ற நூலினைத் திட்டி முடிக்கச் செலவிட்ட காலம் பதினெட்டு ஆண்டுகள்.

டால்ஸ்டாய் ''போரும் அமைதியும்'' என்னும் நவீனத்தை உருவாக்கி முடிக்க ஏழு ஆண்டுகள் ஆயின.

கிப்பனுக்கு ''ரோமப் பேரரசின் வீழ்ச்சியும் சரிவும்'' என்ற நூலை எழுதி முடிக்க இருபது ஆண்டுகள் பிடித்தன.

—வ. இரவிச்சந்திரன்

---

### பகுதிநேர கைவினை ஆசிரியர்களுக்கு முழுநேர கைவினை ஆசிரியர்களாக பதவி உயர்வு

தனியார் மற்றும் அரசு நடுநிலைப் பள்ளிகளில் பகுதிநேர கைவினை ஆசிரியர்களாகப் பணிபுரியும் 250 ஆசிரியர்களின் பதவிகளை, முழுநேரப்பதவிகளாக்க தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது 1.6.81-ஆம் நாளிலிருந்து அல்லது பள்ளிகள் திறக்கப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

# கல்லூரிக் கல்வி நலம்

தமிழகத்தில் கல்லூரிக் கல்வியின் தரத்தினை உயர்த்துவதிலும், கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களின்பணி நிலைகளை மேம்படுத்துவதிலும் கல்லூரிக் கல்வித் துறை 1980-81ம் ஆண்டில் அதிக அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது. பள்ளிகளில் மேல்நிலைப் படிப்புகள் ஏற்படுத்தப்பட்டதன் விளைவாக கல்லூரிகளிலிருந்து புகுமுக வகுப்புகள் அகற்றப்பட்டன. இதனால் கல்லூரிகளில் இடவசதி ஏற்பட்டதால் புது வகுப்புகள் தொடங்கப்பட்டன. மேலும் மேல்நிலை படிப்பு மாணவர்கள் அதிக அளவில் கல்லூரிகளுக்குச் சேர வந்ததனால் அதற்குத் தகுந்தாற்போல் பட்ட வகுப்புகள் புதிதாக துவக்கப்பட்டன. 1980-81ல் 80 பட்டப் படிப்பு வகுப்புகளும், 53 பட்ட மேற்படிப்பு வகுப்புகளும் தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் தொடங்கப்பட்டன. தமிழகத்திலுள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை:



கலைக் கல்லூரிகள்—187 (51 அரசினர் மற்றும் 136 மானியம் பெறும் கல்லூரிகள்)

கல்வியியல் கல்லூரிகள்—23 (7 அரசினர் மற்றும் 16 மானியம் பெறும் கல்லூரிகள்)

கீழ்த்திசைக் கல்லூரிகள், விளையாட்டுக் கல்விக் கல்லூரிகள், இசைக் கல்லூரிகள் போன்றவை—23

கடந்த ஆண்டில் 13,000 ஆசிரியர்களும், 1,61,500 மாணவர்களும் கல்லூரிகளில் இருந்தனர்.



மானியம் பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோருக்கு மாதா மாதம் முழுமையாக சம்பளம் தரவேண்டும் என்ற முக்கிய காரணத்திற்காக 1.4.1980 முதல் நேரடிச் சம்பளப் பட்டுவாடாத் திட்டத்தினை கல்லூரி கல்வித் துறை ஏற்படுத்தியது. ஒவ்வொரு கல்லூரியும் சம்பள மானியத்தினைப் பெற்று 'அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் கணக்கில்' வைத்துப் பராமரிக்கும்.



ஒவ்வொரு ஊழியருக்கும் கொடுக்கப்பட வேண்டிய நிகர சம்பளம் அவரவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். இந்த நேரடிச் சம்பளப் பட்டுவாடாத் திட்டத்தினை ஐந்து துணைக் கல்லூரி கல்வி இயக்குநர் அலுவலகங்கள் செயல்படுத்துகின்றன.

இந்த வருடத்தில் 10 (ஏ) (1) விதியின் கீழ் நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியை ஒழுங்குபடுத்தச் சிறப்புத் தேர்வுகள் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் நடத்தப்பட்டன. 224 உதவிப் பேராசிரியர்களும், 160 பயிற்றுநர்களும் விளக்குநர்களும் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் தேர்வுசெய்யப்பட்டார்கள். அவர்களது பணி ஒழுங்குபடுத்தப்படும். கல்லூரிகளில் உபரியான ஆசிரியர்களின் பணி மாற்றுத் திட்டம் இவ்வருடம் நீடிக்கப்பட்டது. 397 ஆசிரியர்கள் வேறு கல்லூரிகளில் உள்ள காலியிடங்களுக்குப் பணிமாற்றப்பட்டனர். அரசு ஆசிரியர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 117 உபரி ஆசிரியர்கள் எம். ஃபில். படிப்புக்கு அனுப்பப்பட்டனர்.

பட்ட மேற்படிப்புப் படித்த பயிற்றுநர்களும், விளக்குநர்களும் மூன்று ஆண்டுகள் பணி முடித்தபின் 1.12.1977 முதல் உதவிப் பேராசிரியர்களாக பதவி உயர்த்தப்பட்டனர். 2,225 பயிற்றுநர்களும், விளக்குநர்களும் இத்திட்டத்தினால் பயனடைந்தனர். பத்து ஆண்டுகள் முறையாகப் பணி முடித்த உதவிப் பேராசிரியர்கள் 1.4.1980 முதல் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டனர். 561 உதவிப் பேராசிரியர்கள் இதுநாள் வரையில் இத்திட்டத்தின்கீழ் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

அரசு மானியம் பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் தற்போது அரசினர் கல்லூரி ஊழியர்களைப் போலவே முழு ஓய்வுச் சலுகைகள் பெறுகின்றனர். அவர்கள் ஓய்வு பெறும்போது பணிக் கொடை பெறவும் தகுதி வழங்கப் பட்டுள்ளது பணியிலிருக்கும்போது அகாலமாய் இறக்கும் ஊழியர்களின் குடும்பத்திற்கு 'கூட்டு ஆயுட் காப்புத் திட்டத்தின்' கீழ்கொடுக்கப்படும் ரூ 10,000 அரசு மானியம் பெறும் கல்லூரிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அரசுக் கல்லூரிஊழியர்களைப்போலவே விடுப்புச் சலுகைகளும் அவர்களுக்குத் தரப்படுகின்றன

## உடல் ஊனமுற்றோருக்கான மாதிரி ஆய்வு

### (ஜூலை - டிசம்பர், 1981)

தமிழ்நாடு அரசின் புள்ளி இயல் துறை, மத்திய அரசின் தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்துடன் இணைந்து, 1981-ஆம் ஆண்டு ஜூலை முதல் டிசம்பருக்குள் உடல் ஊனமுற்றோருக்கான மாதிரி ஆய்வு ஒன்றை நடத்தும். குருடு, செவிடு மற்றும் உடல் இயக்கக் குறை ஆகிய மூன்று முக்கிய உடல் ஊனங்களால் எழும் பிரச்சினைகளையும் இதற்கான காரணங்களையும், எந்த அளவுக்கு இத்தகைய ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அளிக்க முடியும் எனற விவரங்களையும் இந்த ஆய்வு தெளிவுபட விளக்கிக் காட்டும்.

உடல் ஊனமுற்றோரின் கல்வி விவரம் மற்ற நடவடிக்கைகள், பழக்க வழக்கங்கள் பற்றிய விவரங்கள் இந்த ஆய்வின் மூலம் சேகரிக்கப்படும். 5 முதல் 14 வயது வரையுள்ள சிறுவர்களின் வளர்ச்சிக் காலத்தில் உள்ள வெவ்வேறு முக்கியக் கட்டங்களைப் பற்றிய விவரங்களும் சேகரிக்கப்படும்.

புள்ளி இயல் துறையின் சிறந்த பயிற்சி பெற்ற பணியாளர்கள், கிராமங்களுக்கும் நகர்ப்புறங்களுக்கும் சென்று வீட்டுப் பட்டியல்களை தயாரித்து தொடர்ந்து விரிவான ஆய்வுப் பணிகளைத் துவக்குவார்கள்.

சமுதாயத்தின் ஓர் அங்கமான உடல் ஊனமுற்றோரின் உண்மை நிலையை உலகறியச் செய்ய நடத்தப்படும் இந்த 'மாதிரி ஆய்வு' முழு வெற்றி பெற மனமார்ந்த ஒத்துழைப்பை அளித்திட வேண்டுமெனப் பொது மக்களைப் புள்ளிஇயல் ஆணையர் விரும்பிக் கேட்டுக் கொள்கிறார்.



# தமிழகத்தில் கல்வி வளர்ச்சி

1981-82–ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 249 கோடி ரூபாய். இவ்வாண்டு தமிழக அரசின் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான 1138 கோடி ரூபாயில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 22 விழுக்காடாகும்.

1981-82-ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு:–

அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றின் கட்டடப் பராமரிப்புச் செலவு மொத்தம் ரூபாய் 44 இலட்சம்.

தொடக்கக் கல்வி; உயர்நிலைப் பள்ளிக் கல்வி, மேல்நிலைப் பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, சிறப்புக் கல்வி-முதியோர் கல்வி, தமிழ் வளர்ச்சி விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் தேசிய மாணவர் படை, தொழில் நுட்பக் கல்வி ஆகியவற்றிற்கு மொத்தம் ரூபாய் 2,45,43 இலட்சம்.

கலை, பண்பாடு, தொல்பொருள் ஆய்வு, ஆவணக்காப்பகமும், அருங் காட்சியகங்களும், பொது நூலகங்கள் ஆகியவற்றிற்கு ரூ. 3,00 இலட்சம்.

சமூகப் பாதுகாப்பும் நலனும்-14 இலட்சம் ரூபாய், பல்வகை; 2 இலட்சம் ரூபாய் ஆக பெருமொத்தம் 249,03 இலட்சம் ரூபாய்.

மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர, பள்ளி, கல்லூரிக் கட்டடங்கள் முதலியவற்றிற்காக **பிற மானியக் கோரிக்கைகளின் கீழ்** 1981-82-ல் செய்யப் பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு -

சமுதாய வளர்ச்சிப் பணிகள்-ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள், நகராட்சி உயர்நிலைப் பள்ளிக் கட்டட மானியம், சமுகக் கல்வி, பொதுப்பணி-அரசுப் பள்ளி, கல்லூரிக் கட்டடங்கள்:. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம், அலுவலகக் கட்டடங்கள், கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு-அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றிற்கான கட்டடங்கள், தேசியக் கடன் படிப்புதவித் தொகைகள், தொழில் நுட்பக் கல்வி நிலையங்களுக்குக் கடன்கள், தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன்கள், தனியார் பள்ளி ஆசிரியர் களுக்குக் கடன்கள் ஆகியவற்றிற்கு மொத்தம் 23,88 இலட்சம் ரூபாய்.

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால், 1981-82ல் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 273 கோடியாகும்.

* ஆதிதிராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், ஆதிதிராவிடர், பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள், முதலியவற்றிற்கான செலவுகளும், சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள், ஊன முற்றோருக்கான பள்ளிகள் போன்றவற்றிற்கான இனங்களின் மொத்தச் செலவு சுமார் ரூ. 42 கோடியாகும்.

* மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவற்றிற்கு அந்தத் துறைகளின் கீழ் தனித்தனியாக ஒதுக்கியுள்ள நிதி மொத்தம் சுமார் ரூ. 17 கோடி. மேற்கண்ட இனங்களுக்கு ஆகும் செலவையும் (ரூ. 42 கோடியும் ரூ. 17 கோடியும்) கணக்கில் கொண்டால், **1981-82-ல் கல்வி வளர்ச்சிக்கான மொத்தச் செலவு சுமார் ரூ. 332 கோடியாக இருக்கும்.**

# தொழிற் கல்வி வளர்ச்சி



தமிழ்நாட்டில் தொழில் கல்வி மற்றும் பயிற்சியானது தொழிலகங்களுக்குத் தேவையான மனித சக்தி திறனைப் பல்வேறு நிலையில் அளிக்கும் ஒரு முக்கிய துறையாக விளங்குகிறது.

தற்போது தமிழ்நாட்டில் 13 பொறியியல் கல்லூரிகள், 44 பல்துறைத் தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் 14 மேல் நிலைப் பள்ளிகள் (தொழில்) உள்ளன. இவைகளில் அளிக்கப்படும் பலதரப்பட்ட பாடத் திட்டங்களின் எண்ணிக்கை கீழ் வருமாறு:

பட்டப்படிப்புகள் 17, மேல் பட்டப் படிப்புகள் 43, மேல்பட்ட டிப்ளமா படிப்புகள் 9, டிப்ளமா 47, மேல்நிலை டிப்ளமா 20, சான்றிதழ்ப் பாடங்கள் 17.

**சேர்ப்பு எண்ணிக்கை அதிகரித்தல்:**

பொறியியல் கல்லூரிகளின் சேர்ப்பு எண்ணிக்கை கடந்த மூன்றாண்டுகளில் 1422லிருந்து 1700 ஆக அதிகரித்துள்ளது. இதுபோலவே, பாலிடெக்னிக்குகளின் சேர்ப்பு எண்ணிக்கை புதிய பாலிடெக்னிக்குகள் துவங்கப்பட்டதன் காரணமாகவும், மேல்நிலை பள்ளி மாணவர்கள் [Higher Secondary School (Vocational) Boys] பாலிடெக்னிக்குகளில் சேர்க்கப்படுவதன் காரணமாகவும், சேர்ப்பு எண்ணிக்கை கூடுதலாகக் கொள்வதன் காரணமாகவும் 4480லிருந்து 6313ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**புதிய பாடங்கள்:**

கடந்த நான்காண்டுகளில் கீழே கொடுக்கப்பட்டுள்ள புதிய பாடங்கள் அவற்றிற்கெதிரே குறிக்கப்பட்ட கல்லூரிகளில் துவங்கப்பட்டுள்ளன.

**மேல்பட்டப் படிப்புகள்:**

1. பவர் சிஸ்டம் இன்ஜினியரிங் (பகுதி நேரம்)—அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்.

2. இன்ஜினியரிங் மேனேஜ்மென்ட்—மண்டலப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

3. ஆபரேஷன் அண்டு மெயின்டனன்ஸ் ஆப் பவர் ஸ்டேஷன்—மண்டலப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

4. வெல்டிங் டெக்னாலஜி—மண்டலப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

**பட்டப் படிப்புகள்:**

1. புரொடக்ஷன் இன்ஜினியரிங் அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்.

2. எலக்ட்ரானிக்ஸ் அண்டு கம்யூனிகேஷன் இன்ஜினியரிங்—தியாகராசர் பொறியியல் கல்லூரி, மதுரை அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்.

3. பி.எஸ்.சி. இண்டஸ்டிரியல் டிசைன், 4. பி.எஸ்சி. விஷுவல் கம்யூனிகேஷன்—அரசினர் கலை மற்றும் கைத்திறன் நுட்பக் கல்லூரி, சென்னை.

5. பி.எஸ்சி. டெம்பிள் ஆர்கிடெக்சர்—தமிழ்நாடு கட்டட அமைப்புக்கலை மற்றும் சிற்பக் கலைப் பயிலகம், மாமல்லபுரம்.

**விருப்பப் பாடங்கள்:**

1. மரைன் பாய்லர்ஸ் 2. மரைன் இன்டர்னல் கம்புஷன் இன்ஜின்ஸ், 3. மரைன் ஸ்டீம் பவர் பிளான்ட்ஸ், 4. மரைன் ரெப்ரிஜரேஷன் அண்டு ஏர்கண்டிஷனிங்—பொறியியல் கல்லூரி, கிண்டி.

**டிப்ளமா பாடங்கள்:**

1. எலக்ட்ரானிக்ஸ்—சென்ட்ரல் பாலிடெக்னிக், சென்னை. அரசினர் பாலிடெக்னிக், கோயம்புத்தூர்.

2. பாலிமர் டெக்னாலஜி — வேதியியல் நுட்பப் பயிலகம், சென்னை.

3. எலக்ட்ரானிக்ஸ் (சான்ட்விச்)—முருகப்ப செட்டியார் மெமோரியல் பாலிடெக்னிக், ஆவடி.

4. டிசைன் அண்டு டிராப்டிங் டெக்னாலஜி பிஎஸ்ஜி பாலிடெக்னிக், கோயம்புத்தூர்.

5. எலக்ட்ரானிக்ஸ்—அரசினர் பாலிடெக்னிக், நாகர்கோவில்.

6. காஸ்ட்யூம் டிசைனிங் அண்டு டிரஸ்மேக்கிங்—அரசினர் மகளிர் பாலிடெக்னிக்குகள், மதுரை அண்டு கோயம்புத்தூர்.

7. ரெப்ரிஜிரேஷன் அண்டு ஏர் கண்டிஷனிங்—பிரசி ராமசாமி ராஜா பாலிடெக்னிக், ராஜபாளையம்.

8. ரூரல் அண்டு மெக்கானிக்கல் இன்ஜினீயரிங்—ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா பாலிடெக்னிக், கோயம்புத்தூர்.

9. டெக்ஸ்டைல் டிசைனிங், 10. டெக்ஸ்டைல் ப்ராசசிங்—எஸ். எஸ். மாரி செட்டியார் நெசவுத் தொழில் நுட்பப் பயிலகம், குமாரபாளையம்.

11. கமர்ஷியல் பிராக்டிஸ், 12. ஆர்கிடெக்சுரல் அசிஸ்டன்ட்ஷிப் 13. எலக்ட்ரானிக்ஸ்— பெரியார் நூற்றாண்டு மகளிர் பாலிடெக்னிக், தஞ்சாவூர்.

14. மெக்கானிக்கல் இன்ஜினீயரிங், 15. எலக்ட்ரானிக்ஸ்—முகமது சதக் பாலிடெக்னிக், கீழக்கரை.

16. டெக்ஸ்டைல்ப்ராஸஸிங், 17. டெக்ஸ்டைல் என்ஜினீயரிங், 18. டெக்ஸ்டைல் டிசைன், 19 டெக்ஸ்டைல் மானுபாக்சர்—ஈரோடு தொழில் நுட்பப் பயிலகம், ஈரோடு.

20. டெக்ஸ்டைல் ப்ராசிங் அண்டு பிரிண்டிங், 21. எலக்ட்ரானிக்ஸ் அண்டு இன்ஸ்ட்ருமென்டேஷன்—ஜிஆர்ஜி மகளிர் பாலிடெக்னிக், கோயம்புத்தூர்.

22. சிவில் இன்ஜினீயரிங், 23. எலக்ட்ரானிக்ஸ், 24. மெகானிகல் எஞ்ஜினீயரிங்—அரசினர் பாலிடெக்னிக், கிருஷ்ணகிரி.

**மேல்நிலை டிப்ளமா பாடங்கள்:**

1. க்வான்டிட்டி சர்வேயிங்—சென்ட்ரல் பாலிடெக்னிக், சென்னை.

2. பவுண்டரி இன்ஜினீயரிங்—அரசினர் பாலிடெக்னிக், கோயம்புத்தூர்.

**விருப்பப் பாடங்கள்:**

1. நாவல் ஆர்கிடெக்சர்—சென்ட்ரல் பாலிடெக்னிக், சென்னை.

2. மாடர்ன் பார்ம் மெஷினரி டெக்னாலஜி — ராமகிருஷ்ணா-மிஷன் டெக்னிக்கல் இன்ஸ்டியூட் சென்னை.

**பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம்:**

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் 4.9.78 அன்று நிறுவப்பட்டது. அது ஒற்றைவகையைச் சார்ந்தது. கிண்டி பொறியியல் கல்லூரி இப் பல்கலைக் கழகத்தின் தலைமை பீடமாகும். குரோம்பேட்டையிலுள்ள சென்னை தொழில் நுட்பக் கல்வியகமும், அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பவியல் கல்லூரியிலுள்ள சென்னைப் பல்கலைக் கழகத் துறைகளான வேதியியல், தொழில் நுட்பவியல், தோல் தொழில் நுட்பவியல், நெசவுத் தொழில் நுட்பவியல், கட்டடவியலும் நகரமைப்பும் ஆகிய நான்கு துறைகளும் இப் பல்கலைக் கழகத்தின் அங்கங்களாகும்.

**கோள் காட்சிச் சாலை அமைத்தல்:**

சேலம் பொறியியல் கல்லூரியில் ரூ. 2 இலட்சம் செலவில் ஒருகோள்காட்சிச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இக்கோள்காட்சி சாலை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 6.2.79 அன்று பொதுமக்கள் பார்வைக்குத்திறக்கப்பட்டது. இம்மாநிலத்தில் இவ்வகையில் இது முதலாவது ஆகும்.

**நேரடி மத்திய உதவி:**

மத்திய அரசாங்கம் சில தொழில் நுட்பப் பயிலகங்களைச் சிறப்பு நேரடி உதவித் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறத்தக்கப் பயிலகங்கள் எனத் தெரிவு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஏற்பளிக்கப்படும் ஒவ்வொரு கருத்துருவின் செலவிலும் 25 சதவீதம் மாநில அரசின் செலவாகும். மத்தியஅரசாங்கம் 1979-80 முடிய ரூ. 88.76 இலட்சம் மொத்த உதவித் தொகையாக வழங்கியுள்ளது.

**கம்யூனிடி பாலிடெக்னிக்குகள்:**

அகில இந்தியத்தொழில்நுட்பக் கல்விக் குழுவின் பரிந்துரைகளின்படி மத்திய அரசாங்கம் தொழில் நுட்பவியல் கிராமப் புறச் சூழலுக்குப் பயனளிக்கும் வகையில் முன்னேற்றச் செய்யும் பணியில் ஈடுபட வேண்டி சில பாலிடெக்னிக்குகளைத் தேர்ந்தெடுத்து அப் பாலிடெக்குனிக்குகளைக் ''கம்யூனிடி பாலிடெக்னிக்குகள்'' எனப் பெயரிட்டது. கீழ்க்காணும் பாலி



## ஏப்ரல்-மே 1981—மேல்நிலைத் தேர்வு சிறப்புக் கூறுபாடுகள்:

தமிழகத்தில் ஏப்ரல்-மே திங்கள்களில் நடைபெற்ற மேல்நிலைத் (Higher Secondary) தேர்வில் பள்ளிகள் மூலமாகவும் தனிப்பட்ட முறையிலும் தேர்வு எழுதிய மொத்த மாணவ, மாணவியர் எண்ணிக்கை 1,45,974 ஆகும். இவர்களில் பள்ளிகள் மூலமாக பதிவு செய்து கொண்டு தேர்வு எழுதியவர்கள் 1,23,757. இந்தத் தேர்வில் மொத்தம் பள்ளி மாணவ, மாணவியர்களில் 61 சதவிகிதம் பேர் வெற்றி பெற்றுள்ளனர். பள்ளி மாணவ மாணவியர்களிடையே பிரிவு வாரியாக தேர்வு பெற்றவர்கள் விவரம் வருமாறு:—

தேர்வுக்குச் சென்றவர்களில் மொத்தத்தில் 39,091 பேர் 60 விழுக்காடுக்கு மேல் மதிப்பெண் பெற்று வெற்றி பெற்றுள்ளனர். நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்றவர்கள் கணக்கில்(Mathematics) 350 பேர்; கணக்கியல் (Accountancy) பாடத்தில் 63 பேர்.

பொது மற்றும் தொழில் கல்விப்பிரிவில் (General and Vocational) மாணவர்களில் 59 சதவிகிதமும், மாணவிகளில் 67 சதவிகிதமும் தேர்வு பெற்றுள்ளனர். பொதுக்கல்வி (General Education) யில் 61 சதவிகித மாணவ-மாண வியர்களும், (Vocational Education) 64 சத விகிதமும் பெற்றுள்ளனர்.

டெக்னிக்குகள் கம்யூனிட்டி பாலி டெக்னிக்குகளாகத் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளன.

1. ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா பாலிடெக் னிக், கோயம்புத்தூர்.
2. அண்ணாமலை பாலிடெக் னிக், செட்டிநாடு.
3. பக்தவத்சலம் பாலிடெக் னிக், காஞ்சிபுரம்.

இத்திட்டத்திற்கு மத்திய அர சாங்கம் 100 சதவிகித நிதிஉதவி அளிக்கிறது.

**தனியார் பயிலகங்களுக்கு நிதி வழங்கும் விகித முறை மாற்றம்:**

தனியார் பயிலகங்களின் நிர் வாகத்தினரின் நிதி நெருக்கடி நிலைமைகளை உத்தேசித்து வளர்ச்சித் திட்டங்களுக்கான உதவி விகிதத்தை 80:20லிருந்து 90:10 அரசாங்கத்திற்கும், தனி யார் நிர்வாகத்திற்கும் இடையே உள்ள செலவின விகிதமாக அர சாங்கம் அதிகரித்துள்ளது.

**பல்கலைக்கழக மானிய சம்பள விகிதங்கள் அமல்படுத்துதல்:**

அகில இந்தியத் தொழில் நுட் பக் கல்விக் குழுவின் பரிந்துரை களின் மேலும் அரசின் ஒப்புத லோடும், பல்கலைக் கழக ஆசிரி யர்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட சம்பள விகிதங்கள் தொழில் நுட்பக் கல்விப் பயிலகங்களின் ஆசிரியர்களுக்கு அமல்படுத்தப் பட்டுள்ளது.

**கல்விச் சீர்திருத்தம்-தன்னாட்சி**

நன்கு வளர்ந்த பல்தொழில் நுட்பப் பயிலகங்களுக்குத் தாமே புதுக் கல்வித் திட்டங்களை வகுக் கவும், இருக்கும் பாடத்திட்டத் தைச் சீர்திருத்தவும், தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயல் புரியவும் தாங்கள் விரும் பியவாறு பயிற்சி அளிக்கவும் கற் பிக்கவும் உரிமை வழங்கப்படு கிறது. இதுவரை 5 தொழில் நுட்பப் பயிலகங்களுக்குப் பயிலக அளவிலும் மற்றும் 5 பாலிடெக் னிக்குகளுக்கு டிப்ளமா-மேல் நிலை டிப்ளமா அளவிலும் தன் னாட்சி வழங்கப்பட்டுள்ளது.

**புதிய பாலிடெக்னிக்குகள் துவங்குதல்:**

தர்மபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரியில் ஒரு புதிய அர சினர் பாலிடெக்னிக் 180 மாண வர்கள் சேர்ப்பு எண்ணிக்கை யுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் 1980 ஆண்டு தனியார் துறையில் கீழ்க்காணும் பாலி டெக்னிக்குகள் அரசு ஒப்புத லோடு ஆரம்பிக்கப்பட்டுச் செயல் பட்டு வருகின்றன.

1. எஸ்.எஸ். மாரி செட்டி யார் நெசவுத் தொழில் நுட்பப் பயிலகம், ஈரோடு.
2. ஈரோடு தொழில் நுட்பப் பயிலகம், ஈரோடு.
3. முகமது சதக் பாலிடெக் னிக், கீழக்கரை.
4. பெரியார் நூற்றாண்டு மக ளிர் பாலிடெக்னிக், தஞ் சாவூர்.
5. ஜிஆர்ஜி மகளிர் பாலிடெக் னிக், கோயம்புத்தூர்.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் ஒரு புதிய அர சினர் பாலிடெக்னிக்கு துவங்க அரசு ஒப்புதலளித்துள்ளது. இப் பாலிடெக்னிக் 1981-82 ஆண்டு முதல் செயல்படத்துவங்கும்.

**புத்தக வங்கிகள்:**

தொழில் நுட்பப் பயிலகங்களில் பயிலும் ஏழை மற்றும் தேவை யுள்ள மாணவர்களின் நலனுக் கென மாநில அரசின் உதவியுட னும், தனியார் நிறுவனங்களின் நன்கொடை மூலமாகவும், புத் தக வங்கிகள் துவங்கப்பட்டுள் ளன. மேலும் மத்திய அரசாங் கம் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைச்சாதியினர் நலனுக்கென ஒரு புத்தக வங்கித் திட்டத்திற்கு ஏற்பளித்து அதற்கென ரூ.2.55 இலட்சம் செலவின ஒப்புதலளித் துள்ளது.

**நூலக வசதிகள் விரிவாக்கம்:**

பாலிடெக்னிக்குகளில் உள்ள நூலக வசதிகள் செம்மையாகச் செயல்பட வேண்டி, பாலிடெக் னிக்கு நூலகங்களிலுள்ள இள நிலை உதவியாளர் பதவியைத் தகுதி வாய்ந்த நூலகர் பதவியாக அரசாங்கம் மாற்றியமைத்துள் ளது.

**பாடப்புத்தகங்கள்:**

மாநிலத்தில் தொழில் நுட்பக் கல்வியை முன்னேற்றும் வகை யில், பாலிடெக்குனிக்குகளுக்குப் பாடப்புத்தகங்கள் தயாரிக்கும் பணி இத்துறையில் மேற்கொள் ளப்பட்டது. இதன்கீழ் 31 தலைப்பு களில் பாடப்புத்தகம் தயாரிக்கும் பணி துவங்கப்பட்டு 7 தலைப்பு களில் பாடப்புத்தகங்கள் வெளி

யிடப்பட்டுள்ளன. இதர தலைப்புகள் மீதான பணி முன்னேற்றத்திலுள்ளது. ''சிறப்ச் செந்நூல்'' என்ற ஒரு நிலையான பாடப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்புப் பிரிவு**

வேலைவாய்ப்புக்கு வழிகாட்டும் திட்டத்தின் கீழ், மாணவர்களின் வேலை வாய்ப்புகளுக்கு உதவி செய்தல் மற்றும் வழிகாட்டும் வகையில் ஒரு பிரிவு அனைத்துப் பயிலகங்களிலும் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. துறைத் தலைவர் அளவில் ஒரு அலுவலர் இப்பிரிவின் அலுவலராக நியமிக்கப்பட்டு அவருக்கு ஊதியம் வழங்கப்படுகிறது.

**மகளிர் பிரிவு துவங்குதல்:**

பாலிடெக்னிக்குகளில் சேர விழையும் மாணவிகளின் தேவைகளைப்பூர்த்தி செய்யும் வகையில் அனைத்துப் பாலிடெக்னிக்குகளிலும் மொத்தச்சேர்ப்பு எண்ணிக்கைக்குள் தேவை ஏற்படும் நேரங்களில் மாணவிகளைச் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

**செயல்முறைத் திட்டங்களுக்குப் பரிசு வழங்குதல்:**

சிறந்த செயல் முறைத்திட்டங்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் சிறந்த செயல்முறைத்திட்டம் தயாரிக்கும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகளில் இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்குப் பரிசு வழங்க வேண்டி ரூ. 8400- அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது. இப்பரிசுத் தொகை ரூ. 8400லிருந்து ரூ. 16,800-ஆக அரசாங்கத்தால் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது.

**கலை மற்றும் கைத்திறன் நுட்பக் கல்லூரிகளை உயர்த்துதல்:**

சென்னை அரசினர் கலை மற்றும் கைத்திறன் நுட்பக் கல்லூரியில் 1978-79ஆம் ஆண்டு முதல் பி.எஸ்சி., இண்டஸ்டிரியல் மற்றும் பிளஸ்சிவிஷுவல் டிசைன் கம்யூனிகேஷன் பட்டப் படிப்பு தொடங்க அரசாங்கம் ஒப்புதலளித்துள்ளது. இக்கல்லூரிகளின் வளர்ச்சிக்கென பலதிட்டங்களைப் பரிந்துரை செய்துள்ளது.

சமீபத்தில் ''டெம்பிள் ஆர்கிடெக்சர்'' என்ற பட்டப்படிப்பு மாமல்லபுரம் தமிழ்நாடு கட்டட அமைப்புவியல் மற்றும் சிற்பக் கலைப் பயிற்சி பயிலகத்தில் துவங்க அரசாங்கம் ஒப்புதலளித்துள்ளது

**தொழில் நுட்பப் பள்ளிகள் மாற்றம்:**

10+2+3 என்ற புதிய கல்வி முறையின் கீழ், இத்துறையைச் சார்ந்த 14 தொழில் நுட்பஉயர் நிலைப் பள்ளிகளும் மேல்நிலைப் பள்ளிகளாக (தொழில் நுட்பம்) மாற்றப்பட்டுள்ளன. இப்பள்ளிகள் பள்ளிக் கல்வித்துறை இயக்குநரின் கீழ் கல்வி பற்றிய கட்டுப்பாட்டிலும் (Academic Control) தொழில் நுட்பக் கல்வித்துறை இயக்குநரின் கீழ் நிர்வாகக் கட்டுப்பாட்டிலும் (Administrative Control) இயங்கி வருகின்றன.

**அரசினர் பாலிடெக்னிக் பெயர் மாற்றம்:**

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவின் நினைவாக வேலூர் அரசினர் பாலிடெக்னிக்கின் பெயர் 1979-80ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் ''தந்தை பெரியார் ஈ.வெ.ராமசாமி அரசினர் பாலிடெக்னிக்கு வேலூர்'' என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**பயிற்சித்துறை வளர்ச்சி:**

பொறியியல் கல்லூரி ஆசிரியர்கள் டாக்டர் பட்டம் பெற இந்தியத் தொழிலியல் கல்வியகங்கள், பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கல்வியகம் போன்றவற்றுக்கு அனுப்பப்படுகின்றனர். இதுவரை 56 ஆசிரியர்கள் இவ்வாறு டாக்டர் பட்டம் பெற்றுள்ளனர். மேலும் 38 ஆசிரியர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர். 1979-80ல் மேலும் 5 பேர் பயிற்சிக்கு அனுப்பப்படுவர்.

பல்தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி நிலையத்திற்கு உயர் பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர். இதுவரை 259 ஆசிரியர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். 37 ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 1979-80ஆம் ஆண்டில் மேலும் 30 ஆசிரியர்கள் பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள்.

**ஆராய்ச்சி மற்றும் கலந்தாய்வுப் பணிகள்:**

ஆராய்ச்சி மற்றும் கலந்தாய்வுப் பணிகள் வளர வேண்டும் என்பது நன்கு உணரப்பட்டுள்ளது. பொறியியல் கல்லூரிகளில் டாக்டர் நிலை ஆராய்ச்சி எந்த அளவுக்கு நன்கு நடைபெறுகிறதோ அந்த அளவுக்கு இப்பணி சிறக்கும். பொறியியல் கல்லூரிகளில் டாக்டர் பட்டத்திற்கு ஆராய்ச்சி செய்ய மாணவர்கள் பதிவு செய்து கொள்வது கடந்த சில ஆண்டுகளாக ஊக்குவிக்கப்படுகிறது. பொறியியல் கல்லூரிகளில் ஆராய்ச்சியை ஊக்குவிக்க அரசு ரூ. 1 இலட்சம் ஏற்பளித்துள்ளது.

**சென்னை பாலிடெக்னிக்கினை சிங்கப்பூர் ஸ்டாப் டிரெயினிங் காலேஜின் இணை தொழில் நுட்பப் பயிலகம் என அமைத்தல்:**



## இரண்டு புதிய மகளிர் பள்ளிக்கான ஆய்வாளர் அலுவலகங்கள் திறக்க அரசு அனுமதி!

மகளிர் பள்ளிகளில் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாலும் அதிக அளவிலான மகளிர் பள்ளிகள் திறக்கப்பட்டிருப்பதாலும், தென்ஆர்க்காடு மாவட்டத்திற்காகக் கடலூரில் ஒரு மகளிர் பள்ளி ஆய்வாளர் அலுவலகம் திறக்கப்படும். இதற்கும் சென்னையில் தற்பொழுதுள்ள மகளிர் பள்ளி ஆய்வாளர் அலுவலகத்தை இரண்டாகப் பிரிப்பதன் மூலம் மற்றொரு மகளிர் பள்ளி ஆய்வாளர் அலுவலகமும் சென்னையில் ஏற்படுத்தவும் அரசு அனுமதி அளித்துள்ளது. ••

சிங்கப்பூர் ஸ்டாப் டிரெயினிங் காலேஜ் தொழில் நுட்ப வல்லுநர் கல்வித் திட்டம், பாடத்திட்ட அமைப்பு மற்றும் அபிவருத்தி மற்றும் கல்வி நிர்வாகம் ஆகிய துறைகளில் சிங்கப்பூர் மற்றும் வேறுபல மண்டல நாடுகளில் பாடத்திட்டங்கள் நடத்தி வருகின்றது. இக் கல்லூரி இந்தியாவில் ஒத்துழைப்புக்காகவும், அக் கல்லூரியின் வளர்ச்சி, ஆய்வு நடவடிக்கைகளுக்கு ஊக்கம் தரவும் வேண்டி 3 அல்லது 4 தொழில் நுட்பப் பயிலகங்களின் பெயர்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டது. மத்திய அரசாங்கம் இக்கல்லூரிக்கு சென்ட்ரல் பாலிடெக்னிக்கின் பெயரை சிபாரிசு செய்துள்ளது. இதனால் சென்ட்ரல் பாலிடெக்னிக் சிங்கப்பூர் ஸ்டாப் டிரெயினிங் கல்லூரியில் ஒரு இணை தொழில் நுட்பக் கல்விப் பயிலகமாக அழைக்கப்படும்.

**வணிகவியல் பாடங்களில் தேர்வு:**

தொழில் நுட்பக் கல்வித்துறையால் வணிகவியல் பாடங்களில் தேர்வு நடத்தும் முறை ஏற்றுக் கொள்ளப்பட்டது. முதல் தேர்வு முறையினைச் செம்மைப்படுத்தவும், வணிகவியல் பயிற்சி பயிலகங்களில் தரமான போதனை வழங்கப்படவும் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. தேர்வு தோறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், வணிகவியல் பயிற்சி பயிலகங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆண்டுதோறும் ஏறத்தாழ 1 இலட்சம் மாணவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

**உணவுக்கலை நுட்பப் பயிலகம்:**

மத்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் 1981-82ஆம் ஆண்டில் ஒரு புதிய உணவுக்கலை நுட்பப் பயிலகம் (Food Craft Institute) திருச்சிராப்பள்ளியில் நிறுவப்பட இருக்கிறது.

**அறிவியல் தொழில் நுட்பக் காட்சியகம்:**

சென்னை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அருங்காட்சியகம் நிறுவ அரசு தீர்மானித்துள்ளது. சென்னையில் நிறுவப்படவிருக்கும் அருங்காட்சியகம் அடையாறு சிஐடி வளாகத்தில் தந்தை பெரியார் அவர்கள் பெயரால் நிறுவப்படும். சென்னையில் அருங்காட்சியகம் நிறுவத் தகுந்த முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாவட்ட அறிவியல் மையம்:**

திருநெல்வேலியில் ஒரு மாவட்ட அறிவியல் மையம் நிறுவ மத்திய அரசாங்கம் ஒப்புதலளித்துள்ளது. இம்மையம் 1981-82-ஆம் ஆண்டு முதல் செயல்படத்துவங்கும்.


# டிவி நிகழ்ச்சிகளை ரேடியோவிலும் எஃப்எம் ரேடியோ நிகழ்ச்சிகளை டிவியிலும் கேட்டு மகிழ ஒரு அற்புத படைப்பு




சாலிடெர் டிவி/எஃப்எம் ட்யூனரை உங்களது ரேடியோவுடன் இணைத்து, டிவி இல்லாமலேயே டிவி நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழலாம். டிவியில் இடம்பெறும் திரைப் படம், நாடகம், இசை போன்ற பல நிகழ்ச்சிகளைக் கேட்க இது ஒரு அற்புத படைப்பு.

இது தவிர உங்களது டிவியில் 'பிக்-அப்' வசதி இருக்குமேயானல் சாலிடெர் டிவி/எஃப்எம் ட்யூனரை இணைத்து எஃப்எம் ரேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்கலாம்.

சாலிடெர் டிவி/எஃப்எம் ட்யூனரை எந்தவொரு ஆம்ப்ளிஃபையருடனும் இணைத்து டிவி நிகழ்ச்சிகளையோ, எஃப்எம் ரேடியோ நிகழ்ச்சிகளையோ கேட்கலாம்.

# சாலிடெர்
## டிவி/எஃப்எம் ட்யூனர்

ASP/HE-250



# அரசு தேர்வுத்துறை

அரசு தேர்வுத்துறை தனி இயக்ககமாக 1975-ஆம் ஆண்டு பிப்ரவரிதிங்கள்துவக்கப்பட்டது. இடைநிலைப்பள்ளி இறுதித் தேர்வு ([S.S.L.C.] [O.S.L.C.]) மேல்நிலைப்பள்ளித் தேர்வு (Higher Secondary) ஆகிய இரு முக்கிய தேர்வுகள் நடத்துவதுடன், இத்துறை ஏனைய சுமார் 38 தேர்வுகளையும் (தொழில், வேலை சம்பந்தப்பட்டவை) நடத்தி வருகிறது. கடந்த ஆண்டு, ஏறக்குறைய 6.5 இலட்சம் மாணவர்கள் இத் தேர்வுகளை எழுதி உள்ளனர்.

**இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு:**

புதிய கல்வித் திட்டம் அமல் படுத்தப்பட்டால், இத்துறை மூன்று வகையான தேர்வுகளை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. பத்தாம் வகுப்புத் தேர்வும், 11-ஆம் ஆண்டு படிப்புத் தேர்வும், 1969-ஆம் ஆண்டு திட்டப்படி தேர்வும்—இவை சுமுகமாகவும், வெற்றிகரமாகவும் நடத்தப்பட்டன. 1980-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்விற்கு 2.4 இலட்சம் மாணவ மாணவியர் (O.S.L.C.-யும்) பங்குபெற்றனர். இதில் தேர்வு பெற்றவர் விழுக்காடு 57 ஆகும். 1981-ஆம் ஆண்டு மார்ச் தேர்விற்கு, 3,18,000 மாணவ மாணவியர் பதிவு செய்துள்ளனர். மாணவர்களின் கல்வி நலன் கருதி, இடைநிலைப் பள்ளி இறுதித் தேர்வைப் பகுதிமுறையில் எழுத அனுமதித்து 1978-ஆம் ஆண்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இச் சலுகை 1978-ஆம் ஆண்டுக்கு முன்னதாக இடைநிலைப் பள்ளி இறுதித் தேர்வு எழுதி தவறிய வர்கட்கும் பொருந்தும் என விரிவு படுத்தப்பட்டது. விருப்பப் பாடங்கள் பொருத்தவரை, 1979-ஆம் ஆண்டிலும், அதற்கு முன்னதாகவும் தேர்வு எழுதி தவறியவர்கள்-(விருப்பப் பாடம் இல்லாமல்) தேர்வில் தேறியவர்களாக அறிவிக்கப்பட்டது. இது 1.10.78 முதல் பொருந்துமாறு செயல் படுத்தப்படும் என அறிவிக்கப் பட்டது.

எட்டாம் வகுப்புத் தேறிய மாணவ, மாணவியர் 16 வயது நிரம்பி இருந்தால், தனிப்படிப்பாக பள்ளி இடைநிலைப் பொதுத் தேர்வு எழுதலாம் என ஆணை வழங்கப்பட்டது, இச்சலுகை, பிற மாநிலங்களில் படித்திருப்பினும், தமிழ்நாட்டில் தங்கி வசிப்பவர்கட்கும் பொருந்தும் என விரிவாக்கப்பட்டது. மைய மதிப்பீட்டு முறையும், தேர்வு முடிவுகள் கம்ப்யூட்டர் உதவியுடன் வெளியிடலும் நடைமுறையில் உள்ளன.

**மேல்நிலைப்பள்ளித் தேர்வு:**

முதல் மேல்நிலைப் பள்ளித் தேர்வு 1980-ஆம் உண்டு ஏப்ரல்/மே திங்களில் நடைபெற்றது. 18 வயது நிரம்பிய மாணவ, மாணவியர்கள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்பு(பத்தாம் வகுப்பு) பொதுத் தேர்வில் வெற்றி பெற்றிருப்பின் தனிப்படிப்பாக, மேல்நிலைப் பள்ளித் தேர்வு எழுத அனுமதித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. செய்முறைத் தேர்வு இல்லாத, தொழில் சம்பந்தப்பட்ட பிற பாடங்களில் தேர்வு எழுதலாம் என அறிவிக்கப்பட்டது.

ஆங்கிலோ-இந்தியப் பள்ளி இறுதித் தேர்வை நடத்தும் பொறுப்பு 1977-ஆம் ஆண்டு இத்துறைக்கு வழங்கப்பட்டது. அதன்படி தேர்வுகள் நடத்தப் பட்டு வருகின்றன.

பல்கலைக் கழகங்களால் நடத்தப்பட்டு வந்த மெட்ரிக்குலேஷன் தேர்வு 1979-ஆம் ஆண்டு அரசு தேர்வுத் துறைக்கு மாற்றப்பட்டது. அதன்படி, இத்தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

எந்தப்பள்ளியிலும் படிக்காமல் எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு தனிப்பட்ட மாணவர்களாக, 14 வயது பூர்த்தி செய்திருப்பின் இத் தேர்வு எழுதலாம் என 1979—1980 ஆம் ஆண்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன்படி சுமார் 3,000 மாணவ, மாணவியர்கள் இத்தேர்வு எழுதினர்.

தேர்வு எழுதும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கையும், தேர்வுகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதற்கேற்ப, இத்துறை விரிவுபடுத்தப்படுவது அவசியமாகி, மதுரையில் ஒன்றும், கோவையில் ஒன்றும் ஆக இரண்டு மண்டல அலுவலகங்கள் துவக்கப் பட்டு இயங்கி வருகின்றன. 1981-82ல் இவை மேலும் வலுப் படுத்தப்படும்.



# ஆயிரம் மலர்கள் மலரட்டுமே!

'ஆயிரம் மலர்கள் மலரட்டுமே' என்பது அருளாளர் வாக்கு. விளையாட்டிலும் எண்ணற்ற வீரர்கள் தோன்ற வேண்டும். அதற்கான வாய்ப்புகளை அளித்தல்; திறமையுள்ள விளையாட்டு வீரர்களை இளைஞராக உள்ள பொழுதே தெரிந்தெடுத்துச் சிறந்த முறையில் விளையாட்டு நுட்பப் பயிற்சிகளை அளித்து வெற்றி வீரர்களாகத் திகழ அவர்களை உருவாக்குவது-இவை இரண்டும் தமிழ்நாடு இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறையின் நோக்கங்களாகும்.

இத்துறை 1979ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

இளைஞர் விளையாட்டுப் பயிற்சித்துறை, தன் இரட்டைக் குறிக்கோள்களை மூன்று படி நிலைகளில் செயல்படுத்தித் தொண்டாற்றி வருகிறது. பள்ளி மாணவர், கல்லூரி மாணவர், மாணவர் அல்லாத இளைஞர் என்பன அந்த மூன்று படி நிலைகளாகும்.

பள்ளி மாணவர்கள் விளையாட்டில் சிறந்து விளங்க நான்கு வகையான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**நடுநிலைப்பள்ளி:**

நடுநிலைப்பள்ளி மாணவர்கள் அதாவது எட்டாம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்களுக்குக் கல்வி மாவட்ட அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்த ஆண்டுதோறும் கல்வி மாவட்டம் ஒன்றுக்கு ரூ. 1,000 என்ற முறையில் உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

**உயர்நிலைப்பள்ளி:**

'பத்துப் பள்ளி விளையாட்டுப் போட்டி'த் திட்ட அடிப்படையில் உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. பத்து உயர்நிலைப்பள்ளிகள் அளவில் ஒருங்கிணைப்பு விளையாட்டுப் போட்டிகள் நடத்த ஒருங்கிணைப்பு ஒன்றுக்கு ரூ. 500 என்ற முறையில் உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

**மாநில கோடைகால விளையாட்டுப் பயிற்சி முகாம்:**

மாநில மாவட்ட நிலைகளில் முன்பே விளையாட்டுகளில் சிறந்து விளங்கும் 16 வயதிற்குட்பட்ட உயர்நிலைப்பள்ளிமாணவ, மாணவிகள் மேலும் நல்ல விளையாட்டு நுட்பங்களை அறிந்து கொண்டு முறையான பயிற்சியைப் பெற உதவும் வகையில் மாநில அளவில் கோடைகாலப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன.

**கல்லூரி மாணவர்கள்:**

கல்லூரி மாணவர்களின் தேசியப் பணித்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களையும் சார்ந்த 40,000 மாணவர்கள் தொண்டாற்றி வருகின்றனர்.

இத்திட்டம் மேல் நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் விரிவுப் படுத்தப்பட்டு 10,000 மாணவர்கள் பயன் பெறுகின்றனர். இதற்காகும் செலவினை 7:5 என்ற விகிதத்தில் இந்திய அரசும், மாநில அரசும் ஏற்கின்றன.

**மாணவர்கள் அல்லாத இளைஞர்கள்:**

மாணவர்கள் அல்லாத இளைஞர்களுக்கும் விளையாட்டில் ஊக்கமும் ஆக்கமும் தர இத்துறை திட்டங்கள் தீட்டி நிறைவேற்றி வருகிறது.

**ஒன்றிய விளையாட்டுப் போட்டி:**

தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஒன்றியங்களிலும் ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்க இத்துறை நிதி உதவி அளிக்கிறது. சென்ற ஆண்டு ஒன்றியத்துக்கு ரூ. 250 என்ற முறையில் 374 ஒன்றியங்களுக்கு இத்தகைய நிதியுதவி நல்கப்பட்டுள்ளது.

**ஊரக விளையாட்டு மையங்கள்:**

தொடக்க நிலையில் ஒன்றியத்திற்கு ஒன்று என்ற அளவிலேனும் ஊரக விளையாட்டு மையங்கள் நிறுவப்பட வேண்டும் என்பது அரசின் விழைவு. இத்தகைய விளையாட்டு மையங்கள் விளையாட்டுக் கருவிகள் வாங்குவதற்கும், பிற செலவினங்களுக்கும் ஆண்டுக்கு ரூ. 1,200 உதவித் தொகையாகப் பெறுகின்றன. சென்ற ஆண்டு 88 ஊராட்சி ஒன்றியங்களில் ஊரக விளையாட்டு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

**சிறு விளையாட்டரங்கம்:**

ஒவ்வொரு ஊரக விளையாட்டு மையத்திலும் சிறிய விளையாட்டரங்கம் கட்ட ரூ. 35,000 (நீலகிரி மாவட்டத்தில்ரூ. 25000) உதவித் தொகை வழங்கப் படுகிறது. சென்ற ஆண்டு 30 மையங்கள் விளையாட்டரங்கங்கள் கட்டுவதற்காக நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டு இளைஞர்கள் மலையேறும் பயிற்சியைப் பெற வாய்ப்பளிக்கும் வகையில் நீலகிரி, கொடைக்கானல் மலையேறும் திட்டங்களுக்கு இத்துறை நிதி உதவி செய்துவருகிறது. இமய மலையேறும் பயிற்சியினை அளிக்கும் தேசிய அமைப்பின் தமிழ்நாட்டுப்பிரிவு ஒன்றுக்கும் சென்ற ஆண்டும் இவ்வாண்டும் உதவித் தொகைகள் நல்கப்பட்டுள்ளன.

**விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம்:**

விளையாட்டில் விருதுகள் பல பெற்று, பணியிலிருந்து ஓய்வு பெற்று, வறுமையில் வாடும் விளையாட்டு வீரர்களின் துயர் துடைக்க ஒய்வூதியம் வழங்கும் திட்டம் ஒன்றை இத்துறை நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 25 விளையாட்டு வீரர்கள் மாதம் ரூ.75 உதவித் தொகை பெற்று வருகின்றனர்.

**விளையாட்டு வீரர்களுக்குப் பொற்கிழி:**

மாநில, தேசிய ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெற்றுத் தமிழகத்திற்குப் பெருமைதேடித் தந்த தமிழ்நாட்டு வீரர்களைப் பாராட்டி பொற்கிழிகள் வழங்கி இத்துறை சிறப்பிக்கிறது. இந்த வகையில் கடந்த ஆண்டு 16 வகையான விளையாட்டுகளில் வெற்றி பெற்ற 78 விளையாட்டு வீரர்கள் ரூ. 49,500 மதிப்புள்ள பணமுடிப்புகளைப் பெற்றுள்ளனர். மற்றும் இந்திய ஆக்கிக் குழுவின் தலைவராக மாஸ்கோ ஒலிம்பிக் விளையாட்டில் ஆடி வெற்றி பெற்ற திரு பாஸ்கரன் அவர்களுக்கு ரூ. 1,47,000 மதிப்புள்ள இல்லம் ஒன்றையும் இத்துறை பரிசாக வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளது.



மாணவிகள் அமைத்த தோட்டத்தை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து பார்வையிடுகிறார்.

டம், உழவர் பயிற்சி நிலைய வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை யாகும்.

மதுரை மாநகரில் நகர்ப்புற காய்கறி வளர்ச்சித் திட்டம், இராமநாதபுரம், கோயம்புத்தூர், பெரியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் உள்ள மலைப் பகுதிகளில் தோட்டக்கலைப் பயிர்கள் மேம்பாட்டுக்கான திட்டம், பெரியார் மாவட்டத்தில் ஒரு அரசுப் பழப்பண்ணை மற்றும் நாற்றங்கால் அமைத்திடும் திட்டம், சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தினை விரிவாக்குதல், மதுரை மாவட்டத்தில் மலைத் தோட்டப் பயிர்களின் மேம்பாட்டிற்கான பணிகளை விரிவாக்கும் திட்டம், உழவர் பயிற்சி நிலையங்களில் தோட்டக்கலை வல்லுநர்களை அமர்த்துதல், குடுமியான்மலையில் மத்திய தோட்டக்கலை பயிற்சியினைத் துவக்குதல் மற்றும் அரசுப் பழப்பண்ணை மற்றும்

# தொடர்ந்து வளரும் தோட்டக் கலை

**தோ**ட்டக்கலைப் பயிர்கள் மேம்பாட்டிற்காக, தோட்டக் கலை மற்றும் மலைத் தோட்டப் பயிர்கள் துறை என்னும் தனித் துறை ஒன்றை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது. ரூ. 296.85 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் பல்வேறு வகையான திட்டங்களைச் செயற்படுத்த இத்துறை 1979-80ஆம் ஆண்டு உருப்பெற்றது. இத்துறையால் செயல் படுத்தப்படும் பல்வேறு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு சென்ற ஆண்டில் கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது.

நடைமுறை திட்டங்கள் தக்க முறையில் பலப்படுத்தப்பட்டு, புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1980-81ஆம் ஆண்டில் புதிதாகச் செயல்படுத்தப்பட்ட திட்டங்களில், தமிழ்நாட்டில் மலைத்தோட்டப் பயிர்கள் மேம்பாட்டிற்கென ஒரு மைய நாற்றங்கால் உட்பட ஒருதிட்டம் மலரியல் திட்டம், தோட்டக் கலைத் துறை அலுவலர்களுடன் உழவர் பயிற்சி நிலைய மேம் பாட்டுத் திட்டம், சென்னைநகர்ப்புற காய்கறி வளர்ச்சித் திட்டம், மாதவரம் மற்றும் கண்டியான் குப்பம் ஆகிய இடங்களில் புதிய அரசுப் பழப்பண்ணை மற்றும் நாற்றங்கால் அமைப்புத் திட்டம், சேலம் மாவட்ட சின்னக் கல்ராயன் மலைப் பகுதியில் உயரிய வாழைக் கன்றுகள் உற்பத்தி செய்யும் திட்டம், வைரஸ் நோய்த் தடுப்பு எலுமிச்சை கன்றுகள் உற்பத்தித் திட்டம் ஆகியவை சிறப்பு வாய்ந்த திட்டங்களில் சிலவாகும்.

மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டம் சிறுமலையில் ஒரு மாபெரும் பழப்பண்ணை தொடங்கி மலை வாழைக் கன்றுகள் மற்றும் பழச்செடிகள் உற்பத்தித் திட்டம் மற்றொரு சிறப்பு அம்சமாகும். மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படும் பல்வேறு திட்டங்களில் நீலகிரியில் பயிர் மாற்றும் முறைத் திட்டம், காளான் உற்பத்தித்திட்டம், தோடர்களின் நிலத்தில் தேயிலை பயிரிடும் திட்டம், குன்னூரில் பழப் பதனிடும் திட்டம், தரமான உருளைக் கிழங்கு விதைகள் உற்பத்தி திட் நாற்றங்கால் விரிவாக்குதல் ஆகிய திட்டங்கள் தமிழ்நாட்டில் 1981-82ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் ரூ. 39.02 இலட்ச மதிப்பீட்டில் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் முக்கியமானவை யாகும். 1980-81ஆம் ஆண்டு இத்துறை ரூ. 15.93 இலட்சம் மதிப்புள்ள பழக்கன்றுகள், அலங்காரச் செடிகள் மற்றும் வருவாய் ஈட்டத்தக்க செடிகள் ஆகிய தோட்டக்கலைப் பயிர்களை உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டுள்ளன. 3.56 இலட்சம் அன்னாசிக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

தீவிர மரம் நடும் திட்டத்தின் கீழ் சுமார் 45 இலட்சம் பழக்கன்றுகள் எரிபொருள் மற்றும் தீவனச் செடிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 5.49 இலட்சம் தேயிலை பதியங்களும், 10 டன் காய்கறி விதைகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. ஏறத்தாழ 103 ஏக்கர் நிலப்பரப்பில் புதிதாக, கமலா, ஆரஞ்சு பயிரிடப்பட்டுள்ளது. தோடர்கள் வசிக்கும் பகுதிகளில் வேளாண்

மைக்கென 35 கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்ட விவசாயிகளின் ''செப்டம்பர் முட்டைக் கோஸ்'' மற்றும் ''சினோ காரட்'' விதைத் தேவைப் பூர்த்தி செய்ய ''காஷ்மீரில்'' இவ்விதைகள் தோட்டக்கலைத் துறையினால் உற்பத்தி செய்யப்பட்டு நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்ட சீதோஷ்ண நிலையில் ''முட்டைக்கோஸ் விதை'' உற்பத்தி செய்ய இயலாது.

உலக வங்கி உதவியுடன் தெளிவமைந்த முந்திரி மேம்பாட்டிற்கான ஒரு திட்ட முன்வடிவு ரூ. 36.89 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் பழம் மற்றும் காய்கறிகள் வளர்ச்சிக்கென ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று ரூ. 157.04 கோடி மதிப்பீட்டில் வகுக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஏறத்தாழ





8,000 எக்டேர் நிலப்பரப்பில் 5,000 எக்டேர் பரப்பளவில் காய்கறிகளும் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஜெர்மானிய ஐக்கிய குடியரசு நிதி உதவிபெற்றுச் செயல்படுத்துவதற்காக ரூ. 6.17 கோடி திட்ட மதிப்பீட்டில் மேலும் ஐந்து திட்டங்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

ரூ. 10 கோடிக்கான நீலகிரி நீர் வேளாண்மைப் பணித் திட்டம் என்ற பிரிதொரு திட்டம் இந்திய மைய அரசுக்கு ஜெர்மானிய ஐக்கிய குடியரசு நிதி உதவி பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படும் பெரியாறு மற்றும் வைகை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டம் கொடைக்கானல் வட்டத்தில், பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் ஒன்றும் 1980-81-ல் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் இவ்வாண்டு நீலகிரி மாவட்டம் முழுமைக்கும்விரிவுபடுத்தப்படும்.

# குடிசைப்பகுதி மேம்பாட்டுப்பணிகள்

சென்னை மாநகராட்சி எல்லைக்குள் அடங்கிய அனைத்துக் குடிசைப்பகுதிகளையும் அகற்றி அங்கு வசித்து வரும் குடிசை வாழ் மக்களுக்குச் சீரான முறையில் வீடுகள் அமைத்துத் தரும் நோக்கத்துடன் குடிசைப்பகுதி மாற்று வாரியம் 1970-ம்ஆண்டில் நிறுவப்பட்டது. குடிசைகள் அகற்றப்பட்ட இடங்களில் மீண்டும் குடிசைப் பகுதிகள் தோன்றாத வண்ணம் நில ஆக்கிரமிப்புகளைத் தடுப்பதும் இவ்வாரியத்தின் முக்கியமான இலக்குகளில் ஒன்றாகும்.

1971-ல் நடத்திய ஆய்வின்படி, சென்னையில் 1,202 குடிசைப்பகுதிகள் உள்ளன. அவைகளில் 1,63,804 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அதாவது சென்னையில் வாழும் மக்களின் மூன்றில் ஒரு பகுதி குடிசைகளில் வாழ்ந்து வருவதாகக் கொள்ளலாம். ஆண்டுதோறும் மக்கள் தொகை இயற்கையாக 1.5 சதம் வளர்ந்து வருகிறது. இதுவன்றிச் சுற்றிலுமுள்ள நகர மற்றும் கிராமப்புறங்களிலிருந்து மக்கள் வேலையைத் தேடி வந்தவண்ணம் இருக்கிறார்கள். இதனால் ஏற்படும் பெருக்கம் 4.5 சதவீதமாகும். ஆண்டுதோறும் சுமார் 10,000 குடும்பத்தார் சென்னையில் குடியேறுகிறார்கள் என்று கூறலாம். இவர்களில் 5,000 குடும்பங்கள் குடிசைப் பகுதிகளில் வீடுகள் அமைத்துக் கொள்கிறார்கள். இந்தக் கணக்கின்படி 1980-ஆம் ஆண்டின் இறுதியில் குடிசை வாழ் குடும்பங்கள் தொகை 2.21 இலட்சம் எனக்கருதலாம். 1990-ஆம் ஆண்டு இறுதியில் இத்தொகை 3.76 இலட்சமாக இருக்கும்.

வீட்டு வசதி வாரியம், மாநகராட்சி, குடிசைப்பகுதி மாற்று வாரியம் இவைகளின் முயற்சியினால் இதுவரை சுமார் 79,737 குடும்பங்கள் கீழ்க்கண்டவாறு வசதிகளைப் பெற்றுள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| 1. | வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள் | 7,191 |
| 2. | தீப்பிடிக்காத வீடுகள் | 4,380 |
| 3. | வளைவு வீடுகள் | 381 |
| 4. | குடிசைப்பகுதிமாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள் | 30,995 |
| 5. | 1980—81-ல் கட்டவிருக்கும் வீடுகள் | 3,500 |
| 6. | திறந்த வெளி மனைகள். | 7,472 |
| 7. | உலக வங்கித் திட்டத்தின் அடிப்படையில் பயனடைந்தவர்கள். | 25,818 |
| | மொத்தம் | 79,737 |

1981-ஆம் ஆண்டுவரை குடிசை மாற்று வாரியப் பணிகளால் முழுப் பயனடையாதவர்களின் எண்ணிக்கை 1.4இலட்சம் ஆகும். 1980—90-ல் அடங்கிய பத்து ஆண்டுகளில் 1.15 இலட்சம் குடும்பங்களுக்கு வசதிகள் செய்து தரப்படும். இதே கால அளவில் சுமார் 26,200 வீடுகளும் கட்டப்படும். எனவே 1990-ஆம் ஆண்டு வசதிகள் பெற வேண்டியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை 1.57 இலட்சம் ஆகும். அதாவது இப்போதுள்ள நிலைமையே 1990-லும் நிலவி வரும். மாநிலத்தின் பல நகர்ப்புறங்களை வளர்ப்பதன் மூலம் சென்னை மாநகரில் வளர்ந்துவரும் மக்கள் தொகையை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தலாம். இவ்வாறு செய்வதில் வெற்றி கொண்டால் 1990-ஆம் ஆண்டின் இறுதியில் குடிசை வாழ்மக்களின் பிரச்சினைக்கு முழுமையாகத் தீர்வு காணலாம்.

**குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம்:**

குடிசைப் பகுதிகளை அறவே அகற்றி அங்கு வாழும் மக்களை அவ்விடத்திலேயே கட்டப்பட்ட







குடியிருப்புகளில் அமர்த்துவதே இத்திட்டத்தின் அடிப்படை. 1977ஆம் ஆண்டு முடிய சென்னையில் ரூ. 2155 இலட்சம் செலவில் 28,130 வீடுகள் கட்டப்பட்டன. 1977-81ல் ரூ. 1300 இலட்சம் செலவில் 10,056 வீடுகள் கட்டப்பட்டன. அவைகளில் 3212 வீடுகள் 1980-81ல் கட்டியவை. 1981-82ல் ரூ. 400 இலட்சம் செலவில் 3500 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**த்வணை முறைத் திட்டம்:**

குடிசை வாழ் குடும்பங்களிலேயே குறைந்த வருவாய் உள்ள பிரிவினர்கள் குடியிருப்புகளைத் தவணை முறையில் சொந்தமாக்கிக் கொள்ளும் திட்டத்தையும் வாரியம் நிறைவேற்றி வருகிறது. மாதத் தவணை ரூ. 25லிருந்து 40வரை செலுத்தி வருவதன் மூலம் குடும்பங்கள் தாங்கள் வசித்துவரும் குடியிருப்புகளை 20 ஆண்டுகளில் சொந்தமாக்கிக் கொள்ளலாம். இதுவரை சுமார் 4500 வீடுகள் இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதுவன்றி மாத வருமானம் ரூ. 350-600 உள்ள குடிசைப் பகுதியில் வாழ்ந்து வருகின்ற குடும்பங்களுக்குத் திருமங்கலம் பகுதியில் 416 குடியிருப்புகளும், அட்டையில்லா நகர்ப் பகுதியில் 416 குடியிருப்புகளும், இந்திரா நகர்ப் பகுதியில் 100 குடியிருப்புகளும் ஆக மொத்தம் 932 குடியிருப்புகள் எளிய தவணை முறையில் வழங்கப்பட இருக்கிறது. இந்தக் குடியிருப்புகளில் உள்ள வீட்டின் மதிப்பு ரூ. 17,000- சுமார் ரூ. 1,700 முதலீடாகவும், 30 ஆண்டுகள் மாதந்தோறும் ரூ. 80-90 செலுத்தியும் இவ்வீடுகளைச் சொந்தமாக்கிக் கொள்ளலாம்.

**சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டம்:**

பொருளாதாரப் பற்றாக்குறையின் காரணத்தால் சென்னையில் உள்ள எல்லா குடிசைவாழ் மக்களையும் அடுக்குமாடி குடியிருப்புகளில் குடியமர்த்த இயலாது. பல பகுதிகளில் குடிநீர் வழங்குதல், பாதைகள் போடுதல், கழிவுநீர் கழிப்பிடங்கள் கட்டுதல், மின் விளக்கு பொருத்துதல் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன.

20 குடும்பங்களுக்கு ஒரு கழிவறையும் மற்றும் ஒரு குளியல் அறையும்; தேவையான தண்ணீர் வசதியும் 40 மீட்டர் இடைவெளிக்கு ஒரு தெரு விளக்கும் ஏற்படுத்தி கொடுக்கப்படுகிறது. கழிவறைக்குச் செல்வதற்கு நடைபாதை போடப்படுகிறது. 1976-77ஆம் ஆண்டு ரூ. 68.42 இலட்சம் செலவில் 9000 குடும்பங்கள் பயனடைய வகை செய்யப்பட்டுள்ளது. 1977-80 ஆம் ஆண்டுகளில் ரூ. 202.79 இலட்சம் செலவிடப்பட்டு 18,800 குடும்பங்கள் வசிக்கும் பகுதிகள் மேம்படுத்தப்பட்டன. 1980-81ல் மட்டுமே ரூ. 49.38 இலட்சங்கள் செலவில் 6,000 குடும்பங்கள் பயனடைந்தன. 1981-82ல் ரூ. 75 இலட்சங்கள் செலவில் 600 குடும்பங்களுக்கு வசதிகள் செய்து தரப்படும்.

**உலக வங்கித் திட்டம் முதற் கட்டம்:**

குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளை விரிவுபடுத்தி நடத்துவதல்லாமல் வருவாய் பெருக்குத் தொழில் நுட்பப் பயிற்சி பள்ளிகள் குழந்தைகள் காப்பகம் மருத்துவமனை போன்ற வசதிகள் இத்திட்டத்தின் வாயிலாகச் செய்து தரப்படுகின்றன. 10 குடும்பங்களுக்கு ஒரு நவீன கழிவறை, ஒரு குளியலறை, ஒரு குடி நீர்க் குழாய் அமைத்தல், நச்சு நீர்த் தொட்டியிலிருந்து கழிவுகளை அப்புறப்படுத்த வாகனங்கள் சென்றுவர சாலைகள் வசதி செய்து கொடுத்தல்; குடிசையிலிருந்து 50 மீட்டர் தூரத்தில் வாகனங்கள் செல்லத் தக்க சாலைவசதிகள் செய்து கொடுத்தல், குடிசைகளை அடைய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை அமைத்தல்; 40 மீட்டர் இடைவெளியில் தெரு மின் விளக்குப் பொருத்துதல், 3,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்பப் பள்ளி, 10,000 மக்கள் தொகைக்கொரு உயர்நிலைப்பள்ளி, 200 குடும்பங்களுக்கு ஒரு பாலர் பள்ளி, 400 குடும்பங்களுக்கு ஒரு தொழிற்கூடம் அமைத்துக் கொடுத்தல் இத்திட்டத்தின் அம்சங்கள் ஆகும். தவிர, அவரவர் வாழும் இடம் அவரவர்களுக்குச் சொந்தமாக்கப்படும். 1977-80 வரையில் ரூ. 286 இலட்சம் இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டது. 18,338 குடும்பங்கள் பயனடைந்தனர். 1980-81ல் ரூ. 91.70 இலட்சம் செலவில் பணிகள் செய்யப்பட்டன. 7500 குடும்பங்கள் வசதிகள் பெற்றன.

முதற் கட்டப் பணிகள் இவ்வாண்டு ஜூன் மாதத்தில் முடிவடையும்.

**உலக வங்கித் திட்டத்தின் இரண்டாவது கட்டம்:**

இத்திட்டத்தின் மூலமான 50,000 குடும்பங்களுக்கு ரூ.19.1 கோடி செலவில் வசதிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளன. இத்திட்டம் இந்த நிதி ஆண்டில் ஆரம்பித்து 1985ல் முடிவடையும். ஆக மொத்தம் 250 குழந்தைகள் நலப் பள்ளிகள் மற்றும் 15 மருத்துவ மனைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1981-82ஆம் ஆண்டில் ரூ. 150 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு 10,000 குடும்பங்கள் பயனடைவார்கள்.

மேம்பாட்டுத் திட்டங்கள் முடிவடைந்த பிறகு கீழ்க்காணும் முறையில் குடியிருப்பவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக நிதி உதவி செய்யப்படும். இதற்காகச் சுமார் ரூ. 13.7 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அ. மாதவருமானம் ரூ. 200க்குக் கீழ் உள்ளவர்களுக்கு 600 மான்யமாக வழங்குதல்.

ஆ மாத வருமானம் ரூ. 201 லிருந்து ரூ. 600 வரை உள்ளவர்களுக்கு ரூ. 1500 முதல் 3500 வரை கடனாக வழங்குதல். கொடுக்கப்பட்ட கடனை 15 ஆண்டுகளில் மாதத் தவணையில் திருப்பித்தர வேண்டும்.

கடன் தொகையைத் திருப்பிக் கொடுத்த பின்னர் விற்பனைப் பத்திரம் வழங்கப்படும். இத்திட்டத்தினால் பெறப்படும் தொகை ஒரு சுழல் நிதியில் முதலீடு செய்யப்படும்.

**வாரியத்தின் இவ்வாண்டுப் பணிகள்:**

1981-82ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 720 இலட்சம் செலவிட குடிசைப் பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது. ரூ. 400இலட்சம் செலவில் வீடுகள் கட்டுவதற்கும், 75 இலட்சம் சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்திற்கும், ரூ. 150 இலட்சம் உலக வங்கித் திட்டத்திற்கும், ரூ. 70 இலட்சம் பராமரிப்புப் பணிக்காகவும் ரூ.25இலட்சம் வருவாய் ஈட்டுத் திட்டத்திற்காகவும் ஒதுக்கப்படும்.

**வாரியத்தின் வேறு பணிகள்:**

குடிசைப் பகுதிகளில் சிறிய பூங்காக்கள், குழந்தை விளையாட்டுத் திடல்கள் ஏற்படுத்துவதில் வாரியம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. குடிசையில் வாழ்பவர்கள் தம் வீடுகளுக்கு மின் இணைப்புப் பெறுவதற்குத் தடையின்மைச் சான்றிதழ் எளிதாக வழங்கப்படுகிறது. குடிசை வாழ் குடும்பங்களே தங்களுக்குள் ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைத்து நிலச் சொந்தக்காரர்களிடம் இருந்து நிலத்தை வாங்க அனுமதி தரப்படுகிறது.

தண்ணீர் பற்றாக்குறை உள்ள குடிசைப் பகுதிகளில் குடிநீர் வழங்குவதற்காக நான்கு லாரிகள் விரைவில் வாங்கப்படும்.

23 குடிசைப் பகுதிகளில் தொலைத் தூர காட்சிக் கருவிகள் நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**தடுப்புப் பணிகள்:**

புதிதாகக் குடிசைகள் ஏற்படாமல் தடுக்கவும், புதிதாக ஏற்படும் குடிசைகளை அவ்வப்போது அகற்றவும், வடசென்னைக்கு ஒன்றும், தென் சென்னைக்கு ஒன்றும் என இரு காவல் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**சமூக நலப் பணி:**

குடிசைப் பகுதிகளில் சமூக நலப் பணிகளைச் செய்ய சமூக நலக்குழு ஒன்று குடிசை மாற்று வாரியத்தின்கீழ் இயங்கி வருகின்றது. வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல், வங்கிகளின் மூலம் கடன் வாங்கித் தொழில் நடத்த ஏற்பாடு செய்தல், மருத்துவ உதவி செய்தல் திட்டப் பகுதிகளில் குடிசைவாழ் மக்கள் சமூக வாழ்க்கையில் அக்கறை கொள்ளத் தூண்டுதல் ஆகியவை இக்குழுவின் முக்கியமான பணிகளாகும்.

இது தவிர நல்வாழ்வுப் பேரவை என்ற அமைப்பும் சமூகப் பணிகளைச் செய்து வருகின்றது. அதற்கு ஆண்டுதோறும் ஒரு இலட்சம் ரூபாய் மானியமாகக் குடிசைப் பகுதி மாற்று வாரியம் வழங்குகின்றது. மேலும், சமூக நல நிறுவனங்கள் குடிசைப் பகுதிகளில் பணியாற்றுவதற்கான பல வசதிகள், சலுகைகள் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அளிக்கப் படுகின்றன.





# சின்கோனாத் துறையின் சீரிய பணிகள்!

சின்கோனாத்துறை, தமிழ்நாடு அரசால் வணிக அடிப்படையில் நடத்தப்படும் ஓர் அரசுத்துறை நிறுவனமாகும். இத்துறை மலேரியா நோயினை ஒழிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் கொயினா சல்பேட், கொயினா அய்ட்ரோகுளோரைடு மற்றும் இதய நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் குனிடின் சல்பேட் ஆகிய பொருட்களைப் பெருமளவில் தயாரித்து வருகிறது. மேலும், மருந்து மற்றும் வாசனைத் தைலங்களையும் தயாரித்து வருகிறது. 31-3-1981ஆம் நாள் முடிய, இத்துறையில் 1951.76 எக்டேர் பரப்பில் சின்கோனா பயிரிடப்பட்டுள்ளது.

| | | எக்டேர் |
|---|---|---|
| சின்கோனாத் தோட்டம் நீலகிரி | ... | 427.11 |
| சின்கோனாத் தோட்டம் ஆனைமலை | | 1524.65 |
| மொத்தம் | ... | 1951.76 |

கடந்த இரண்டு ஆண்டுகளில் அறுவடை செய்யப்பட்ட நிலங்களில் புதிதாக சின்கோனா பயிரிடப்பட்ட பரப்பின் அளவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | | எக்டேர் |
|---|---|---|
| 1978—79 | ... | 113.00 |
| 1979—80 | ... | 124.50 |

துறையின் வருவாயை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் மருந்து மற்றும் நறுமணம் தரும் தைலச் செடிகளின் சாகுபடியினை வகைகளில் விரிவுபடுத்தும் முயற்சியை இத்துறை மேற்கொண்டுள்ளது. அவைகளில் முக்கியமானவை ஜெரேனியம், யூகலிப்டஸ் சிட்ரியோடரா, யூகலிப்டஸ் க்ளோபுலஸ் முதலியவைகளாகும். 31-3-81ஆம் நாள் முடிய இத்தகைய பயிர்கள் வேளாண்மை செய்யப்பட்டுள்ள நிலப்பரப்புகள் வருமாறு:—

| | | எக்டேர்கள் |
|---|---|---|
| நீலகிரிப் பிரிவு | ... | 712.28 |
| ஆனைமலைப்பிரிவு | | 362.66 |
| மேல் பழனிப் பிரிவு: பேரிஜம் கொடைக்கானல் | ... | 40.25 |
| பெரும்பள்ளம் | ... | 94.00 |
| மொத்தப்பரப்பு | ... | 1209.19 |

நீலகிரி, கோவை மாவட்டங்களில் மட்டும் இயங்கி வந்த இத்துறை, மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேல் பழனி குன்றிலுள்ள வேம்பாடி (பேரிஜம்) என்னுமிடத்திலும் பெரும்பள்ளம் என்னுமிடத்திலும் ஜெரேனியம் பயிரிட்டதன் மூலம் மதுரை மாவட்டத்திலும் தனது வளர்ச்சிப் பணியை மேற்கொண்டுள்ளது.

கூடலூர் அருகிலுள்ள பாடான் துறை என்னுமிடத்தில் ஜாவா சிட்ரோனெல்லா பயிரிடலுக்கான திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனைமலை, சின்

கோனாத் தோட்டத்தில் டயஸ் கோரியா என்னும் மருந்துச்செடி பயிரிடப்படுகிறது. டயஸ்கோரியா கிழங்கிலிருந்து டயோஸ்ஜெனின் என்ற மூலப்பொருள் கிடைக்கிறது. டயோஸ்ஜெனின் எனப்படும் இந்த ஆரம்ப மருந்துப் பொருளிலிருந்து குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரைகளும் மற்றும் கார்டிசோன், கார்டிகோ ஸ்டீராயிட், ஸ்டீராயிட் ஹார்மோன் போன்றவை தயாரிக்கப்படுகின்றன. இந்த மருந்துகளை நல்க வல்ல டயஸ்கோரியாப் பயிரின் மொத்தப் பரப்பளவு இத்துறையில் 95.75 எக்டேர்களாகும்.

கோவை மாவட்டத்தைச் சார்ந்த ஆனைமலையிலுள்ள அரசினர் சின்கோனாத் தோட்டத்திலமைந்திருக்கும் கொய்னாத் தொழிற்சாலை இத்துறையின் தோட்டங்களிலிருந்து அறுவடையாகும் சின்கோனா பட்டையிலிருந்து பல்வேறு வகை கொய்னாப் பொருட்களைத் தொடர்ந்து தயாரித்து வருகிறது.

நீலகிரி மாவட்டம் நடுவட்டத்திலுள்ள மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் உற்பத்தி ஆலை, இத்துறையின் தோட்டங்களிலிருந்து பெறப்படும் சுத்திகரிக்காத தைலங்களைச் சோதனை செய்து, சுத்தப்படுத்தி தரம் பிரிக்கும் பணியினைத் தொடர்ந்து செய்து வருகிறது.

கொய்னாப் பொருட்களின்விற்பனை மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் கிடைத்த வருமானம் வருமாறு:—

| | வெளி நாட்டு ஏற்றுமதி மூலம் | உள் நாட்டு விற்பனை மூலம் |
|---|---|---|
| | (ரூ. இலட்சத்தில்) | |
| 1979—80 | 43.22 | 23.39 |
| 1980—81 | 17.42 | 14.89 |

கடந்த இரு ஆண்டுகளில் மருந்து மற்றும் நறுமணத் தைலங்களின் விற்பனையில் கிடைத்த வருமானம் வருமாறு:—

| | ரூபாய் |
|---|---|
| 1979—80 | 14,24,512 |
| 1980—81 | 23,31,956 |

இத்துறை கடந்த இரண்டு ஆண்டுகளில் ஈட்டிய நிகர இலாபம் வருமாறு:—

| | இலட்சம் |
|---|---|
| 1979—80 | 3.93 |
| 1980—81 | 0.57 (இலட்சம்) மதிப்பீடு) |

உலகச் சந்தையில் கொயினாப் பொருட்களின் விலையில் ஏற்பட்ட சரிவால் 1980-81ல் இத்துறை ஈட்டிய நிகர இலாபம் குறைந்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்பொழுதுள்ள ஊழியர்களின் குடியிருப்புகள் 1940-ஆம் ஆண்டில் கட்டப்பட்டவை. பழுதடைந்த இவ்வீடுகள் தொழிலாளர் நலச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தரத்திற்கேற்றவையாக இல்லை. ஆகவே, இந்தப்பழைய வீடுகளுக்குப் பதிலாகத் தேவையான வசதிகளுடன் கூடிய புதிய தொழிலாளர் குடியிருப்புகளைப் படிப்படியாகக் கட்டித்தரத் திட்டமிடப்பட்டுள்ளது. மின் விளக்கு, கழிப்பறை, குடிநீர் முதலிய வசதிகளுடன் இப்புதிய குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. கடந்த இரு ஆண்டுகளில் மேற்கண்ட வசதிகளுடன் கூடிய வீடுகள் கட்ட செலவிடப்பட்ட விவரம் வருமாறு:

| | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 1979—80 | 6.20 |
| 1980—81 | 8.00 |

## ஆசிரியர்களுக்குத் தமிழ்நாடு அரசின் சலுகைகள்

ஆசிரியர்களுக்கு அண்மையில் மற்றொரு தவணை அகவிலைப்படி 1-3-81 முதல் வழங்கப்பட்டுள்ளது. ஓய்வுபெறும்போது ரூ. 10,000/- வழங்கப்பட வேண்டும் என்பது பற்றி ஆய்ந்து அரசுக்குத் தகுந்த பரிந்துரை வழங்க அண்மையில் மாண்புமிகு நிதியமைச்சர் தலைமையில் உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் 1-6-81 முதல் அரசு அலுவலர்களாக ஆக்கப்படும்போது அனைத்து நிர்வாகப் பொறுப்புகளும் கல்வித்துறையின்கீழ் இருக்குமாறு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அவர்களது முக்கியமான கோரிக்கைகள்: இரண்டாண்டு ஆசிரியர் பயிற்சியைக் கணக்கில் கொண்டு இரண்டு கூடுதல் ஊதிய உயர்வுகள் கொடுக்கவேண்டுமென்பதும் மற்றும் 20 ஆண்டு பணி முடித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் சிறப்பு நிலைத் தகுதி வழங்கப்படவேண்டுமென்பதும் ஆசிரியர்களுடைய கோரிக்கைகளாகும். இக்கோரிக்கைகளை அரசு பரிவுடன் கவனித்து இடைநிலை மற்றும் இளநிலை ஆசிரியர்களுக்கு 1-6-81 முதல் ஒரு ஊதிய உயர்வு வழங்கவும், 20 ஆண்டு பணிமுடித்த அனைத்து இடைநிலை, இளநிலை மற்றும் அதே ஊதிய விகிதத்திலுள்ள மற்ற ஆசிரியர்களுக்கும் 1-6-81 முதல் சிறப்பு நிலை ஊதிய விகிதத்தில் ஊதியம் அளிக்கவும் அரசு ஏற்பளித்துள்ளது. இந்த இரண்டு சலுகைகளை வழங்குவதால் அரசுக்கு ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ. 3.50 கோடி செலவாகும்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடிச் சம்பளம் வழங்கும் கருத்தும், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இலவசக்கல்வி அளிப்பது குறித்த கருத்துருவும் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.



# பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பெருமை மிகு சாதனைகள்

சென்னைப் பெருநகர்வளர்ச்சிக் குழுமம் (எம்.எம்.டி.ஏ). சென்னைப் பெருநகரின் வளர்ச்சியினைத் திட்டமிடவும், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் பொறுப்பேற்றுள்ளது.

உலக வங்கி உதவியுடன் செயலாக்கப்பட்டு வரும் முதலாம் சென்னை நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வீட்டு வசதி, சாலை மற்றும் போக்குவரத்து, குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல், வேலை வாய்ப்பு முதலிய துறைகளில் பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன.

அரும்பாக்கத்தில் 'மனைகளும் பணிகளும்' திட்டமொன்று இவ்வாண்டு முடிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 2200 பெரும்பாலும் ஏழைக் குடும்பங்களுக்கான வீட்டு வசதி செய்யப்பட்டுள்ளது. இதே போன்ற திட்டங்கள் சுமார் 11000 குடும்பங்கள் பயனடையும் வகையில் வில்லிவாக்கம் மற்றும் கொடுங்கையூரில் செயலாக்கப்பட்டு வருகின்றன.

குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 1977-78ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் 28 குடிசைப்பகுதிகளில், அடிப்படை வசதிகளும், சமூக நல வசதிகளும் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு வருகின்றன. மேம்பாட்டுப் பணிகள் மேலும் 20 குடிசை பகுதிகளில் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இவற்றில் வியாசர்பாடி எம்.ஜி.ஆர். நகர் ஆகிய இடங்களில் பணிகள் முடிவடையும் தறுவாயிலிருக்கின்றன. இத்திட்டப் பணிகளின் மூலம் சுமார் 30,000 குடிசைப் பகுதி வாழ் குடும்பங்கள் பலனடையும்.

இத்திட்டத்தின் முக்கியதொரு அம்சமாக குடிசைவாழ் மக்களுக்கு நிலப்பட்டா வழங்க வகை செய்யும் திட்டமொன்று 1980-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் துவங்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் 3800 குடும்பங்கள் முன் பணம் செலுத்திபட்டா பெறும் தகுதி பெற்றுள்ளன.

வில்லிவாக்கம் மற்றும் கொடுங்கையூரில், இவ்வாண்டு 88 சிறு தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் சுமார் 1000 நபர்களுக்கு வேறுபட்ட தொழில் திறன்களில் பயிற்சியளிக்கப்பட்டு அவர்களில் சுமார் 450 நபர்கள் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். மேலும் 400 நபர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

உள்சுற்றுச் சாலை, சாலை-இரயில் பாதை பிரிப்புப் பாலங்கள், சுரங்க நடைபாதைகள் பாலங்கள், நடைபாதை மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகள் முதலிய பணிகளை உள்ளிட்ட சாலை மற்றும் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கத்திப்பாரைச் சந்திப்பையும், வடபழனியையும் இணைக்கும்படி உள் சுற்றுச் சாலையின் ஒரு பகுதி போக்குவரத்திற்கு இவ்வாண்டுதிறந்துவிடப்பட்டுள்ளது.

மேலும் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்றும் திட்டங்களின் கீழ் முன்பே இருந்து வரும் அமைப்பு

களைப் புனரமைக்கவும், பொது குழாயை நம்பி வாழும் மக்கள் மற்றும் குடிசைவாழ் மக்களுக்கு உடனடி நிவாரணம் அளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### சென்னை நகர வளர்ச்சித் திட்டம்—2

இரண்டாவது சென்னை நகர வளர்ச்சித் திட்டமொன்றை செயலாக்குவதற்காக, விரிவான பேச்சு வார்த்தைகளுக்குப் பின்னர், உலகவங்கியுடன் 1981-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒப்பந்தமொன்று முடிவானது. இவ்வொப்பந்தத்தின்படி, ஐந்தாண்டுகாலத்தில் நிறைவேற்றப்பட்டு இருக்கும் இத்திட்டத்திற்காக, உலக வளர்ச்சிக் கழகத்திடமிருந்து (I.D.A) ரூ. 35.28 கோடி கடனாகக் கிடைக்கும். ரூ.73.9 கோடி மொத்த செலவில் செயலாக்கப்படவிருக்கும் இத்திட்டம் கீழ்க்காணும் பணிகளை உள்ளிட்டுள்ளது.

மொகப்பேர், நெற்குன்றம் ஆகிய இரு இடங்களில் சுமார் 15,000 பெரும்பாலும் ஏழைக் குடும்பங்களுக்கு 'வீட்டு வசதி வழங்கும் மனைகளும் பணிகளும் திட்டங்கள், சிறுதொழிற் கூடங்கள் அமைத்தல், பாலர் பள்ளிகள், மருத்துவ மையங்கள் போன்ற சமூகப்பணிகள் இத்திட்டத்தில் அடங்கும்.

குடிசைப் பகுதி மேம்பாட்டு பணிகள், சுமார் 50,000 குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்குப் பயனளிக்கும். இத்திட்டத்தில் மேற்படி குடும்பங்களுக்கு வீட்டை மேம்படுத்துவதற்கான கடனுதவியும், வீட்டு மனைப் பட்டா பெற வசதியும் செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ், தாழ்வான இடங்களில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளில் வெள்ளச் சேதம் ஏற்படுவதைத் தடுக்கும் வண்ணம் வடிகால்கள் அமைக்க வழி செய்யப்பட்டுள்ளன.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சுமார் 555 பேருந்துகள் வாங்குவதற்கும், பணிமனைகள் சீரமைப்பதற்கும் வகை செய்யப்படும். உள் வட்ட சாலையை மேலும் 6 கி.மீ. நீளத்திற்கு அமைப்பதற்கும், சென்னை—திருவள்ளூர் நெடுஞ்சாலையை மேம்படுத்துவதற்குமான பணிகள் மேற்கொள்ளப்படும்.

நகரப் பணிகளை பராமரிப்பதற்கும், குப்பைகூளங்களைஅகற்றுவதற்கும் சென்னை மாநகராட்சிக்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் சாதனங்கள் முதலியவற்றுக்கு வகை செய்யப்படும்.

### மற்ற திட்டங்கள்

மறைமலை நகர் என்னும் புது நகரம் இக்குழுமத்தால் இறுதி கட்டத்தில் சுமார் 1,00,000 மக்கள் வசிக்கும் வகையாக அமைக்கப்பட்டு வருகிறது. முதல் குடியிருப்புப் பகுதியில் பணிகள் முடிவடைந்து வருகின்றன. மேலும் இரண்டு குடியிருப்புப் பகுதிகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. குறைந்த வருவாயினருக்கான 144 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டு விட்டன. மேலும் 504 குறைந்த வருவாயினருக்காக வீடுகளும் 30 நடுத்தர வருவாயினருக்கான வீடுகளும் கட்டப்பட்டு வருகின்றன.

மேலும் தொழிற்கூடப் பகுதிகள் உருவாக்கப்பட்டு பல தொழிற்சாலைகள் கட்டப்பட்டு வருகின்றன. சில தொழிற்கூடங்கள் பணியாற்றத் துவங்கி விட்டன.

### மணலி

சென்னைப் பெருநகரின் வட பகுதியில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியினை ஈடுசெய்யும்வகையில் அங்கு வீட்டு வசதியினைப் பெருக்கும்பொருட்டு இக்குழுமம் மணலியில் வீட்டுவசதித் திட்டமொன்றை செயல்படுத்தி வருகிறது.

இதுவரை சுமார் 400குறைந்த வருவாயினருக்கான வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் 550 வீடுகள் முடிவடைந்து வருகின்றன.

### சிறப்புத் திட்டங்கள்

சென்னை நகர மையப்பகுதிகளில் நிலவும் நெருக்கடியினைத் தவிர்ப்பதற்காக, கொத்தவால் சாவடி மொத்த விற்பனை அங்காடியினை கோயம்பேட்டிற்கு மாற்றும் திட்டமும், கோயம்பேடு, ஆலந்தூர், மாதவரம் ஆகிய இடங்களில் பேருந்துமற்றும் சுமை வாகன முனைகள் நிறுவும் திட்டமும் தீட்டப்பட்டு வருகின்றன. இத்துடன் கொரட்டூரில் ஒரு இரும்பு மற்றும் கடினப் பொருள் அங்காடியினை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான நிலத்தைக் கையகப்படுத்தும் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.



# தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் சாதனைகள்

# 1980-81



தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம், திட்டமிட்ட கோழி வளர்ப்புப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதெற்கென தொடங்கப்பட்டது.

இந்நிறுவனம், வணிகம், விரிவாக்கம் ஆகிய இருவகைப் பணிகளையும் மேற்கொண்டுள்ளது.

தீவனக்கலவை நிலையங்கள், விற்பனை மையங்கள், அரசூர் (கோவை மாவட்டம்) மற்றும் கப்பலூரில் (மதுரை மாவட்டம்) உள்ள வீரிய இனக் குஞ்சு பொரிப்பகங்கள் ஆகியவை வணிகப் பிரிவினைச் சார்ந்தவை. டாப்கோ வளர்ப்புப் பண்ணை மற்றும் விரிவாக்க மையங்கள் மட்டுமே விரிவாக்கத்துறையைச் சார்ந்தவை.

**கோழித் தீவனக் கலவை நிலையங்கள் :**

1. நந்தனம் (சென்னை), 2. கொட்டப்பட்டு (திருச்சி), 3. கப்பலூர் (மதுரை) 4. திருப்பூர் (கோவை).

கடந்த ஐந்தாண்டுகளுக்கான தீவனத் தயாரிப்பும் விற்பனையும் வருமாறு

| ஆண்டு | தீவன உற்பத்தி (மெட்ரிக் டன்னில்) | விற்பனை (மெட்ரிக் டன்னில்) |
|---|---|---|
| 1976—77 | 4,918 | 4,827 |
| 1977—78 | 5,772 | 5,375 |
| 1978—79 | 5,650 | 5,600 |
| 1979—80 | 7,683 | 7,590 |
| 1980—81 (1980 டிசம்பர் வரை) | 6,045 | 6,116 |

**விற்பனை மையங்கள் :**

கீழ்க்கண்ட மாவட்டங்களில், துணை மேலாளர்கள் பொறுப்பில் இயங்கும் விற்பனை மையங்கள் உள்ளன.

1. சென்னை, 2. செங்கல்பட்டு, 3. வேலூர், 4. சேலம், 5. மதுரை, 6. திருச்சிராப்பள்ளி, 7. திருநெல்வேலி, 8. கோயம்புத்தூர்.

கடந்த ஐந்தாண்டுகளுக்கான விற்பனை விவரம் வருமாறு :

| ஆண்டு | விற்பனை | |
|---|---|---|
| | முட்டைகள் (எண்ணிக்கை) | கோழி இறைச்சி (மெட்ரிக் டன்) |
| | இலட்சம் | |
| 1976—77 | 137.07 | 29.144 |
| 1977—78 | 180.30 | 67.421 |
| 1978—79 | 228.34 | 133.245 |
| 1979—80 | 255.45 | 171.862 |
| 1980—81 | 201.68 | 97.602 |
| (1980 டிசம்பர் வரை) | | |

**இதர விற்பனைப் பணிகள் :**

**பன்றி இறைச்சி விற்பனை :**

தமிழக அரசின் தலைமைச் செயலகத்திலும், மாநகராட்சி அலுவலக வளாகத்திலும் சிற்றுண்டிச் சாலைகள் திறந்து, கோழி முட்டை, கோழி இறைச்சி கொண்டு தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களை நியாயமான விலையில் டாப்கோ விற்பனை செய்கிறது.

சென்னை மாநகரில் விற்பனைப் பணிகளை விரிவாக்கும் பொருட்டு வாய்ப்புள்ள இடங்களில் கோழி இறைச்சிக்கடையோடு இணைந்த சிற்றுண்டிச் சாலைகளை அமைப்பதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுபோன்ற இரு சிற்றுண்டிச்சாலைகள் ஏற்கனவே கிண்டி தொழிற்பேட்டையிலும், பாந்தியன்சாலையிலும் தொடங்கப்பட்டுள்ளன அனைத்து மாவட்டங்களில் விற்பனைப் பணிகளை விரிவாக்குவதற்கான திட்டமொன்று தயாரிக்கப்படுகிறது உதகமண்டலம் மாவட்டத்தில் உள்ள குன்னூரில் ஒரு மண்டல அலுவலகம்

திறக்கப்பட உள்ளது அதனை மையமாகக் கொண்டு, வெல்லிங்டன், அரவங்காடு ஆகிய இடங்களில் திறக்கப்படும் விற்பனைப்பிரிவுகள் விற்பனையைப் பெருக்கும் பணியில் ஈடுபடும், இதன் வாயிலாக, முட்டைகள், கோழி இறைச்சி இவற்றின் விற்பனை உயரும், தர்ம புரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் ஒரு புதிய விற்பனைப் பிரிவும், முட்டை, கோழிஇறைச்சி விற்பனையைப் பெருக்கிட, காஞ்சிபுரத்தில் மண்டல் அலுவலகமும் திறக்கப்பட்டுள்ளன

சென்னையிலும், கோவையிலும் உள்ள இராணுவ நிலையங்களுக்கு 1980-81, 1981-82ஆம் ஆண்டுகளுக்கு முட்டை வழங்குவதற்கான ஒப்பந்தம் டாப்கோவிற்கு அளிக்கப்பட்டுள்ளது இதே போன்று, தென் ரயில்வேயில் சென்னை, கோவை ரயில் நிலையங்களுக்கு முட்டை வழங்குவதற்கான ஒப்பந்தமும் டாப்கோவிற்கே கிடைத்துள்ளது

**குஞ்சு பொரிப்பகம், அரசூர் (கோவை மாவட்டம்)**

'டாப்கோ' வணிக நோக்கில் கோழி வளர்ப்போரின் தேவைகளை உணர்ந்து, அரசூரில் ஒரு குஞ்சு பொரிப்பகத்தை அமைத்தது. இப்பொரிப்பகம் தாயினக் கோழிகளைவைத்து வளர்த்துப் புதிய குஞ்சுகளை உருவாக்குவதற்குப் பொருத்தமான சூழலில் அமைந்துள்ளது

**கப்பலூர் (மதுரை மாவட்டம்) குஞ்சு பொரிப்பகத்தை வணிகமயமாக்குதல் :**

வீரிய இனக்குஞ்சுகளுக்கு வணிக போக்கில் தேவை அதிகம் எழுந்துள்ளதால், அரசூரில் வெற்றிகரமாக வணிகப் பொரிப்பகத்தை நடத்திவரும் அனுபவத்தைக் கொண்டு, கப்பலூரில் உள்ள தூய இனப்பொரிப்பகம், வணிகப் பொரிப்பகமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது இங்கு "எச். எச். 260" என்ற வீரிய இனமுட்டையிடும் தாய்க் கோழிகள் காக்கப்பட்டு வருகின்றன.

கோழி விற்பனையில் டாப்கோ ஆற்றிய சாதனை கீழே கொடுக்கப்படுகிறது :—

| ஆண்டு | விற்பனை செய்த கோழிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1976—77 | 1.28 இலட்சம் |
| 1977—78 | 1.72 இலட்சம் |
| 1978—79 | 1.07 இலட்சம் |
| 1979—80 | 1.23 இலட்சம் |
| 1980—81 (1980 டிசம்பர் வரை) | 1.24 இலட்சம் |

1980-81ஆம் ஆண்டின் சாதனை கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் சிறப்பாகவே அமைந்துள்ளது.

**உருவாகும் புதிய திட்டங்கள் :**

**1. உலக வங்கி உதவியுடன் கோழி வளர்ப்புத் திட்டம் :**



ரூ. 38.78 கோடி செலவில் உலக வங்கியின் உதவியோடு முட்டைக் கோழி மற்றும் இறைச்சிக் கோழிப்பண்ணைகள் நிறுவிக் கோழி வளர்ப்பினை மேம்படுத்தும் திட்டமொன்று அரசின் கவனத்தில் உள்ளது.

**2 நகர் எல்லை வளர்ச்சித் திட்டம் :**

நிலமற்ற உழைப்பாளிகள் மற்றும் ஏழை விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கி, வாழ்வினை வளப்படுத்தி, அவர்கள் வேலை தேடி நகருக்குள் குடிபெயர்வதைத் தடுப்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். சென்னையைச் சுற்றி 80. கி. மீ. தூரம் வரையுள்ள புறநகர்ப்பகுதி இதன் கீழ் வரும். ரூ. 33.05 இலட்சம் செலவில் 1,000 கோழிப் பண்ணைகள் அமைப்பதற்கான திட்டம் ஒன்று அரசின் ஏற்பினை எதிர் நோக்கியுள்ளது.

**3 சென்னைக்கருகே வாத்துப் பண்ணை நிறுவும் திட்டம் :**

சென்னைக்கருகே வாத்துப் பண்ணை அமைப்பதற்கான திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. இதன் கீழ் வாத்துப் பண்ணை ஒன்று நிறுவிட, இங்கிலாந்து நாட்டிலிருந்து 500 வாத்துக் குஞ்சுகள் இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ரூ. 27.91 இலட்சம் செலவு கொண்ட இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இதுவே மாநிலத்தின் முதல் வாத்துப் பண்ணையாக இருக்கும். அதிக முட்டையிடும் சிறப்பின வாத்துக்களை வளர்க்கும் ஆர்வத்தைத் தோற்றுவிப்பதே இத்திட்டத்தின் முதன்மைப் பணியாகும். கருவுள்ள முட்டைகள் ஒரு நாள் வயது வாத்துக் குஞ்சுகள், வாத்துகள் ஆகியவை விவசாயிகளுக்கு வழங்கப்படும். இந்தப் பண்ணை 1982-83இல் 40,000 வாத்துக் குஞ்சுகளும், 1983-84-ஆம் ஆண்டுக்குப் பிறகு 80,000 குஞ்சுகளும் வழங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது. விவசாயிகள் நவீன முறையில் இவற்றை வளர்ப்பதற்கு ஊக்கமளிக்கப் படும்.



# தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம்

**1979-80** ஆண்டுகளில், 60,000 மெ.டன் இந்திய பச்சை அரிசியும், 5000 மெ.டன் குறுனையும் வெளிநாடுகளுக்கு (கென்யா, பெரு, க்யூபா, மேற்கு ஜெர்மனி) ஏற்றுமதி செய்யப்பட்டது.

மண்ணெண்ணெய் பொதுமக்களுக்கு சில்லறை அங்காடிகள் மூலமாக தமிழகம் முழுவதும் விநியோகிக்கப்படுகிறது.

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கட்டுமானப் பிரிவு**

தமிழ்நாடு, நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் கட்டுமானப் பிரிவு நெல், அரிசி, சர்க்கரை மற்றும் உணவுப் பொருட்களை சீரான முறையில், விஞ்ஞான முறைப்படி சேமித்து வைக்க சேமிப்புக் கிடங்குகளை தமிழகத்தில் எல்லாப் பகுதிகளிலும் கட்டி வருகிறது.

கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் தேவைக்கேற்ப அனைத்து அத்தியாவசிய பொருட்களும் உடனுக்குடன் குறைந்த விலையில் கிடைக்கச் செய்யும் பொருட்டு தமிழக அரசு 16,000 நியாய விலைக் கடைகளைத திறந்துளளது. இந்த கிராம நியாய விலைக்கடைகளின் தேவைக்கேற்ப கடந்த ஓராண்டில் மட்டும் வட்டத் தலை நகரங்களில் 25 இடங்களில் 40,120 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் ரூபாய் 90 இலட்சம் செலவில் கட்டப்பட்டு உள்ளன. மேலும் 9 வட்டத் தலை நகரங்களில் 26,100 மெட்டிரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் துரிதமாக கட்டப்பட்டு வருகின்றன.

**நவீன அரிசி ஆலைகளின் கடந்த ஓராண்டு கால சாதனை**

13 நவீன அரிசிஆலைகள் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் நிறுவப்பட்டு இந்நிறுவனத்தின் கீழ் இயங்கி வருகின்றன.

எந்தவொரு தனியார் ஆலையும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்காக கூலிக்கு நெல் அரைத்துக் கொடுக்க முன் வருவதில்லை. எனவே இருக்கின்ற நவீன அரிசி ஆலைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. புதிதாக மேலும் பல நவீன அரிசி ஆலைகளை அமைப்பதற்கு அதிக அளவில் பொருள் செலவு ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு தற்போது உள்ள மணிக்கு 2 டன் உற்பத்தி திறன் கொண்ட 7 நவீன அரிசி ஆலைகளை மேலும் மணிக்கு 1.5 முதல் 2 டன் நெல் அதிகப்படியாக உற்பத்தி செய்யும்படி விஸ்தரிக்கப்பட்டுவருகின்றன. இதனல் 13 நவீன அரிசி ஆலைகளின் மொத்த உற்பத்தித் திறன் மாதத்திற்கு 1.10,000 டன்னிலிருந்து 1.45,000 டன் ஆக உயரும்.

புதிதாக ஒரு நவீன அரிசி ஆலையை அமைப்பதினால் சுமார் ரூபாய் 15 லட்சம் வரை





செலவாகும். இப்படி அமைக்கப்படும் புதிய நவீன அரிசி ஆலை ஆண்டொன்றுக்கு 8,000 டன் நெல்மட்டுமே அரைக்கும். ஆனால், உற்பத்தித் திறனை மட்டுமே பெருக்குவதால் தற்போதைய திறனைப் போல இரு மடங்கு பெறுவதுடன் செலவும் குறைகிறது.

இந்த ஒரு மாத காலத்தில் இந்த 7 நவீன அரிசி-ஆலைகளில் மூன்று அதிகரிக்கப்பட்ட உற்பத்தித் திறனுடன் இயங்க ஆரம்பித்து விட்டன. மற்ற நான்கும் வருகின்ற ஒரு மாத காலத்திற்குள் அதிகரிக்கப்பட்ட உற்பத்தித் திறனுடன் இயங்கும்.

நடப்பு 6வது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் சுமார் ரூபாய் ஒரு கோடி செலவில் அதிக உற்பத்தி திறன் கொண்ட நவீன அரிசி ஆலைகளை அமைப்பதற்கு தமிழக அரசின் திட்டக்குழு உத்தேசித்துள்ளது. இதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறது. இடம் தேர்வு செய்யப்பட்டவுடன் நவீன அரிசி ஆலை நிறுவுவதற்கான அனைத்துப்பணிகளும் மேற்கொள்ளப்படும். இந்த ஆலைகளுக்கான இடம் தேர்வு செய்யப்பட்ட இரண்டு ஆண்டு காலத்திற்குள் நிறுவி முடிக்கப்படும். இந்த ஆலைகள் முற்றிலும் நமது நாட்டிலேயே உற்பத் செய்யப்பட்ட இயந்திரங்களைக் கொண்டதாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

**காவலர் நல வாழ்வுத் திட்டம்**

தமிழக அரசு தமிழ்நாட்டில் காவல் துறையினருக்கு மலிவு விலையில் அத்தியாவசியப் பண்டங்களை வாங்கி உதவிடும் சீரிய நோக்குடன் காவலர் நல வாழ்வு திட்டத்தை 1980 அக்டோபர் மாதத்திலிருந்து தொடக்கி அமல் செய்து வருகிறது. இந் நல வாழ்வுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள சுமார் 48,000 காவலர்களின் குடும்பங்களுக்கு மிக மலிவு விலையில் கீழ்க்காணும் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன:—

| | ஒரு கிலோவுக்கு | ரூ. |
|---|---|---|
| அரிசி | ,, | 1.00 |
| சர்க்கரை | ,, | 2.10 |
| கோதுமை | ,, | 0.70 |
| ரவை | ,, | 1.02 |
| மைதா | ,, | 1.05 |
| பாமலின்எண்ணெய் | ,, | 4.10 |
| து. பருப்பு | ,, | 2.50 |
| உ. பருப்பு | ,, | 2.75 |

**விதவைகள், ஊனமுற்றோர் மற்றும் முதியோர்க்கு இலவச அரிசி வழங்கும் திட்டம்:**

தமிழக அரசு தமிழக மெங்கும் உள்ள ஆதரவற்ற விதவைகள், ஊனமுற்றவர்கள் மற்றும் முதியவர்களுக்கு வாரம் ஒன்றுக்கு 1 கிலோ அரிசியை இலவசமாக வழங்கும் திட்டத்தை சமுதாய நோக்குடன் கடந்த 1980 நவம்பர் முதல் செயல்படுத்தி வருகிறது. இதன் பயனாக தமிழக மெங்கும் உள்ள 1,51,000 ஆதரவற்ற விதவைகளும், உடல் ஊனமுற்றோரும், முதியோரும் நல்வாழ்வு பெறுகின்றனர்.

**தீயணைப்புப் படையினர் நல் வாழ்வுத் திட்டம்**

தமிழக அரசு காவலர் நல் வாழ்வுத் திட்டத்தைப் போன்றே தமிழ் நாடெங்கிலும் உள்ள தீயணைப்புப் படையினர்க்கும் மலிவு விலையில் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கும் திட்டத்தை ஜனவரி 1981 முதல் அறிமுகப் படுத்தியுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இத் திட்டத்தினையும் செயல் படுத்தி வருகிறது. இத்திட்டத்தினால் தமிழகமெங்கிலுமுள்ள சுமார் 56,000 தீயணைப்புப் படையினரின் குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றன.

# தமிழகத்தில் சாலை வளர்ச்சிப் பணிகள்

கடந்த 2½ ஆண்டு காலத்தில் அதாவது 1.7.77 முதல் 20.2.80 வரை சுமார் 110 கி.மீ. நீளத்திற்கு புதிய சாலைகளும், 1436 கி.மீ. நீளத்திற்கு கப்பி பரத்தியும். 41 கி.மீ. நீளத்திற்கு மேம்பாடுகளையும், சுமார் 1000 கி.மீ நீளத்திற்கு தார் பரத்தியும், 1285 சிறுபாலங்களையும், 128 பாலங்களையும், திருச்சியில் பாலக்கரை அருகே ஒரு வாகன போக்குவரத்திற்கான சுரங்கப் பாதையும், சென்னையில் 8 நடைவழிச் சுரங்கப்பாதைகளும், ரூ. 19 கோடி செலவில்செய்து முடிக்கப்பட்டுள்ளது.



கடந்த 9.6.80லிருந்து செயல் படுத்தப்பட்டுள்ளசாலை மேம்பாடு பணிகள் தேசிய நெடுஞ்சாலை (நகர்ப்புறப்பகுதி) மற்றும் மாநில நெடுஞ்சாலைத் திட்டங்கள்:—

*1979-80ஆம்* ஆண்டில் ரூ. *69.00* இலட்சம் செலவில் *3* பெரிய பாலங்களுக்குகான ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது. மேலும் 1980-81ல் மாநிலநெடுஞ்சாலைகளில் மேற்கொள்ள ரூ. *218.00* இலட்சம் செலவில் 4 பணிகளுக்கும், மாவட்ட நெடுஞ்சாலைகளில் மேற்கொள்ள ரூ. *101.90* இலட்சம் செலவில் 9 பணிகளுக்கும், மாவட்ட பிற சாலைகளில் மேற்கொள்ள ரூ. *177.30* இலட்சம் செலவில் 8 பணிகளுக்கும், ஆக 21 பணிகளுக்கென ரூ. 497.20 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 1981-82ஆம் ஆண்டிற்கு 22 பணிகளுக்கென அரசு ரூ. 573.85 இலட்சம் ஒப்புதல் வழங்க உள்ளது. பெருகிவரும் சாலைப் போக்குவரத்தின் தேவைக்கு ஏற்ப கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏராளமான சாலைப்பணிகளுக்கு இவ்வரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**தேசிய நெடுஞ்சாலை (நகர்ப் புறப் பகுதி :**

ரூ. *100.00* இலட்சம் செலவில் பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையை புது ஆவடி சாலைச் சந்திப்பிலிருந்து வைணவக்கல்லூரி சந்திப்பு வரை அகலப்படுத்துதல் (தேசிய நெடுஞ்சாலை 4இல் கி.மீ 5/4 முதல் 7/6 வரையில்)

**மாநில நெடுஞ்சாலைகள :**

ரூபாய் *122.00* இலட்சம் செலவில் திருச்சியிலிருந்து, திருவெறும்பூர் பெல் தொழிலகம் வரையுள்ள சாலையை நான்கு வழித் தடங்கள் கொண்ட சாலையாய் அகலப்படுத்தி மேம்படுத் படுத்துதல் (இப்பணியின் செலவில் 50 சதவிகிதத்தை பெல் நிறுவனம் ஏற்க ஒப்புக் கொண்டுள்ளது).

ரூபாய் *175.00* இலட்சம் செலவில் பவானி-மேட்டூர்சாலையில் பவானியில், காவேரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டிருக்கும் உறுதியற்ற பாலத்தை புதுப்பித்து கட்டுதலும், அத்துடன் ''எல்லிஸ்ஸாடில் என்னுமிடத்தில் மதகுடன் கூடிய பாலத்திற்கு பதிலாக போக்குவரத்தின் உபயோகத்திற்கென தனியான தொரு பாலத்தைக் கட்டுதல். இது தவிர ரூ. 74 இலட்சம் செலவில் இராணிப்பேட்டையில் பெல்



தொழிலக பகுதிக்கு செல்லும் சாலையினை மேம்பாடு செய்யும் பணி அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

சேலம் இரும்பு உருக்காலைக்கென ரூ. 157.00 இலட்சம் செலவில் சூரமங்கலம் - தாரமங்கலம் சாலையை மேம்பாடு செய்ய மேற்கொள்ளப்பட்ட முக்கியமானதொரு பெரிய பணியானது சமீபத்தில் முடிக்கப்பட்டது.

**ஊரகச் சாலைகள் திட்டம் :**

அடிப்படைத் தேவைதிட்டத்தின் கீழ் சாலை வசதி இல்லாத 1500க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு படிப்படியாக எல்லாக் காலங்களுக்கும் உகந்தாற்போல் சாலைகளைஅமைக்க திட்டம் மேற்கொண்டுள்ளது.

1979-80ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 3.00 கோடி செலவிடப்பட்டது. 1980-81ல் இதனை ரூ. 6.00 கோடியாக இரட்டிப்பாக்கப்பட்டது. 1981-82ல் இத்திட்டத்திற்கு ரூ. 7.00 கோடியாக, மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 253 கி.மீ நீளமுள்ள சாலைகள் போடப்பட்டு அதன் மூலம் 110 முக்கிய கிராமங்களும் 135 ஒட்டியுள்ள கிராமங்களும் பயனடைந்துள்ளன. 6-வது திட்ட காலத்தில், இத்திட்டத்திற்கென திட்டமிடப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு ரூ. 40 கோடியாகும்.

**பழங்குடியினர் துணை திட்டம் :**

கொடைக்கானல், உதகமண்டலம், கோத்தகிரி, கூனூர் போன்ற மலைப்பகுதிகள் பல வருடங்களாக பூகோள மற்றும் வானிலைக்கு ஏற்ப பல திட்டங்கள் மூலம் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. ஆனால் கல்ராயன்யன், கொல்லிமலை, அச்சமலை, ஏலகிரி, ஜவாதுமலை போன்ற பகுதிகளில் உள்ள பழங்குடியினர் வசிக்கும் கிராமங்கள் இதுநாள் வரை எவ்வித திட்டங்கள் மூலனம் மேம்படுத்தப்படாமல் இருந்தன. அதனால் இவ்வரசு ரூ. 209.25 இலட்சம் செலவில் 171.10 கிலோமீட்டர் நீளத்திற்கான சாலைகளை 12 பணிகள் மூலம் செயலாக்க ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகள் யாவும் 1978-83 வரையிலான ஐந்தாண் காலத்திற்குள் முடிக்கப்படவேண்டும். இப்பன்னிரண்டு பணிகளில் இதுவரை முடிக்கப்பட்டுள்ள இரு பணிகளின் விவரம் வருமாறு:

1. **பச்சிமலை பகுதி (சேலம் மாவட்டம்)**



செங்காட்டுப்பட்டி உச்சியில் ஒடைக்காடு புதூர் சாலையை அமைத்தல் 10.20 கி.மீ மதிப்பீடு ரூ. 20 இலட்சம்.

2. **ஜவ்வாது மலைப்பகுதி (வட ஆர்க்காடு மாவட்டம்)**

மட்ராப்பள்ளியிலிருந்து புதூர் நாடு வரை சாலை மேம்பாடு செய்தல். 14.30 கி.மீ. மதிப்பீடு ரூபாய் 40 இலட்சம்.

**வறட்சி நிவாரணப் பணிகள்:**

தமிழ்நாட்டில் பருவமழை தவறியதின் விளைவாக ஏற்பட்டுள்ள வறட்சியினால் துயர்படும் மக்களுக்கு உதவுவதற்கென தமிழ்நாடு அரசு வறட்சி நிவாரணப்பணிகளை மேற்கொண்டுள்ளது. முதல் கட்டமாக ரூபாய் 3 கோடி செலவில் 13 வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சாலை பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பின் வரும் பணிகளை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

1. தற்போதுள்ள சாலைகளை தேவையான அளவிற்கு அகலப்படுத்தி மேம்பாடு செய்தல்.
2. சாலை மட்டத்தை நீர் மட்டத்திற்குமேல் உயர்த்தியமைத்தல்
3. விபத்துக்களை தடுக்க சாலை வளைவுகளை மேம்பாடு செய்தல்.
4. சாலையில் தேவைப்படும் இடங்களை பாலம் அல்லலது சிறு பாலங்களை புதிதாகவோ அல்லது புதுப்பித்தோ கட்டுதல்.

இத்திட்டத்தினை செயலாற்றுவதன் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அனேக மக்களுக்கு வேலைவாய்ப்பினை கொடுத்து அதன் மூலம் அப்பகுதிகளில் நிலையான பொது வசதிகளை ஏற்படுத்துதல் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்திற்காக ஒதுக்கப்படும் முதலீடு தரமுள்ள சாலைகள் நிலையான வடிகால் வசதி, குடிநீர் மற்றும் பயிர்களுக்கான நீர் இவற்றிற்கான பாசனவசதி போன்ற நிலையான பணிகள் அப்பகுதிகளில் செய்யப்படுகின்றன.

**மீனவர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள்**

மீனவர்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு போதியசாலை வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்காக இவ்வரசு முதல் தடவையாக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 2.00 கோடி ஒதுக்கீடு செய்து ஒப்புதல் அளித்துள்ளது.



ரூ. 93.50 இலட்சத்தில் 84.7 கி.மீ. நீளத்திற்கு இம்மாதிரியான சாலைகளை அமைத்திட 37 பணிகளுக்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டமானது 1979-80ல் துவங்கப்பெற்று அவ்வாண்டில் ரூ. 14.37 இலட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. பெரும்பாலான பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

1980-81ல் இத்திட்டத்தின் கீழ் ரூ. 30 இலட்சம் செலவிடப்பட்டு 5 பணிகள் முடிக்கப்பட்டன. 1981-82ல் ஆண்டிற்கு ரூ. 30 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

1981-82ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 2-ஆம் கட்டி பணியாக மேலும் ரூ.101 இலட்சத்திற்கு 40பணிகளை மேற்கொள்ள அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

**தன்னிறைவுத் திட்டம்:**

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் தக்க இணைப்புச் சாலைகள் போதிய குடிநீர் வசதிகள், கல்விக் கூடங்கள் மற்றும் ஏனைய அடிப்படை தேவைகள் அனைத்தையும் பெற்றுத் தன்னிறைவு கொண்டதாக விளங்கஇத்திட்டம் சென்ற ஆண்டில் துவக்கப்பட்டு முதல் கட்டமாக 69 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் ரூ. 16.44கோடி மதிப்புள்ள பணிகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கி முதற்கண் அதற்கென இத்திட்டம் மூலம் 1980-81ல் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் வருமாறு.

| பணிகள் | எண்ணிக்கை |
|---|---|
| 1. இணைப்புச் சாலைகள் | 4,220 கி.மீ. |
| 2. ஆதிதிராவிட மக்கள் குடியிருப்பு மற்றும் சுடுகாட்டிற்கு செல்லும்பாதை | 950 கி.மீ. |
| 3. சிறுபாலங்கள் | 4,150 |
| 4. கல்விக்கூடங்கள் | 1,364 |
| 5. சிறுபாசனம் | 683 |
| 6. மகப்பேறு மற்றும் குழந்தை காப் பகங்கள் | 828 |
| 7. கிராமப்புற மருந்தகம் | 71 |

மேற்கண்டவற்றில் 75 சதவிகிதப்பணிகள் 80-81ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ளவை 81-ஆம் ஆண்டு ஜூனுக்குள் முடித்துவிட திட்டமிடப்பட்டுள்ளது.

**பேருந்து வழித்தடங்களை மேற்கொள்ளும் திட்டம்:**

இத்திட்டம் 1960-61ல் துவங்கப்பெற்று ஆனால் பின்னர் 1974-ல் கைவிடப்பட்டது. 1979-80ல் மீண்டும் இத்திட்டத்தை துவக்கி இரட்டிப்பு வேகத்துடன் செயல்படுத்த ரூ. 600 இலட்சம் செலவில் 2510 கி.மீ. நீளமுள்ள பேருந்து வழித்தடங்களை மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டது. 1979-80ல் ரூ. 600 இலட்சம் செலவில் 2000கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டன. 1980-81ல் மேலும் 3146கி.மீ. நீளமுள்ள பேருந்து வழித்தடங்களை மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் ரூ. 10கோடி செலவில் 2000 கி.மீ நீளமுள்ள சாலைகள் முடிக்கப்பட்டுள்ளன. முடிவடையாத பணிகள் 1981-82ல் தொடரப்பட்டு அப்பணிகளுக்கென ரூ. 13 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயலாக்கும் போது, தன்னிறைவுத் திட்டத்தின்கீழ்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பேருந்து செல்லும் வழித்தடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

## மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனம்

**1977-ஆம்** ஆண்டு ஜூன் திங்கள் முதல் ஒரு இயக்குநரின் கீழ் தனித் துறையாக இந்நிறுவனம் மாற்றப்பட்டுள்ளது. தமிழக அரசுத்துறைகளைச் சார்ந்த சுமார் 6,000க்கு மேற்பட்ட மோட்டார் வாகனங்களைப் பராமரிக்கும் பொறுப்பு இந்நிறுவனத்துனுடையது.

கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு வகைப்படும் 69,000 பழுதுப் பணிகளை அரசு வண்டிகளுக்கு இந்நிறுவனம் செய்துள்ளது. ரூ. 224.28 இலட்சம் மதிப்புள்ள உதிரிப் பாகங்கள், டயர், டியூப் மற்றும் பெட்ரோல் வகைகளை விநியோகம் செய்துள்ளது.

இந்நிறுவனம் சுமார் 850 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும், இந்நிறுவனத்தில் தொழில் நுட்பக் கல்வியில் தேறிய சிலபேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பின், வேலை காலியாக இருந்தால் இந்நிறுவனத்தில் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இந்நிறுவனத் தொழிலாளர்களைத் தனிச் சிறப்புப் பயிற்சி பெறவும் அனுப்பப்படுகின்றனர்.

எதிர்காலத் திட்டங்கள்: தற்பொழுது இந்நிறுவனம் 9 பணிமனைகளையும், இரண்டு பணி நிலையங்களையும், ஒரு கொள்முதல் பண்டகச்சாலையையும் பெற்றுள்ளன. சென்னை, மதுரை, சேலம், தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள அரசுப் பணிமனையில் பெட்ரோல்-டீசல் பங்குகள் அமைக்கப்பட்டுள்ளன, வாகனங்களில் உள்ள எரிபொருள் செலுத்தும் குழாய்களைப் பழுதுபார்க்க திருச்சி பணிமனையில் ரூ. 2 இலட்சம் செலவில் ஒரு பணிநிலையப் பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டந்தோறும், அரசுப் பணிமனைகள் ஏற்படுத்துவதே அரசின் கொள்கையாகும்.

வேலூர், புதுக்கோட்டை, தர்மபுரி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் அரசு புதிய பணிமனைகள் துவங்க ஆரம்ப-ஆயத்த, வேலைகள் விரைவாக எடுக்கப்படுகின்றன. தலைமைச் செயலகத்தில் இயங்கும் பணி நிலையத்திற்கான புதிய கட்டடம் சென்னை பட்டினப்பாக்கத்தில் சுமார் ரூ. 5 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கிறது. ரூ. 6.04 இலட்சம் செலவில் தர்மபுரியில் கட்டப்பட்டுள்ள பணிமனை இவ்வாண்டு வேலை செய்யத்துவங்கும். நடப்பு ஆண்டில் ரூ. 11.29 இலட்ச செலவில் புதிதாக மேலும் இரண்டு பணிநிலையங்கள் ஈரோட்டில் ஒன்றும் இராமநாதபுர மாவட்டத்தில் ஒன்றும் ஏற்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. சென்னை எழும்பூரில், காவல்துறை வாகனங்களை மட்டுமே பராமரிக்கத் தனியாக ஒரு பணிநிலையம் அமைக்கப்படவிருக்கிறது. இவற்றின் மூலம் மேலும் கிட்டத்தட்ட 200 பேர்கள் வேலை வாய்ப்புப் பெறுவர்.



# பெருகும் பள்ளிக் கல்வி

நடந்த நான்காண்டுகளில், தற்போதைய அரசின் ஆட்சிக்காலத்தில் குறிப்பாகக் கடந்த ஓராண்டில் பள்ளிக் கல்வித்துறையில் நிகழ்ந்துள்ள வளர்ச்சிச் சாதனைகள் பலவாகும். குறிப்பாக தன்னிறைவுத் திட்டத்தின் வழி தன்னிகரில்லாச் சாதனைகளை ஏற்படுத்த இயன்றது. அதே போல் நம் மேநிலைக் கல்வியின் வளர்ச்சி மற்றய மாநிலங்கள் கண்டு வியக்குமளவுக்கு உயர்ந்தது.

*1977-78*ஆம் ஆண்டில் பள்ளிக் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை 130 கோடியாகும். இத்தொகை 1980-81ல் ரூ. 183 கோடியாகவும், 1981-82ல் 207 கோடியாகவும் வளர்ந்துள்ளது.

**யாவர்க்கும் கல்வி:**

கல்விப் பயனைப் பெறுமாறு மாணவ, மாணவியரைப் பள்ளிகளில் சேர்க்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக மாணவர்கள் சேர்க்கையும், சேர்க்கை விகிதமும் அதிகரித்துள்ளன.

**15,000 ஆசிரியர் பணியிடங்கள்:**

*1976-77*முதல் *1980-81*முடிய வரலாறு காணாத வகையில் சுமார் 15,000 (பல்வகை நிலை) ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 1981-82ல் 2150 பணியிடங்கள் புதிதாக ஏற்படுத்தப்படும்.

**பள்ளியை விட்டுப் போவோர் எண்ணிக்கை குறைப்பு:**

தொடக்கப் பள்ளிகளில், இடையில் நின்றுவிடும் மாணவர்களின் விழுக்காடு 1973-74ல் 51% ஆக இருந்ததை 1979-80ல் 33% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

| வயது | 1976—77 | | 1980—81 | |
|---|---|---|---|---|
| | மாணவ, மாணவியர் இலட்சத்தில் | சதவிகிதம் | மாணவர், மாணவியர் இலட்சத்தில் | சதவிகிதம் |
| 6-11 | 57.52 | 91.7% | 64.46 | 95.22% |
| 11-14 | 15.50 | 54.4% | 18.42 | 61.42% |

**புதிய பள்ளிகள் :**

அதிகரித்துள்ள மாணவர்கள் படிக்க வசதி அளிக்கப் பல புதிய பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு.

| ஆண்டு | தொடக்கக் கல்வி | நடுநிலைப் பள்ளி | உயர்நிலைப் பள்ளி |
|---|---|---|---|
| 1977—78 | 36 | 44 | 35 |
| 1980—81 | 64 | 78 | 110 |

**மதிய உணவுத் திட்டம்:**

1976-77ல் இத்திட்டத்தின் கீழ் 19.80 இலட்சம் பள்ளிக் குழந்தைகள் பயன் பெற்றனர். 1980-81ல் 20.25 இலட்சம் பள்ளிக் குழந்தைகள் பயனடைந்தனர்.

**இலவசப் புத்தகங்கள்:**

ஏழ்மையிலுள்ள குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் வகையில் இலவசப் புத்தகங்கள், கற்பலகைகள் வழங்கப்படுகின்றன. 1977ஆம் ஆண்டிற்கு முன்பு 12 இலட்சம் மாணவர்கள் (1-3 வகுப்புகள்) இதனால் பயன் பெற்றனர். தற்போது 13 இலட்சம் மாணவர்கள் (1-3 வகுப்புகள்) பயன் பெற்றுவருகின்றனர்.

**இலவசக் கல்வி:**

ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ இந்திய மாணவர்களுக்கு இவ்வரசு 1978-79லிருந்து கற்பித்தல் கட்டணங்களை நீக்கியுள்ளது.

**பிற்பட்டோருக்கு இட ஒதுக்கீடுகள்:**

பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீடு 31%லிருந்து 50% ஆக அதிகரித்துள்ளது. சிறுபான்மையினர் அல்லாத தனியார் பள்ளிகள் நியமனங்களிலும் இவ்வரசின் காலத்தில்தான் முதல் முதலாக 50 இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**படிப்பு உதவித் திட்டம்:**

கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் திட்டத்தின் கீழ் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 2 மாணவர்களுக்கு மட்டுமே

புதியதாகப் படிப்பு உதவித் தொகைகள் வழங்கி வந்ததை மாற்றி, 1978-79 முதல் ஆண்டுக்கு ஒரு ஒன்றியத்திற்கு 4 மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

**தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வி வசதி:**

தாழ்த்தப்பட்ட மக்கள் மிக அதிக அளவில் வசிக்கும் கிராமங்கள் தமிழகத்தில் 3341 உள்ளன. அதில் 94.6 விழுக்காடு கிராமங்களுக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்கு உள்ளாகவே பள்ளி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**இடைநிலைக் கல்விக்குப் புதிய பள்ளிகள்:**

14-16 வயதுத் தொகுதியினர் 16.87 இலட்சம் பேர்களுள், 540 விழுக்காடாகிய 6.73 இலட்சம் பேர் பள்ளிகளில் பயின்று வந்தனர். 1980-81ல் 110 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன. (அரசு 74, நகராட்சி, 2, தனியார் 34)



**அறிவியல் கல்வி:**

1980-81 முடிய 1018 உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெற்றுள்ளன. 1981-82ல் இத்திட்டத்தின் கீழ் மேலும் 50 உயர்நிலைப் பள்ளிகள் பயன்பெறும். இத்திட்டத்தின்படி 1979-80 முடிய அரசுப் பள்ளிகளுக்கு ரூ55,000ம் (கட்டடம் ரூ37,000, கற்பித்தல் கருவிகள் ரூ. 18,000) அரசினரல்லாத பள்ளிகளுக்கு ரூ.40,200 மும்(ரூ. 22,200 கட்டடம், கற்பித்தல் கருவிகள் ரூ. 18,000) அனுமதிக்கப்பட்டு வந்தது. 1980-81ஆண்டு முதல் அரசுப் பள்ளிகளுக்கு ரூ. 98,000ம், அரசினரல்லாத பள்ளிகளுக்கு ரூ. 60,000-ம் என மானியம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டிகள் :**

அறிவியல் கற்பிப்பதற்கு உதவும் வகையில் கல்வி மாவட்டங்கள் 42ல், ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டி செயல்பட்டு வருகிறது. 1981-82ல் மேற்கொண்டு 5 வண்டிகள் வாங்கப்படும். மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தை வளர்ப்பதற்கான மாநில அறிவியல் ஆர்வத்தை வளர்ப்பதற்கான மாநில அறிவியல் கண்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. மாவட்டம் மற்றும் சரக அளவிலும் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

**தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்:**

இந்நிறுவனம் பின்வரும் சோதனைத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

1. தொடக்கக் கல்வி பாடத் திட்டத்தைப் புதுப்பிக்கும் திட்டம் (முன்னர் இருந்த 30 பள்ளிகளுடன் 1980-81ல் மேலும் 100 பள்ளிகள் சேர்க்கப்பட்டுள்ளன)
2. சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி.
3. தொடக்கக் கல்வி வாய்ப்புகளைப் பரவலாக்குதல்.
4. 1980 ஏப்ரல் முதல் 1983 மார்ச் முடியவுள்ள மூன்றாண்டுக் காலத்தில் தமிழ் நாட்டிலுள்ள பள்ளிகளில், மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியைச் செயல்படுத்துதல்.
5. 1-3 வகுப்புகளில் பயிற்றுவிக்கும் 15,000 இளநிலை (ஹையர்கிரேடு) ஆசிரியர்களுக்கு இந்நிறுவனம் 300 சிறப்பு மறுபயிற்சி வகுப்புகளை நடத்தியது:

பின்வரும் முக்கிய திட்டங்களையும் இந்நிறுவனம் செயல்படுத்தி வருகிறது:

1. இளநிலை ஆசிரியர்களுக்கான 'அஞ்சல் வழி மற்றும் நேரடி தொடர்புப்' பாட முறைப் பயிற்சியை நடத்துதல். இது இந்தியாவிலேயே முன்னோடித் திட்டம். ஆசிரியர் உயர்வுக்கு வழிகோலும் இத் திட்டத்தில் ஆண்டு

## தமிழாசிரியர்கள் நியமனம்

தமிழக அரசு 1981-82 கல்வி ஆண்டிற்கு அரசு மற்றும் தனியார் இடைநிலைப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளில் இடைநிலை வகுப்புகளிலும்- அதாவது 6-வது வகுப்பு முதல் 8-வது வகுப்பு வரை கூடுதலாக 500 தமிழாசிரியர்களை நியமனம் செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது. 1.6.81 முதல் நியமனம் செய்யும் வகையில் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவ்வாறு நியமிக்கப்படும் தமிழாசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்களுக்குரிய ஊதியம் பெறுவர்.

தோறும் 5000 ஆசிரியர்கள் பயன் பெறுவர். இதனை 10,000 ஆக்க முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

2. மைசூரிலுள்ள ''இந்திய மொழிகளுக்கான மைய அரசு நிறுவன'' உதவியுடன் அயல் நாடுகளில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ் பயிற்றுவிப்பதற்கான பாட முறைகளை உருவாக்குவதற்கான திட்டம் ஆகியவற்றையும் இந் நிறுவனம் கவனித்து வருகிறது.

மேல்நிலைக் கல்வி:

1978-79 முதல் மேல்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டன. 1980-81ல் 1243 மேல் நிலைப் பள்ளிகள் உள்ளன. புகுமுக வகுப்பில் ஆண்டொன்றுக்கு 75,000 மாணவர்கள் படித்த இடத்தில் இப்போது சுமார் 1¼ இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர். இரண்டு ஆண்டும் சேர்ந்து மேல்நிலைப் பள்ளிகளில் 11,12 ஆம் வகுப்புகளில் 2.58 இலட்சம் மாணவர்கள் படிக்கின்றனர். கிராமப்புற மாணவர்கள் இதனால் பயன் அதிகம் பெற முடிகின்றது. இதில் 22 விழுக்காடு அதாவது 57,093 மாணவர்கள், தொழிற் பாடங்கள் பயில்வது ஒரு அகில இந்தியச் சாதனையாகும்.

கட்டடங்களும் தளவாடங்களும்:

1978-79, 1979-80 ஆண்டுகளில் தொடங்கிய 477 அரசு மேல்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வகுப்பறையும், ஒரு ஆய்வுக்கூடமும் கட்ட மொத்தத்தில் பெருந்தொகையாகிய ரூ. 8 கோடிக்கு மேல் அரசு ஏற்பளித்தது. 400 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

1980-81ல் தொடங்கிய அரசு மேல்நிலைப் பள்ளிகள் 86க்கும் மொத்தம் ரூ. 1.93 கோடி செலவில் கட்டடம் கட்டித்தர 1981-82ல் ஏற்பளிக்கப்பட்டுவிட்டது.

இதுவரை தொடங்கியுள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகள் அனைத்துக்கும் தேவையான ஆய்வுக்கூட தளவாடங்களுக்காக மொத்தம் ரூ. 5 கோடி செலவுக்கு அரசு ஏற்பு அளித்துள்ளது.

அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றம்) மேல்நிலைப் பள்ளி கட்டடங்கள் கட்டவும், தளவாடங்கள் வாங்கவும் ஆகும் செலவில் 40 விழுக்காட்டைப் பள்ளிக்கு ஒரு இலட்சம் என்ற வரம்புக்குட்பட்டு மானியமாகத் தரும் திட்டம் ஒன்றுக்கும் அரசு ஏற்பளித்துள்ளது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் மானிய உதவிக்கு சுமார் 310 அரசல்லாத மேல்நிலைப் பள்ளிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 1981-82ல் இத்திட்டத்தின கீழ் மேலும் பல பள்ளிகள் பயன்பெறும்.

கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் உள்ள ஆய்வுக்கூட வசதிகளை மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வகை செய்யும் நோக்குடன் 'கல்லூரி இணையங்களும் பாலிடெக்னிக் இணையங்களும் இயன்ற இடங்களில் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளன.

நூலக வசதிகள் :

மேல்நிலைப் பள்ளிகள் நூலக வசதியைப் பெருக்க 1979-80 1980-81 ஆண்டுகளில் மொத்தம் ரூ. 43 இலட்சம் செலவுக்கு ஏற்பளிக்கப்பட்டது.

பொதுப்பாடத் திட்டம்:

மெட்ரிகுலேஷன், ஆங்கிலோ இந்தியன், மற்றும் தமிழ்நாடு கல்வி விதிகளின்படி உள்ள எல்லா மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ஒரே பொதுவான பாடத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொழில் கல்விக்குக் கையேடுகள்:

மேல்நிலைக் கல்வியில் உள்ள எல்லாத் தொழில் பாடங்களுக்.

## விதவையின் குழந்தைகளுக்குக் கல்வி நிதி உதவி

மேல்நிலைப்பள்ளிகளில் (பிளஸ். 2) படிக்கும் விதவையின் குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகையாக ஆண்டிற்கு ரூ. 100/- வீதம் ஆயிரம் (1000) மாணவ, மாணவியருக்கு நிதி உதவி அளிக்கும் திட்டத்தினைத் தமிழக அரசு அங்கீகரித்துள்ளது. இதன் மூலம் ஆண்டிற்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவாகும்.

குடும்பத்திற்கு ஒரு குழந்தை வீதம், பிற துறையின் உதவித் தொகையினைப் பெறாதவர்களே இந் நிதி உதவியைப் பெறுவதற்குத் தகுதியுடையவராவர். அவர்களின் குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ. 3,000/-க்கு மேற்படாமலிருக்கவும் வேண்டும்.

சென்னையைப் பொறுத்த வரையில் சமூகநல இயக்குநரும் மாவட்டங்களில் மாவட்ட சமூக நல அலுவலரும் இவ் உதவி நிதியினை வழங்குவார்கள்.





கும் கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதனைப் பிற மாநிலங்களில் உள்ளவர்கள் மிகவும் பாராட்டுகின்றனர்.

**தனி மேற்பட்டப் படிப்புப் பயிற்சி:**

மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி, ஆசிரியர்கள் மேல்பட்டப் படிப்புப் பெறுவதற்கென, சிறப்பான எம்.ஏ.,எம். எஸ்ஸி., பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு, அதற்குப் பட்டதாரி ஆசிரியர்கள் அனுப்பப்படுகின்றனர்.

**தேசிய சேவைத் திட்டம்:**

முதன் முதலாக 200 மேல்நிலைப் பள்ளிகளில் தேசியச் சேவைத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதில் 10,000 மாணவர்கள் பங்கு கொள்கின்றனர்.

**ஆசிரியர் நலன்:**

1. தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்கள் யாவருக்கும் எந்த விதமான நிபந்தனையுமின்றி சிறப்பூதியம் வழங்க ஆணையிடப்பட்டது.
2. அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மட்டும் பெற்றுவந்த சலுகைகள், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும், நகராட்சி ஒன்றியப்பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டன.
3. தனியார் பள்ளி ஆசிரியர்களின் பணிப்பாதுகாப்பிற்காக, இவ்வரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

**ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி:**

ஆசிரியர்களும், அவர்கள் குடும்பத்தினரும், வறுமை முதலியவற்றால் வாடும்போது இந்நிதியிலிருந்து உதவித்தொகை அளிக்கப்படுகிறது. 1980-81ல் இந்த நிதிப் பணத்திலிருந்து ஆசிரியர்களுக்கும், அவர்கள் குடும்பத்தினர்களுக்கும் உதவித் தொகையாக மொத்தம் ரூ. 44,000 வழங்கப்பட்டது.

1977-78லிருந்து ஆசிரியர்களின் பிள்ளைகளுக்குத் தொழிற்படிப்பு படிக்க, படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. பணியிலுள்ள, ஓய்வு பெற்ற, மற்றும் இறந்து விட்ட ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு இப்படிப்புதவித் தொகைகள் கிடைக்கும்.

பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் ஆகிய படிப்புகளுக்கு மொத்தம் ஆண்டுக்கு 80 பட்டப் புதவித் தொகைகள் புதிதாக அளிக்கப்படுகின்றன. இப்படிப் புதவித் தொகையின் மதிப்பு ஆண்டுக்கு ரூ. 500 ஆகும்.

**நல்லாசிரியர்களுக்கான மாநில விருதுகள்:**

1979-80ஆம் ஆண்டிலிருந்து நல்லாசிரியர் விருது பெறுபவர்களுக்குக் கொடுக்கப்படும் ரொக்கப் பரிசு ரூ. 300-லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டது.

**ஏவலர் நலன்:**

நிதி உதவி பெறும் உயர்நிலை-மேல்நிலைப் பள்ளிகளில் 5 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரியும் குற்றேவலர் பணியிடங்களை, அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் அடிப்படை ஊழியர் பணியிடங்களுக்கு ஈடாகக் கொணர்ந்து அரசு ஆணையிட்டுள்ளது

**தனியார் பள்ளி இளநிலை உதவியாளர்களுக்குச் சலுகை:**

துறைத் தேர்வுத் தேர்ச்சிப் பெறாமல் 10 ஆண்டு பணி ஆற்றிய இளநிலை உதவியாளர்களுக்கு 1.10.78 முதல் தேர்வு நிலை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

பல்வேறு மேலாண்மையின் கீழ் பணியாற்றிய காலத்தையெல்லாம், தேர்வுநிலை வழங்கத் தேவைப்படும் பத்தாண்டுக் காலப் பணிக்காலத்திற்குக் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## பதவி உயர்வு பெறுவோருக்குக் கூடுதல் ஊதியம்

உயர் பதவிகளுக்கு உயர்த்தப்படும் அரசு ஊழியர்களுக்குக் குறைந்த பட்சம் 5 சதவிகிதமாகச் சம்பள உயர்வு கிடைக்க வேண்டும் என்று தமிழக அரசு உத்தரவிட்டிருக்கிறது.

மூன்றாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளில் உள்ள முரண்பாடுகளைப் பற்றி விசாரித்த ஒருவர் குழு செய்த பரிந்துரையின் அடிப்படையில் மேற்கண்டவாறு அரசு உத்தரவிட்டிருக்கிறது.

ஒரே சர்வீசில் ஒருவர் கீழ் பதவியிலிருந்து மேல் பதவிக்கு உயர்த்தப்பட்டாலும், அல்லது ஒரு சர்வீசிலிருந்து மற்றொரு சர்வீசுக்கு மாற்றப்பட்டு உயர் பதவியில் நியமிக்கப்பட்டாலும் அவருக்குக் கீழ் பதவியிலிருந்த சம்பளத்தைக் காட்டிலும் 3 அல்லது 5 சதவிகிதம் கூடுதலான ஊதியம் கிடைக்க வேண்டும் என்று ஒருவர் கமிஷன் கூறியிருந்தது.



# வேலை வாய்ப்புப் பிரிவின் சாதனைகள்!

தமிழ்நாட்டில், தேசிய வேலை வாய்ப்புப் பணி மாநில அளவில் இயக்ககத் தலைமையில் 16 மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களும் மற்றும் 10 துணை வேலைவாய்ப்பு அலுவலகங்களும் செயலாற்றி வருகின்றன.

இதைத் தவிர 10 சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகங்களும் இயங்கி வருகின்றன.

இரு துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடியிலும் தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஒசூரிலும் 1979ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உதகையில் மலைவாழ் பகுதியினர் நல்வாழ்விற்காக ஒரு தனி வழி காட்டி நிலையமும், திருச்சி மாவட்டத்தில் தொழில்நுட்பப்பிரிவிற்காக ஒரு தனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் 1980ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

வேலையற்றோர்க்கு நிவாரணம் அளிக்கும் திட்டமும் அக்டோபர் '80 முதல் இத்துறையில் செலுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பட்டப் படிப்பு படித்தவர்கள் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், கைத்தொழில் ஆசிரியர்கள், தொழிற் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் பொறியியல் டிப்ளமா படித்தவர்கள் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பதிவேட்டில் தொடர்ந்து காத்திருப்போர்களுக்கு மாதம் ரூ. 50 உதவித் தொகை மூன்றாண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

ஜூன் 1980 முதல் ஏப்ரல் 1981 வரை முடிவடைந்த காலத்தில் இத்துறையால் செயல்பட்ட பணிகள் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | தமிழ்நாட்டில் வேலைவாய்ப்புக்காக மாநிலத்திலுள்ள வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை மொத்தம்: | 4,64,304 |
| 2. | மாநிலத்தில் வேலைவாய்ப்பகங்களின் மூலம் வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை : | 50,078 |
| 3. | தமிழ்நாட்டில் உள்ள எல்லா வேலை வாய்ப்பகங்களிலும் 30.4.81ல் வேலைக்காகக் காத்திருந்தவர்களின் எண்ணிக்கை : | 11,56,630 |
| 4.(அ) | வேலையற்றோர் நிவாரணத்திற்காக உரியவர்களாகக் கருதப்பட்டவர்கள் எண்ணிக்கை : | 25,766 |
| (ஆ) | தகுதியானவர்களிடம் இருந்து வந்த விண்ணப்பங்கள் 30.4.81 வரை: | 15,838 |
| (இ) | தாசில்தார்களுக்குப் பரிந்துரை செய்யப்பட்ட விண்ணப்பங்கள் (30.4.81வரை) | 15,690 |
| (ஈ) | உதவித்தொகை பெற்றவர்கள் எண்ணிக்கை | |

அரசிடம் பொருள் உதவிபெறும் அனைத்துத் தனியார் நிறுவனங்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என கட்டளை இடப்பட்டுள்ளது. இதன் பயனாக, தனியார் நிறுவனங்களும் அதிக அளவில் வேலை வாய்ப்பகங்களுக்கு உதவி செய்கின்றது.

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

## டான்சி

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR

# நெல்லைச் சீமையில் தந்தை பெரியார் ஒலி-ஒளிக் காட்சி



"தந்தை பெரியார் ஒலி-ஒளிக் காட்சி'' யின் தொடக்க விழா திருநெல்வேலிச் சீமை ''சாஃப்டர் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் 17-5-81 தேதியன்று, மாலை 7 மணிக்குச் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா இனிதே தொடங்கப் பெற்றது. செய்தி-மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு. சி. என். கிருஷ்ணபாரதி அவர்கள் வரவேற்புரை யாற்றினார்.

**நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆறுமுகம்**

விழாவுக்குத் தலைமை ஏற்ற நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தா. ம. ஆறுமுகம் ஐ. ஏ. எஸ்., அவர்கள் தமது உரையில்.

''இந்த இருபதாம் நூற்றாண்டின் ஈடுஇணையற்ற - ஒப்பற்றத் தலைவராக விளங்கிய தந்தை பெரியார் வாழ்ந்தகாலம் ஒரு சகாப்தம் என்றே கூறலாம். அவர் வாழ்ந்த காலத்தில் நாம் வாழ்ந்தோம் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம். அப்படிப்பட்ட தலைவர்கள் காட்டிய வழியில் நடக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

**சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு. பி. எச். பாண்டியன்**

மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத்தலைவர் திரு. பி.எச். பாண்டியன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தியபோது—

''பின்தங்கிய மக்களை முன்னுக்குக் கொண்டு வந்தவர் தந்தை பெரியார் - அவருடைய கொள்கை கோட்பாடுகளைப்பின் பற்றுகின்ற அரசில், நான் அங்கம் வகிப்பதில் பெருமையடைகிறேன். பெருமிதம் கொள்கிறேன். தந்தை பெரியார் காட்டிய பாதையை நாம் கடைப்பிடிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

**அமைச்சர் திரு. எஸ். என். இராஜேந்திரன்**

ஒலி - ஒளிக்காட்சியைத் தொடங்கி வைத்த மாண்புமிகு கைத்தறி-கதர் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். என். இராஜேந்திரன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

''சுயமரியாதைக்குச் சொந்தக்காரர்-பகுத்தறிவுப் பகலவன் வெண்தாடி வேந்தர் - சீர்திருத்தச் செம்மல் தந்தை பெரியார் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்து வருகிறோம். மூடநம்பிக்கைகளை முறியடிக்க வேண்டும் என்ற அவரது முழக்கத்தைப் பலமுறை கேட்டுத் தெளிவடைந்து அதன்படி நடந்து கொள்வதற்கு நம்மை நாமே ஒப்படைத்திருக்கிறோம்.

''பெரியார் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் பணி சமுதாயத்தை மாற்றி அமைக்கும் நற்பணியாகும். அந்தப் பணிக்காக அவரது கடைசி மூச்சு இருக்கும் வரை பாடுபட்டார். புரையோடிக் கிடந்த தமிழ்ச் சமுதாயத்தினரின் சிந்தனையைத் தூண்டிவிடவும், அவர்களுக்கு உணர்ச்சியையும் உத்வேகத்தையும் தந்தவர் பெரியார்.

''தமிழுக்கும்-தமிழ் மக்களுக்கும் பெருமை தேடித்தந்த பெரியார் அவர்கள் விட்டுச் சென்ற கொள்கை - இலட்சியம் - தத்துவங்களை நாமும் கடைப்பிடிப்போம்'' என்று குறிப்பிட்டார்.

நெல்லை மாவட்ட செய்தி-மக்கள் தொடர்புத் துறை அலுவலர் திரு. கே. எம். இராசு நன்றி கூறினார்.

இந்தஒலி-ஒளிக்காட்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட நடிகர்-நடிகைகள் நடித்தனர். பெரியார் வாழ்ந்த காலத்தையும் அவருடைய அரசியல் வரலாற்றையும் நமது கண் எதிரே கொண்டு நிற்பது போல இருந்தது. ராஜாஜி மறைவின்போது அவரது சிதை எரிவதைப் பார்த்து, தந்தை பெரியார் சோகமாக கண்ணீர் வடித்து அழுவது போன்ற காட்சியும் அறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியோரது இறுதி ஊர்வல திரைப்படக் காட்சியும் நெஞ்சை உருக்குவதாக அமைந்திருந்தன.



மொத்தத்தில் ''தந்தை பெரியார் ஒலி-ஒளிக் காட்சி''யைப் பார்க்கத் தவறக் கூடாது என்றே சொல்ல வேண்டும். 2½ மணி நேரம் போனதே தெரியவில்லை. அந்த அளவுக்கு அத்தனை அம்சங்களும் அதில் இடம் பெற்றிருக்கின்றன.

**—தொகுப்பு ஜி. ஆனந்தன்**



# வேலை வாய்ப்புப் பயிற்சிப் பிரிவில் விளைந்துள்ள முன்னேற்றம்

விரைவான தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையான முன் தேவைப் பயிற்சி பெற்ற தொழில் நுட்பப் பணியாளர்களாவர் தொழிற் பயிற்சி பெற்ற கைவினைஞர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்குக் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

1. தொழிற் பயிற்சி நிலையங்களில் நிறுவனப் பயிற்சி.
2. 1961-ஆம் ஆண்டு வேலை பழகுநர் சட்டத்தின்கீழ் வேலை பழகும் பயிற்சி.
3. தொழிற் சாலை ஊழியர்களுக்காக மாலை நேர வகுப்புகள்.
4. தொழிற் பள்ளிகளுக்கான முறைப்படுத்துதல் விதித் தொகுப்பின் கீழ் மாநில உதவி பெறும் தனியார் தொழிற் பள்ளிகளில் கைவினைஞர் பயிற்சி அளித்தல்.
5. வேலையிழந்த பொற்கொல்லர்கள், மாதிரி அமைப்பாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் ஆகியோருக்காகக் குறிப்பிட்ட தொழில் பிரிவுகளில் தனிப் பயிற்சி.
6. உயர்நிலைத் தொழிற் பயிற்சி பாடத் திட்டம்.
7. ஊரகப் பயிற்சித் திட்டம்.

**தொழிற் பயிற்சி நிலையங்களில் நிறுவனப் பயற்சி:**

சிறந்த மேற்பார்வைக்கும், நிர்வாகப் பொறுப்பினைக் கவனிப்பதற்கும் மண்டல அலுவலகங்கள் 1978லிருந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. பயிற்சியின் திறனை மேலும் அதிகப்படுத்துவதற்காக 1980-ஆம் ஆண்டில் மற்றொரு மண்டல அலுவலகம்' திருநெல்வேலியில் அமைக்கப்பட்டுள்ளது.

**1961-ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம்:**

தற்சமயம் தனியார் மற்றும் மாநில அரசு துறை நிறுவனங்களிலும், 10,120 தொழில் பழகுவோர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**தொழிற்சாலை வேலையாட்களுக்கு மாலை நேர வகுப்புகள்:**

கிண்டி, வடசென்னை, அம்பத்தூர், மதுரை மற்றும் கோயம்புத்தூர் தொழிற்பயிற்சி நிலையங்களில் சில தொழிற் பிரிவுகளில் நிறுவனங்களால் அனுப்பப்படும் தொழிற்சாலை வேலையாட்களுக்கு அவர்களின் கருத்தியல் அறிவை அபிவிருத்தி செய்து கொள்ளும் பொருட்டு அதனால் பதவி உயர்வுக்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதற்காகவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட இடங்கள் 1,050.

**அரசு உதவி பெற்ற தொழிற் பள்ளிக்கூடங்கள்**

தமிழ்நாட்டில் மொத்தம் 76 தனியார் தொழிற் பள்ளிகள் இத்துறையால் அங்கீகரிக்கப்பட்டு அவைகளில் பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 29 தொழில் பிரிவுகளில் 5000 மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

**சிறப்புத் திட்டம்:**

வேலை இழந்த பொற்கொல்லர்கள், மாதிரி அமைப்பு செய்பவர்கள், மற்றும் கைத்தறி நெசவாளர்கள் தகுந்த வேலை வாய்ப்புப் பெறுவதற்கு அவர்களுக்குத் தொழில் நுட்ப அறிவினை வழங்குவதுதான் இத்திட்டத்தின் தலையாய நோக்கம்.

**உயர்நிலைத் தொழில் பயிற்சிப் பாடத் திட்டம்:**

இதுவரை பல்வேறு தொழில் நிறுவனங்களிலிருந்து பயிற்சிக்கென அனுப்பப்பட்ட 632 தொழிலாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

**ஊரக பயிற்சித் திட்டம்**

சமுதாயத்தில் நலிந்து வாடும் கிராமப் புற இளைஞர்களைத் தங்கள் வாழ்க்கையைக் கிராமங்களிலே செவ்வனே நடத்துவதற்குரிய வகையில் சுயவேலைவாய்ப்பில் ஈடுபடும்படியாக 11 விதத் தொழில்களில் தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ஏறக்குறைய 6000 இளைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

**அலுவலர் பயிற்சித் திட்டம்**

1. பயிற்றுநர்கள் மிகச் சிறந்த முறையில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டி அவர்களுக்கென மாநில அரசால் ஒரு திட்டம் உருவாக்கப் பட்டு அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் சனவரி, 1980 முதல் செயல்பட்டு வருகிறது. இதுவரை 62 பயிற்றுநர்கள் பயன் அடைந்து இருக்கிறார்கள்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, நமது பணியையும், நாகரிகத்தையும், கலையினையும், பண்பாட்டினையும் கட்டிக்காக்கும் கருவூலப் பெட்டகங்களாகத் திகழ்கின்றது இதுப நமதுமுன்னோர்ால் உருவாக்கி விளங்கிக் கொண்டிருக்கும் கோவில்களைப் பேணிப் பாதுகாக்கும் சீரிய பணியினை அயராது ஆற்றி வருகிறது. குறிப்பாக கடந்த ஓராண்டில் இத்துறை ஆற்றிய பணிகள் பாராட்டுக்குரியன ஆகும்:

**புதிய ஆலயங்கள்:**

| | |
|---|---|
| இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் நிர்வாகத்தின்கீழ் 9.6.80க்குப்பிறகு கொண்டு வரப்பட்ட ஆலயங்களின் எண்ணிக்கை .. | 165 |
| தற்போதுள்ள மொத்த ஆலயங்களின் எண்ணிக்கை .. | 33,620 |
| மேற்படி ஆலயங்களின் மொத்த வருமானம் .. | ரூ 16 கோடி |
| 9.6.80 தேதியிலிருந்து வசூலான உதவித் தொகை ... | ரூ. 64,72,786—29 |
| 9.6.80 தேதியிலிருந்து வசூலான தணிக்கைத் தொகை ... | ரூ. 15,21,302—70 |




# அறநிலையத்துறை ஆற்றும் அரும்பணிகள்

ரூ. 1 இலட்சத்திற்குமேல்வருமானமுள்ள சமய நிறுவனங்கள் எண்ணிக்கை :

| | | |
|---|---|---|
| 1. | ஒரு இலட்சத்திற்கு மேல் வருமானம் உள்ள ஆலயங்கள் | 128 |
| 2. | ஒரு இலட்சத்திற்கு மேல் வருமானம் உள்ள மடத்துக் கோயில்கள் ... | 17 |
| 3. | ஒரு இலட்சத்திற்கு மேல் வருமானம் உள்ள மடங்கள் ... | 11 |
| 4. | ஒரு இலட்சத்திற்கு மேல் வருமானம் உள்ள குறிப்பிட்ட அறக்கட்டளைகள் ... | 12 |
| | ஆக மொத்தம் ... | 168 |

குட முழுக்கு:

9.6.80 முதல் இதுவரை குடமுழுக்கு நடைபெற்ற ஆலயங்கள் ... 123

முக்கிய குடமுழுக்கு விவரம்:

அருள்மிகு, ரெங்கனாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் திருச்சிராப்பள்ளி மாவட்டம் 26.3.1981

திருப்பணி வேலைகள்

| | | | |
|---|---|---|---|
| நிர்வாக அனுமதி அளித்தது (திருப்பணி வேலைகள்) | 349 ... | ரூ. | 2,77,45,744 |
| நிர்வாக அனுமதி இதரவேலைகள் | 423 ... | ரூ. | 2,44,21,285 |
| மதிப்பீடுகள் அங்கீகரித்தது | 352 ... | ரூ. | 3,62,09,673—29 |

| | | |
|---|---|---|
| திருப்பணிக்காக அரசு மான்யம் அனுமதிக்கப்பட்ட ஆலயங்கள் | ... | 40 |
| அரசு மான்யம் அளிக்கப்பட்ட தொகை | ... | ரூ. 17 இலட்சம் |
| ஆலயத் திருப்பணிக்கு அரசு மான்யம் வழங்கப்பட்ட ஆலயங்களின் எண்ணிக்கை | ... | 61 |
| திருப்பணிக்கு அரசு மான்யமாக வழங்கப்பெற்ற தொகை (கீழ்க்கண்டவிவரப்படி) * | ... | ரூ. 22,47,000- |
| ஆதிதிராவிடர் ஆலயங்கள் திருப்பணிக்கு அரசு மான்யத்தொகை | ... | ரூ. 3 இலட்சம் |
| திருப்பணிக்கு அளிக்கப்பட்ட ஆதிதிராவிடர் காலனி ஆலயங்கள் | ... | 83 |
| ஆதிதிராவிடர் காலனி ஆலய திருப்பணிக்கு அனுமதிக்கப்பட்ட அரசு மான்ய தொகை | ... | ரூ. 1,69,500 |
| திருப்பணிக்கென ஆணையரின் பொதுநலநிதியிலிருந்து வழங்கப்பட்ட ஆலயங்களின் எண்ணிக்கை—13 | ... | ரூ. 85,775 |

| | |
|---|---|
| *1980-81 மான்யத்திலிருந்து ரூ. | 11,86,500 |
| உபயோகப்படுத்தப்பெறாதமுன் | 10,60,500- |
| அரசு மான்யத்திலிருந்து | 22,47,000- |



## பெருமளவில் திருப்பணி நடைபெற்றுவரும் ஆலயங்கள்

அருள்மிகு

| | | | |
|---|---|---|---|
| சுப்பிரமணியசுவாமி ஆலயம் திருச்செந்தூர் | ஜெயநாதர் விடுதி | ரூ. 8.60 இலட்சம் | முடிக்கப் பட்டுள்ளது. |
| சுப்பிரமணியசுவாமி ஆலயம், திருச்செந்தூர் | ஜெயந்திநாதர் விடுதி விரிவு படுத்தும் திட்டம் | ரூ. 15- இலட்சம் | நடைபெற்று வருகிறது. |
| கோட்டைமாரியம்மன்ஆலயம் சேலம் | ராஜ கோபுரம் | ரூ. 10- இலட்சம் | திட்டமிடப் பட்டுள்ளது |
| காமாட்சியம்மன் ஆலயம், மாங்காடு | ,, | ரூ. 7- இலட்சம் | நடை பெற்றுவரு கிறது. |
| தேவி கருமாரியம்மன்ஆலயம் திருவேற்காடு | 36 அறைகள் கொண்ட ஓய்வுவிடுதி | ரூ. 6- இலட்சம் | நடைபெற்று வருகிறது. |
| அவினாசிலிங்கேசுவரர் ஆலயம், அவினாசி | ராஜ கோபுரம் | ரூ4.56 இலட்சம் | முடிவடைந்து விட்டது |
| இராமனாதசுவாமி ஆலயம், இராமேசுவரம் | 1. இரண்டாவது பிரகாரம் அபிவிருத்தி | ரூ5.5 இலட்சம் | நடை பெற்று வருகிறது. |
| | 2. அம்மன் சன்னதி முன் மண்டபம் | ரூ. 7.5 இலட்சம் | நடை பெற்று வருகிறது. |
| மங்களநாதசுவாமி ஆலயம், திருஉத்திரகோசமங்கை | சிற்பவேலைப் பாடுகளுடன் கூடிய கல் மண்டபம் | ரூ. 7.5 இலட்சம் | நடைபெற்று வருகிறது. |
| நாச்சியார் தேவஸ்தானம் ஸ்ரீவில்லிபுத்தூர் | வடபத்ரசயனர் கோபுரம் | ரூ. 9.35 இலட்சம் | வேலை ரூ. 3.5 இலட் செலவில் முடிவு பெற்றுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| கொண்டத்துக்காளியம்மன் ஆலயம், பாரியூர். | ராஜகோபுரம் மகா மண்டபம் | ரூ.5.00 8.00 இலட்சம் | வேலை நடைபெற்றுக் கொண்டு வருகிறது. |
| காரணீசுவரர் ஆலயம், சைதாப்பேட்டை, சென்னை | ராஜ கோபுரம் | ரூ.2- இலட்சம் | முடியும் தறுவாயில் உள்ளது |
| வெங்கீசுவரர் ஆலயம், கோடம்பாக்கம் | ராஜ கோபுரம் | ரூ.2- இலட்சம் | முடியும் தறுவாயில் உள்ளது. |
| வடபழனியாண்டவர் ஆலயம் வடபழனி | ராஜ கோபுரம் | ரூ.4.20 இலட்சம் | நடந்தேறி வருகிறது. |
| சுப்பிரமணியசுவாமி ஆலயம், பச்சைமலை, கோயம்புத்தூர் வட்டம் | அர்த்தமண்டபம், பிரகாரம், பரிவார ஆலயங்கள், பளிங்குக் கற்களாலான கருவறை புதுப்பித்தல். | ரூ.7.50 இலட்சம் | நடந்தேறி வருகிறது. |
| கபாலீசுவரர் ஆலயம், மயிலாப்பூர், சென்னை-4 | 1. ராஜ கோபுரம் திருப்பணி | ரூ.2.00 இலட்சம் | நடைபெற்று வருகிறது. |
| | 2. இதர திருப்பணி | ரூ.1.22 இலட்சம் | நடைபெற்று வருகிறது. |
| மாரியம்மன் ஆலயம், வண்டியூர், மதுரை மீனாட்சியம்மன் கோயிலைச் சார்ந்தது. | ஆலய தெப்பக்குள மைய மண்டபம் | ரூ.5.00 இலட்சம் | முடிவடைந்துள்ளது. |



| திருமண மண்டபங்கள் கட்டி முடிக்கப்பட்டவை : | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|
| மாதவப்பெருமாள் ஆலயம், மயிலாப்பூர், சென்னை-4 | 1,69,000 |
| சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை | 1,18,000 |
| சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், பூக்காரத்தெரு தஞ்சாவூர். | 1,50,000 |
| கொழுந்தீஸ்வரர் ஆலயம், கோட்டூர், தஞ்சைமாவட்டம் | 1,18,000 |

.6.80-க்குப் பின் இந்தத் துறையின் கீழ் உள்ள ஆலயங்களில் திருமண மண்டபங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரங்கள் :

| ஆலயங்களின் பெயர் | | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேசுவரி திருக்கோயில், திருவானைக்கா, திருச்சி மாவட்டம் | ... | 1,00,000 |
| சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மைலம், தென் ஆர்க்காடு மாவட்டம் | ... | 2,00,000 |
| சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குமார வயலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் | ... | 2,00,000 |
| நாகராஜா ஆலயம், நாகர்கோயில் (இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வம், சுசீந்திரம்) | ... | 7,00,000 |
| சட்டநாதசாமி திருக்கோயில், சீர்காழி, தஞ்சாவூர் மாவட்டம் | ... | 1,50,000 |



வேதாரண்யேசுவரர் திருக்கோயில், வேதாரண்யம், தஞ்சாவூர் மாவட்டம். ... 1,50,000

சுவாமிநாதசாமி ஆலயம், சுவாமிமலை, தஞ்சாவூர் மாவட்டம் ... 2,00,000

மருந்தீசுவரர் ஆலயம், திருவான்மியூர், சென்னை-41 ... 2,00,000

பைரவனாதசுவாமி ஆலயம், தகட்டூர், தஞ்சாவூர் மாவட்டம் ... 2,00,000

ஊற்றீஸ்வரர் ஆலயம், பூண்டி (இணைப்பு தேவிகருமாரியம்மன் ஆலயம், திருவேற்காடு, சென்னை-77) ... 1,00,000

**சிலைகள் பாதுகாப்பு :**

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையின்கீழ் இதுவரை பதிவுசெய்யப்பட்ட விக்கிரகங்கள் எண்ணிக்கை ... 4206

சிலைகள் பாதுகாப்புக்காக ஆணையரின் பொதுநலநிதியிலிருந்து நிதி வழங்கப்பட்ட ஆலயங்கள் 2 ... 11,174.80

சிலைகள் பாதுகாப்புக்காக அரசு மான்யம் வழங்கப்பட்ட ஆலயங்கள் 8 ... 39,100

திருக்கோயில் மாதாந்தர இதழ் வெளியீடு ... 5,000 பிரதிகள்

**புதிய தங்கத்தேர் :**

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம், மதுரை (5.33 மீட்டர் உயரமுள்ள தங்கத்தேர்)

பொருட்காட்சியில் இத்துறை பங்கேற்று பரிசு பெற்ற விவரம்

மதுரை உலகத்தமிழ் மாநாடு 1981 சனவரி — முதற்பரிசு

தஞ்சாவூர் அரசுப்பொருட்காட்சி 1981 மே — முதற்பரிசு

திருச்சிராப்பள்ளி அரசுப்பொருட்காட்சி 1981 மார்ச் — மூன்றாவதுபரிசு

ஆலயப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது.

1. உதவி ஆணையர் அந்தஸ்தில் செயல் அலுவலர்கள் உள்ள ஆலயப்பணியாளர்கள் ... 1.10.80 முதல் ரூ. 10- ரூ.15- ரூ. 20- அகவிலைப்படி உயர்வு

2. ,, ,, 1.4.81 முதல் ரூ 650 அடிப்படைச் சம்பளத்தில் 20%ம் ரூ. 650-க்குமேல் அடிப்படைச் சம்பளத்தில் 15%ம் அகவிலைப்படி உயர்வு.






| | |
|---|---|
| பழனி ஆலய ஊழியர்கள் | ...1.1.81 முதல் ரூ. 10-முதல் ரூ.15- வரை அகவிலைப்படி உயர்வு<br>1.4.81 முதல், குறைந்தபட்சம் ரூ. 15 முதல் ரூ. 30- வரை அகவிலைப் படி உயர்வு |

ஆலய ஊழியர்களின் சம்பளச் செலவு முன்பு வருவாயில் 30% க்குள் இருக்க வேண்டும் என்றிருந்தது. 1.4.81 முதல் 40% வரை இருக்கலாம் என்று உத்தரவு இடப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட ஆலயங்களில் சம்பளம் வீதம் உயர்த்தி திருத்தியமைக்கப்பட்டுள்ளது :**

1. இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி ஆலயம் 1.2.81 முதல்
2. ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதசுவாமி ஆலயம் 1.2.80 முதல்
3. மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் ஆலயம் 1.7.80 முதல்

ஆலயத்திற்குச் சொந்தமான காலிமனைகளில் ஆலயப்பணியாளர்களுக்கு வாடகைக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது.



**ஆலய ஊழியர்களுக்கு இதர சலுகைகள் :**

1. கிராமங்களில் உள்ள ஆயப் பணியாளர்கள் —1.1.81 முதல் ரூ. 5/- கிராமப்படி வழங்கப்படுகிறது.
2. ரூ. 400- அல்லது இரண்டுமாத அடிப்படை சம்பளம் இதில் எது குறைவோ அத்தொகை பண்டிகை முன்பணமாக வழங்கப்படுகிறது.
3. வருங்கால சேமிப்பு வைப்பு நிதித் திட்டம் அனுமதிக்கப்பட்ட ஆலயங்களின் எண்ணிக்கை ... 46

ரூ. இலட்சத்தில்

4. ஸ்ரீரங்கம் ஆலயம், ஆலய ஊழியர்கட்கு வீடு கட்டும் திட்டம் ... 4.6
5. சமயபுரம் ஆலயம், ஆலய ஊழியர்கட்கு வீடு கட்டும் திட்டம் ... 4.6
6. பழனி ஆலயம், ஆலய ஊழியர்கட்கு வீடு கட்டும் திட்டம் 7.10
7. இராமேஸ்வரம் ஆலயஊழியர்கட்கு வீடுகட்டும் திட்டம்... 2.40
8. எட்டுக்குடி ஆலய ஊழியர்கட்கு வீடு கட்டும்திட்டம் ... 0.75

ஆலயத்தின் அனுபோகத்திற்கு மீட்கப்பட்ட நிலங்கள் ... 144 ஏக்கர் 92சென்ட்

மேற்படி நிலங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் ரூ. ... 8,518

ஆக்கிரமிப்பிலிருந்து விவசாய நிலங்களை அனுபோகத்திற்கு கொண்டுவரப்பட்டவை ... 330 ஏக்கர் 55 சென்ட்

மேற்படி நிலங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் ரூ. ... 11,485

தற்போது கட்டடங்களுக்கு வாடகையை அதிகப்படுத்திய தன் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் ...3,85,332-50

**அனுமதி வழங்கப்பட்ட சமூகப் பணிகள் விவரம் :**

1. திருவேற்காடு அருள்மிகு தேவிகருமாரியம்மன் ஆலயம் ...சுகாதார நிலையம்
2. அழகர்கோவில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் ...சித்தவைத்தியசாலை
3. சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில் ...சித்தவைத்தியசாலை
4. திருப்பாலூர் அருள்மிகு கந்தசுவாமி ஆலயம்...சித்தவைத்தியசாலை



## இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை மூலம் வெளியிடப்பட்டுள்ள புத்தகங்கள் விவரம்

1. தமிழ்நாட்டு ஆலயங்களில் சுற்றுப்பயணம் (ஆங்கிலம்)
2. ஆதி சங்கீதமும்மூர்த்திகள்
3. பகவத் கீதை (ஆங்கிலம்)
4. Lord Ranganatha (ஆங்கிலம்)

**பழைய ஓலைச்சுவடிகளிலிருந்து அருட்பாடல்களை அச்சிடுதல்—**

5. முருகன் மூவாயிரம் (வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளால் இயற்றப்பெற்று அச்சாகாமல் இருந்தது)

**சேவார்த்திகளின் நலன்களை முன்னிட்டு பின்வரும் ஆலயங்களில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.**



| | |
|---|---|
| அருள்மிகுசங்கரநாராயணசாமி திருக்கோயில், சங்கரன்கோயில், திருநெல்வேலி மாவட்டம் | ...17 அறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன |
| அருள்மிகு இராமனாதசுவாமி திருக்கோயில் இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம் | ...17 அறைகள், 2 குடில்கள் கட்டப்பட்டு வருகின்றன. |
| அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில், மணவாளநல்லூர், விருத்தாசலம் வட்டம் தென்னார்க்காடு மாவட்டம் | ...13 அறைகள் கட்டப்பட்டு உள்ளன. |
| அருள்மிகு மத்யார்ஜுனேஸ்வரர்திருக்கோயில் பேட்டைவாய்த்தலை, திருச்சிமாவட்டம் | 2 அறைகள் கட்டப்பட்டு உள்ளன. |
| அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மருதமலை, கோவை மாவட்டம். | ..1 குடில், 1 ஓய்வு விடுதி கட்டப்பட்டுள்ளன. |
| அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில் சுவாமிமலை, தஞ்சைமாவட்டம் | ...3 குடில்கள், 1 ஓய்வு விடுதி கட்டப்பட்டுள்ளன. |
| அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் திருத்தணி, செங்கற்பட்டு மாவட்டம். | ...2 குடில்கள், 1 ஓய்வு விடுதி கட்டப்பட்டுள்ளன. |
| அருள்மிகு நவநீதேசுவரர் திருக்கோயில், சிக்கல், தஞ்சை மாவட்டம். | ...1 குடில், 1 ஓய்வுவிடுதி கட்டப்பட்டுள்ளன. |
| அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி, மதுரைமாவட்டம் | ...9 குடில்கள், 1 ஓய்வு விடுதி கட்டப்பட்டுள்ளன. |
| அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இருக்கன்குடி, இராமநாதபுரம்மாவட்டம் | ...1 ஓய்வு விடுதி கட்டப்பட்டுள்ளது. |



**ஆலயங்களின் வருமானத்தைப் பெருக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கை**

| | | விவரம் | மதிப்பீட்டுச் செலவு. ரூ |
|---|---|---|---|
| 1. | அருள்மிகு நவநீதேசுவரர் ஆலயம், சிக்கல், தஞ்சாவூர் மாவட்டம் | 6 கடைகள் கட்டுதல் | 80,000.00 |
| 2. | அருள்மிகு சாரங்கபாணிசுவாமி ஆலயம் கும்பகோணம் | 8 கடைகள் கட்டுதல் | 1,12,000 |





## தமிழிசை வளர்ச்சி

தமிழிசை வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன் நாதஸ்வரம், தவுல், மற்றும் தேவாரம் ஆகிய ஒவ்வொரு துறையிலும் மாணவர்கள் பயிற்சி பெற தேர்ந்தெடுக்கப்பட்டு பின்வருமாறு அரசு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நாதஸ்வரம் ... | 4 மாணவர்கள் | —மாதம் ஒன்றுக்கு ரூ. 500- உதவித் தொகை; வழங்கப்பட்ட தொகை ரூ. 20,000- |
| தவுல் ... | 5 மாணவர்கள் | —மாதம் ஒன்றுக்கு ரூ. 300- உதவித் தொகை; வழங்கப்பட்டதொகை ரூ. 15,000- |
| தேவாரம் ... | 3 மாணவர்கள் — | வருடம் ஒன்றுக்கு ரூ. 1000- உதவித் தொகை; வழங்கப்பட்டதொகை ரூ.3.000- |

## முதலீடு

முதலீடு செய்யப்பட்ட தொகை ரூ. 1,50,09,371-30

**பொது:**

சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலுக்கு பல்வேறு காலங்களில் மன்னர்களாலும் பொது மக்களாலும் நிலங்கள் மான்யமாகக்கொடுக்கப்பட்டு அவற்றின் நிர்வாகம் ஆலயத்தின் நேரடிப் பார்வைக்கு வராமல் இருந்து வந்தது. ஆலயத்திற்கு சொந்தமான 910 ஏக்கர் பட்டா நிலமும் 2878 ஏக்கர் அறக்கட்டளை நிலங்களும் கண்டுபிடிக்கப்பட்டு அவைகளில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 39,159- வருமானம் வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோயில் திருப்பணி ரூ. 36.78 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் மேற்கொள்ளப்பட்டு ரூ. 25 இலட்சம் மதிப்புள்ள பணிகள் முடிக்கப்பட்டு உள்ளன. ரூ. 9.5 இலட்சம் அரசு மான்யமாகவும் ,ரூ,20,000 ஆணையரின் பொதுநலநிதியிலிருந்தும் ரூ. 2.65 இலட்சம் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலிலிருந்தும் இந்த ஆலயத்திருப்பணிக்கு நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீரங்கம் அருள்மிகு ரெங்கநாத சுவாமி ஆலயத்தின் ராஜகோபுரம் 68.87 மீட்டர் (226 அடி) உயரத்தில் இந்தியாவிலேயே உயர்ந்த கோபுரமாக சுமார் ரூ. 75 இலட்சத்திற்கு மேல் செலவில் நன்கொடை மூலம், கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுத் திருப்பணி நடைபெற்று வருகிறது.

# முதல்வர் இரங்கல் செய்தி



## ஆதித்தனார் மறைவு

பத்திரிகை உலகில் மகத்தான சாதனை புரிந்து வெற்றிகண்டவரும் முன்னாள் அமைச்சரும் முன்னாள் சட்டப்பேரவைத் தலைவருமான திரு. சி. பா. ஆதித்தனார் அவர்களின் மறைவையொட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி:-

முன்னாள் அமைச்சர் சி. பா. ஆதித்தனார் அவர்கள் 24.5.81ல் இயற்கை எய்தினார் என்ற செய்தியறிந்து ஆழ்ந்த துயருற்றேன். பத்திரிகையுலகில் மகத்தான சாதனைகளை நிகழ்த்திக் காட்டியவர் ஆதித்தனார்.

ஏழை-எளிய மக்கள், குறிப்பாக உழைக்கும் வர்க்கத்தினரும் ஆரம்பக்கல்வி அறிவு பெற்றவர் கூட நாளேட்டைப் படிக்க வேண்டும் என்ற ஆவலை ஏற்படுத்தி அதில் வெற்றியும் பெற்றார். என்றைக்கும் தமிழ்மொழியைப் பாதுகாப்பதில் முன்னணியில் நின்றவர். அமைச்சர் பொறுப்பேற்று நாட்டுக்கு அரும்பணியாற்றியவர்; அயராது உழைத்தவர்; ஆற்றல் மிக்கவர்.

இவ்வாறு சிறந்த குண நலன்களைப் பெற்று விளங்கிய திரு சி. பா. ஆதித்தனார் மறைவு மிகப் பெரிய இழப்பாகும். அவரைப் பிரிந்து துயருறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## உடுமலை நாராயணகவி மறைவு

உடுமலை நாராயணகவி 23.5.81 அன்று மாலை 2.30 மணிக்கு இயற்கை எய்தினார். மறைவு குறித்து மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-

உடுமலை நாராயணகவி அவர்கள் மறைந்த செய்தி கேட்டு வேதனையடைகிறேன். 35 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்த் திரையுலகம் ஒரு புதிய திருப்பத்தைக் காணக் காரணமாக இருந்தவர்கள் மறைந்த கலைவாணர் என். எஸ். கே. அவர்களும், உடுமலை நாராயணகவி அவர்களும்தான்.

சீர்திருத்தக் கருத்துக்களைத் தன்பாட்டில் வடித்துக் கொடுக்க அவற்றைக் கலைவாணர் ஏற்று மகிழ்ந்து தன் குரலில் பாடி மக்களையெல்லாம் சிந்திக்க வைத்து சிரிக்க வைத்தார். அப்படிப்பட்ட சிந்தனைச் செல்வங்களில் ஒன்றான உடுமலை நாராயணகவி அவர்களின் இழப்பை ஈடுகட்ட யாராலும் முடியாது. அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு என் ஆழ்ந்த இரங்கல்.



## பண்ணாராய்ச்சி வித்தகர் மறைவு

பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை ப. சுந்தரேசனார் அவர்கள் 9.6.81ல் மறைவு எய்தினார்.

தமிழிசைக்குப் பெரும் தொண்டு புரிந்த சுந்தரேசனார் அவர்கள் 1914 ஆம் ஆண்டு பிறந்தவர். தமிழ்ப் பண்கள் குறித்து ஆராய்ச்சிகள் செய்த இப்பெருந்தகை பல்வேறு சிறப்பு விருதுகளைப் பெற்றார்.

இசைத் தொண்டே தமது உயிர்த்தொண்டு என்னும் முறையில் பணிபுரிந்த இவ் வித்தகர் அண்மைக் காலத்தில், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் சிலப்பதிகாரத்தைப் பற்றிய இசைவிளக்க நூல் ஒன்றினை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். பணி முடிவுறுவதற்கு முன்னர் அன்னார் மறைவு எய்தியமை, இசை உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அன்னாரது மறைவுக்கு 'தமிழரசு' ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள் வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர் மகளிர் அனைவரும் விரும்பும் அருமை புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம் வகைகள்…அழகார்ந்த ரகங்கள் அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

Licence No. TN/MS(C)/PP-23

பதிவு எண். M. 8676

